விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 07 செவ்வாய்க்கிழமை (22.11.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 339

# தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவுகூர அனுமதியில்லை!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற போரின்போது கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை நினைவுகூருவதற்கு எவராவது முற்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன அறிவித்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்து குற்றங்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் தண்டம்

(கொழும்பு)

வீதி ஒழுங்குகளை மீறுவோரிடம், ஏழு வகையான குற்றச்சாட்டுகளின் கீழ், அபராத தொகையை 25 ஆயிரம் ரூபாய் வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா மற்றும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட போக்குவரத்து தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, காப்புறுதி ஆவணங்கள் இல் 24ஆம் பக்கம் பார்க்க....

## ரவிராஜ் நினைவுக்கல்வெட்டில் ம(ை)றக்கப்பட்டது "மாமனிதர்"

### சமூகவலைத்தளங்களில் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜுக்கு வழங்கப்பட்ட "மாமனிதர்" பட்டத்தை, சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட அவரது உருவ சிலை நினைவுக் கல்வெட்டில் பொறிக்காமை குறித்து பல்வேறு கண்டனங்கள் வெளியாகி 24ஆம் பக்கம் பார்க்க....

## எகிறிய வாசுவுக்கு ரணில் பதிலளிப்பு

(கொழும்பு)

பிரதமர் உடனடியாக பதவி விலக வேண்டும் என நேற்றைய நாடாளுமன்ற அமர்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை விடுத்தார்.

அவரின் கருத்துக்கு பதில் அளித்த பிரதமர் ரணில 23ஆம் பக்கம் பார்க்க....

## மழையுடன் கூடிய காலநிலை தொடரும்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை எதிர்வரும் சில தினங்களுக்கு தொடருமென எதிர்பார்ப்பதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு. ஊவா மற்றும் தென்மாகாணங்

## 2002 # ஊர்காவற்றுறை # த.தே.கூ # தாக்குதல் # இருவர் பலி

### 14 வருடங்களின் பின்னர் வழக்கு விசாரணை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் தேர்தல் பிரசாரத்திற்காக சென்றிருந்த தமிழ தேசியக் கூட்டமைப்பினர் மீது தாக்குதல் நடத்தி இருவரை படுகொலை செய்த வழக்கானது 14 வருடங்களின பின்னர் விசாரணைக்கு எடுத்துக்

இதன் போது இவ் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நால்வரில் இருவர் வெளிநாடுகளிற்கு தபபிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் குறித்த இருவரையும் இலங்கைக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையில் இருக்கும் நாடுகடத்தும்

பொலிஸார் ஊடாக கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் என பொலிஸ்மா அதிபருக்கும், இவ்வாறு வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றமை தொடர்பாக பூரண அறிக்கையை நீதியமைச்சின் செயலாளர் மற்றும் வெளிநாட்டமைச்சின் செயலாளரும் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும்

## 138.3 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் நேற்று காலையுடன் முடிந்த 24 மணி நேரத்தில், 138.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என திருநெல்வேலி வளிமண்டலவியல திணைக்கள பொறுப்பதிகாரி எஸ்.பிரதீ

## போக்குவரத்து குற்றங்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் தண்டம்

(கொழும்பு)

வீதி ஒழுங்குகளை மீறுவோரிடம், ஏழு வகையான குற்றச்சாட்டுகளின் கீழ், அபராத தொகையை 25 ஆயிரம் ரூபாய் வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா மற்றும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட போக்குவரத்து தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, காப்புறுதி ஆவணங்கள் இல் 24ஆம் பக்கம் பார்க்க....

## ரவிராஜ் நினைவுக்கல்வெட்டில் ம(ை)றக்கப்பட்டது "மாமனிதர்"

### சமூகவலைத்தளங்களில் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜுக்கு வழங்கப்பட்ட "மாமனிதர்" பட்டத்தை, சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட அவரது உருவ சிலை நினைவுக் கல்வெட்டில் பொறிக்காமை குறித்து பல்வேறு கண்டனங்கள் வெளியாகி 24ஆம் பக்கம் பார்க்க....

## எகிறிய வாசுவுக்கு ரணில் பதிலளிப்பு

(கொழும்பு)

பிரதமர் உடனடியாக பதவி விலக வேண்டும் என நேற்றைய நாடாளுமன்ற அமர்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை விடுத்தார்.

அவரின் கருத்துக்கு பதில் அளித்த பிரதமர் ரணில 23ஆம் பக்கம் பார்க்க....

## மழையுடன் கூடிய காலநிலை தொடரும்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை எதிர்வரும் சில தினங்களுக்கு தொடருமென எதிர்பார்ப்பதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் தென்மாகாணங்களில் விட்டு 23ஆம் பக்கம் பார்க்க....

## 2002 # ஊர்காவற்றுறை # த.தே.கூ # தாக்குதல் # இருவர் பலி

### 14 வருடங்களின் பின்னர் வழக்கு விசாரணை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் தேர்தல் பிரசாரத்திற்காக சென்றிருந்த தமிழ தேசியக் கூட்டமைப்பினர் மீது தாக்குதல் நடத்தி இருவரை படுகொலை செய்த வழக்கானது 14 வருடங்களின பின்னர் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது இவ் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நால்வரில் இருவர் வெளிநாடுகளிற்கு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் குறித்த இருவரையும் இலங்கைக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையில் இருக்கும் நாடுகடத்தும் ஒப்பந்தத்தை பயன்படுத்தி சர்வதேச பொலிஸார் ஊடாக கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் என பொலிஸ்மா அதிபருக்கும், இவ்வாறு வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றமை தொடர்பாக பூரண அறிக்கையை நீதியமைச்சின் செயலாளர் மற்றும் வெளிநாட்டமைச்சின் செயலாளரும் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் யாழ்ப்பாண 23ஆம் பக்கம் பார்க்க....

## 138.3 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் நேற்று காலையுடன் முடிந்த 24 மணி நேரத்தில், 138.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என திருநெல்வேலி வளிமண்டலவியல திணைக்கள பொறுப்பதிகாரி எஸ்.பிரதீபன் தெரி 24ஆம் பக்கம் பார்க்க....

## 14 இராணுவத்தினருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி பகுதியில் இரு இளைஞர்கள் கடத்தி கொலை செய்யப்பட்ட வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து குற்றச்சாட்டு பத்திரத்தை பெற்று மன்றில் சமர்ப்பிக்கும்படியும் கொலை குற்றம் சாட்டப்பட்ட 14 இராணுவத்தினரையும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைகுக மாறும் யாழ் நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்தரன் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

மட்டுவில் வடக்கை சேர்ந்த செலவரத்தினம் ஜெயசீலன், நாகமணி சௌந்தர 24ஆம் பக்கம் பார்க்க....

## சம்பந்தனின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்!

### வாசஸ்தலம் தேவை என்கிறார் சிறிநேசன்



(யாழ்ப்பாணம்)

கூலிக்கு கொலை செய்வர்களின எண்ணிக்கையும் செயற்பாடுகளும் அதிகரித்துள்ளதால், எதிர்க்கட்சித் தலைவரின் பாதுகாப்பை உறுதிப் படுத்துமாறு 24ஆம் பக்கம் பார்க்க....

## த.ம.பேரவையின் பத்திரிகையாளர் மாநாடு இன்று கொழும்பில்

(கொழும்பு)

தமிழ் மக்கள் பேரவையின் பத்திரிகையாளர் மாநாடு கொழும்பில் இன்று மாலை நடைபெறும்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாடுகள் தொடர்பில் தென்பகுதி மக்களுக்கு தெளிவு படுத்துவதை அடிப்படை 23ஆம் பக்கம் பார்க்க....

## மாகாண முதலமைச்சர்களுடன் ஜனாதிபதி இன்று சந்திப்பு!

### வடக்கு – கிழக்கு முதலமைச்சர்களும் பங்கேற்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று செவ்வாய்க்கிழமை வடக்குக் கிழக்கு உட்பட அனைத்து மாகாணங்களின் முதலமைச்சர்களுடன் விசேட சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று 12 மணிக்கு இடம்பெறவுள்ள இச்சந்திப்பில் மாகாணங்களுக்கான நிதி ஒதுக்கீடு, அபிவிருத்திப் பணிகள் மற்றும் அதிகாரமட்ட நிர்வாகப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல முக்கிய விடயங் 24ஆம் பக்கம் பார்க்க....

## இனப்பிரச்சினை தீர்க்கப்படாதவரை வேறுபிரச்சினைகளும் தீர்க்கப்படாது

### ஆட்சியாளர்கள் இழுத்தடிப்பதாக மனோ சாடல்

(கொழும்பு)


இலங்கையின் இனப்பிரச்சினை தர்க்கப்படாதவரை, நாட்டில் வேறெந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படப் போவதில்லை என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்பு ஜானகி விடுதியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான மக்கள் ஒன்றியத்தினை 24ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விற்பனை நிலையத்தில் பொருட்கள் திருட்டு!



(கரணவாய்)

பருத்தித்துறை தம்பசிட்டிப் பகுதியில் உள்ள பலசரக்கு விற்பனை நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கடையினைப் பூட்டிவிட்டு சென்ற வர்த்தகர் நேற்று திங்கட்கிழமை கடையினைத் திறக்க வந்த போதே திருட்டுப் போனமை தெரிய வந்தது.

கடையின் ஜன்னலை உடைத்து உட்சென்ற திருடர்கள் பால்மா உள்ளிட்ட 40ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்களை திருடியுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (செ-60)

# கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்படுகின்றன

(மண்டைதீவு)

மண்டைதீவில் உள்ள கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் பணி நேற்றையதினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வேலணைப் பிரதேச செயலரின் உத்தரவுக்கு அமைய கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாறு பிடிக்கப்படும் மாடுகள் பயனாளிகளுக்கு பகிர்ந்து வழங்கப்படும் எனவும் தெரிய வருகிறது. (ந)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**வேலையாட்கள் தேவை**
யாழ்.நகரில் உள்ள அச்சகத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. (புத்தகம் கட்டுநர்) (Binding) பழக விரும்புவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:-0767693903
(த-6452)

# அனைத்து பதவிகளையும் துறந்த நாள் அரசியல் வாழ்வில் மிக சிறப்பான நாள்!

## உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்திய ஜனாதிபதி



(கொழும்பு)

இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் அனைத்து பதவிகளை துறந்து அரசாங்கத்திலிருந்து வெளியேறிய இன்றைய நாள் (நேற்று) என்னுடைய வாழ்வில் சிறப்பானதொரு நாளாகுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மகாவலி அதிகார சபையின் புதிய நியமனங்கள் மற்றும் பதவி உயர்வு பெற்ற அலுவலர்களுடன் நேற்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத அனைவரையும் ஒரேவிதமாக நடத்துவது ஒரு நாட்டின் ஜனாதிபதியின் பொறுப்பாகும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சுயாதீனம், பக்கச்சார்பின்மை மற்றும் நடுநிலையாக செயற்படுதல் ஜனாதிபதிக்குரிய பொறுப்பாகும் எனவும் தெரிவித்தார்.

அபிவிருத்தியின்போது நாட்டின் ஒரு பகுதியை கைவிட்டதன் பெறுபேறே போர்வரை நீண்டு சென்றதாக தெரிவித்த ஜனாதிபதி, அபிவிருத்தி செயற்பாடுகளின் ஆரம்பத்தில் இருந்தே அவற்றை நியாயமாக நாட்டுக்காக நிறைவேற்றியிருந்தால் மூன்று தசாப்தகால போரை அனுபவிக்கவேண்டி இருந்திருக்காது எனக் குறிப்பிட்டார். தனிப்பட்ட ரீதியிலன்றி நாட்டுக்கும் மக்களுக்கும் முன்னுரிமை வழங்கி நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ள மக்களுக்காக சேவையாற்றுவது அனைத்து அரச அலுவலர்களின் பொறுப்பாகும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கிய எதிர்காலமான் மகாவலி அதிகார சபை, தனது பணிப் பொறுப்புக்களை புதிய நோக்குடனும் புதிய தோற்றத்துடனும் முன்கொண்டு செல்லவேண்டுமென குறிப்பிட்ட ஜனாதிபதி இன்றைய நாளுக்காவும், எதிர்கால தலைமுறையினருக்காகவும் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அனைத்து அலுவலர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் மேலும் தெரிவித்தார்.

மகாவலி அதிகார சபையின் ஆட்சேர்ப்புச் செய்யும் ஒழுங்குவிதிகள், அதிகார சபையில் சேவையாற்றும் ஆளணியினருக்கு அநீதி ஏற்படாதவாறு திருத்தம் செய்யப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் உதய ஆர் செனவிரத்ன, மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்குபற்றினர். (செ-11)

**இதயம் கனக்கும் 20 ஆண்டுகள்**

மலர்வு
14 - 07 - 1969

உதிர்வு
22 - 11 - 1996



**கணபதி பரமானந்தம் (இராசா)**

**நெஞ்சம் மறக்குமா? உன் நினைவுதான் அழியுமா?**

பூத்துக் குலுங்கும் பசும் சோலை தனிலே-உன்னைக்
காத்து வளர்த்தோம் எங்கள் கண்கள் குளிர்ந்திட
வீட்டிலே நீ செய்யும் விருந்தோம்பல் தனை-எந்த
ஏட்டிலும் காணோம் மனம் இறுமாந்திருந்தோம்

காட்டிக் கொடுத்த அந்தக் கயவர்கள் கூட்டம்-இந்த
நாட்டினில் இருப்பது அன்று நாம் செய்த தவறா?
பூட்டிக் கிடக்கும் எம் இதயத்தைத் திறந்து-அன்பை
நாட்டி வளர்ப்போம் உன் நினைவினில் திழைப்போம்

எங்களின் இரத்தம் எங்களின் சொந்தம்-என்று
தங்களின் மனத்திலே தாகத்தை வளர்த்தவர்
பிஞ்சினில் நீ செய்த பேரன்புச் செயல்களை-எங்கள்
நெஞ்சம் மறக்குமா? உன் நினைவுதான் அழியுமா?

வேரம் மூளாய் உன் நினைவில் உன் குடும்பத்தினர்
(6657)

# உயர் தொழில்நுட்பவியல் நிறுவன 13ஆவது பட்டமளிப்பு விழா இன்று

## 299 மாணவர்கள் பட்டம் பெறுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவன 13ஆவது பட்டமளிப்பு வைபவம் இன்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்றது. இதில் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினை சேர்ந்த 299 மாணவர்கள் பல்வேறுதுறை ரீதியாக பட்டம் பெறுகின்றனர்.

யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர்களில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (Higher National Diploma in Accountancy) – HNDA பட்டத்தினை 110 பேரும், உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (Higher National Diploma in Management) - HNDM பட்டத்தினை 42 பேரும், உயர் தேசிய தகவல் தொழில்நுட்பவியல் டிப்ளோமா (Higher National Diploma in Information Technology) – HNDIT பட்டத்தினை 44 பேரும், உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா பட்டத்தினை (Higher National Diploma in English) –HNDE பட்டத்தினை 49 பேரும், உயர் தேசிய வணிக கற்கை டிப்ளோமா (Higher National Diploma in Business Studies) HNDBS பட்டத்தினை ஒருவரும், உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) (Higher National Diploma in Engineering (Civil) - HNDE (Civil) – 30 பேரும், உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (மின்னியல்), Higher National Diploma in Engineering (Electrical) - HNDE (Electrical) – 11 பேரும், உயர் தேசிய சுற்றுலாத்துறை மற்றும் முகாமைத்துவ டிப்ளோமா Higher National Diploma in Tourism & Hospitality Management - HNDTHM- 08 பேருடன் மேலும் நால்வர் பட்டத்தினை பெறுகின்றனர். (செ)

# ஹயஸ் மோதியதில் பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் நடந்து சென்ற பெண் மீது பின்னால் வந்த ஹயஸ் வாகனம் மோதியதில் அப் பெண் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் உரும்பிராய் சந்தியிலிருந்து கோப்பாய் நோக்கி செல்லும் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் உரும்பிராய் வடக்கினை சேர்ந்த தங்கராசா சந்திராதேவி (வயது 65) என்ற குடும்ப பெண்னே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (செ-30)

# புதிய அரசியலமைப்பை குழப்ப பௌத்த பிக்குகள் களமிறக்கம்

## விக்கிரமபாகு கருணாரட்ன எச்சரிக்கை

(கொழும்பு)

**புதிய அரசியல் அமைப்பினை தடுப்பதற்கும் அதனை குழப்புவதற்குமான நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக இந்த விடயத்தில் பௌத்த பிக்குகள் களமிறக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன, இந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் எதனை அடையக்கூடியதாக இருக்கின்றதோ அதனை பெற்றுக்கொள்ள வேண்டும். பின்னர் அதிலிருந்து முன்னேறி செல்லலாம் எனவும் தெரிவித்தார்.**

படுகொலை செய்யப்பட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜின் பத்தாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வானது நேற்றுமுன்தினம் யாழ். சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாம் இக்கட்டான காலகட்டத்தில் இருக்கின்றோம். புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் தொடர்பான கலந்துரையாடல்களும் அதற்கான நடவடிக்கைகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அந்தவகையில் இத்தகைய புதிய அரசியலமைப்பு திட்டத்தை குழப்புவதற்கும் அதனை தடுத்து நிறுத்துவதற்குமான நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக இக் காரியத்தில் பௌத்த பிக்குகள் களமிறக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் அதிர்ஷ்டவசமாக சிங்கள மக்கள் இது தொடர்பாக செவிசாய்க்காமல் இருக்கின்றார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் பேசி நாட்டை சமாதான சூழலில் வைத்திருப்பதற்கு முயற்சித்திருந்தார்.

பிரபாகரன் அப்போது நியமிக்கப்பட்டிருந்த அரசாங்கத்தை தொடர்ந்து கொண்டு செல்வதற்கும் அந்த அரசாங்கத்துடன் இணங்கி செல்வதற்கும் 26 குறிப்புக்கள் அடங்கிய நிபந்தனை அறிக்கையை கொடுத்திருந்தார். அந்த அறிக் கையை சிங்களத்தில் மொழி பெயர்க்கவும் அது தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படவேயில்லை.

இதேபோன்று சுனாமி தாக்கிய போதும் அது தொடர்பான முன்மொழிவையும் அனுப்பியிருந்தார். இதன்போது மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது கூட்டத்தினர் உயர்நீதிமன்றில் தடுப்பதற்கான உத்தரவொன்றை பெற்றுக்கொண்டிருந்தனர். இதன் பின்னர் நாட்டை யுத்தத்திற்கு இழுத்து சென்றனர். இதனால் என்ன நடந்தது? வடக்கு கிழக்கில் பல்லாயிரக் கணக்கான மக்கள் அடிமட்டத்திற்கு கொண்டு சென்றதுடன் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் காணாமல் போயும் பலியாகியும் இருந்தனர். இப்போது மக்கள் யுத்தம் எப்படி என்று உணர தலைப்பட்டு விட்டார்கள்.

ஆனால் தற்போது நல்லதொரு சந்தர்ப்பம். தற்போதைய முன்மொழிவில் காணி பொலிஸ் அதிகாரங்கள் கிடைக்கும் என சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இது முன்னேற்றகரமானதாக அமையும். ஆனாலும் நாம் உண்மையில் எதிர்பார்த்தது அதுவல்ல. சமத்துவம் சுயநிர்ணயம், தன்னாட்சி இதனையே எதிர்பார்த்தோம். எனினும் இந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் எதனை அடையக்கூடியதாக இருக்கின்றதோ? எதனை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றதோ? அதனை பெற்றுக்கொள்ள வேண்டும். பின்னர் அதிலிருந்து முன்னேறி செல்லலாம். அத்தகைய நடவடிக்கைதான் ரவிராஜ் போன்றவர்களுக்கும் தமிழரின் விடுதலைக்காக உயிர்நீத்த வீரர்களுக்கும் செய்யும் மரியாதையும் கௌரவுமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## இலங்கையில் மே 12 ஆம் திகதி ஐ.நாவின் வெசாக் நாள் நிகழ்வு

### மோடியும் பங்கேற்கிறார்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்கும், ஐ.நா. வெசாக் நாள் நிகழ்வுகள் அடுத்த ஆண்டுமே12ஆம்திகதிகொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெறும் என்று நீதி மற் றும் புத்தசாசன அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரி வித்தார்.

ஐ.நா. வெசாக் நாள் அதிகாரபூர்வ நிகழ்வுகள் தொடர்பாக விளக்கமளிப்பதற்காக, கண்டியில் மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களை நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ நேற்று முன்தினம் சந்தித்தார். இதற்குப் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

இலங்கையில் நடத்தப்படவுள்ள ஐ.நா. வெசாக் நாள் நிகழ்வுகள் தொடர்பாக இரண்டு மகாநாயக்கர்களிடமும் விளக்கமளித்துள்ளேன்.

கொழும்பில்அடுத்தஆண்டு மே 12ஆம் திகதி நடக்கவுள்ள ஐ.நா.வெசாக் நாள் நிகழ்வில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிரதம விருந்தினராகப் பங்கேற்பார்.

இந்த நிகழ்வில் உலகின் பல நாடுகளில் இருந்தும், அரசியல் மற்றும் பௌத்த மதத் தலைவர்களை உள்ளடக்கிய 2000 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

நாடாளுமன்ற வளாகம் அருகே, தியவன்ன ஓயாவில் அமைக்கப்படும் சிறப்பு வெசாக் வலயத்தில் தொடக்க நிகழ்வுகள் இடம்பெறும். கண்டியில் இந்த நிகழ்வுகள் நிறைவடையும்.

ஐ.நா. வெசாக் நாள் நிகழ்வு, பௌத்த நாடுகளில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த முறை இலங்கைக்கு இந்த வாய்ப்புக் கிடைக்கவுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, புதிய அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்கான முன்னுரிமை தொடர்ந்து வழங்கப்படும் என்றும் அதில் எந்த மாற்றமும் செய்யப்படாது என்றும் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7-10)

## 7 இராஜாங்க அமைச்சர்கள் அதிருப்தியில்

நல்லாட்சி அரசாங்கத்தில் உள்ள ஏழு இராஜாங்க அமைச்சர்கள், தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் மற்றும் பணிகள் இதுவரையில் ஒப்படைக்கப்படவில்லை என அதிருப்தி வெளியிட்டுள்ளனர். இதில் சிலர் தமது பதவிகளை இராஜினாமா செய்யவும் திட்டமிட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் அமைச்சர் வசந்த சேனாநாயக்க தாம் பதவியை இராஜினாமா செய்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அறிவித்திருந்தார். எனினும் இந்த பதவி விலகலை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை, ஜனாதிபதி செயலாளர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரை தொடர்புபடுத்தி பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி கூறியிருந்தார்.

மேலும் இராஜாங்க அமைச்சர்களான பாலித ரங்கே பண்டார, வசந்த அலுவிஹாரே, திலிப் வெதாரச்சி, சம்பிக்க பிரேமதாச, வீ.இராதாகிருஸ்ணன் மற்றும் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் தமக்கு உரிய முறையில் பொறுப்புக்கள் வழங்கப்படவில்லை என குற்றம் சுமத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## நிதிமோசடி விசாரணைப் பிரிவின் கடமைகளில் தலையிடமாட்டேன்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவினரது கடமைகளில் தான் எந்த நிலையிலும் தலையிட மாட்டேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அனைத்து முறைப்பாடுகளும் பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது என ரணில் தெரிவித்தார். நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரணில் இதனைத் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முறைப்பாடுகளை சேகரிக்கும் குழுவினர்.பின்னர் முறைப்பாடுகளை பொலிஸாரிடம் ஒப்படைத்து விடுவர் என ரணில் தெரிவித்தார்.

புதிய முறைப்பாடுகள் நிதி மோசடி விசாரணை பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வுபிரிவில் பதிவு செய்யப்பட்டாலும் அந்த முறைப்பாடுகள் முறைப்பாடு சேகரிக்கும் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், அரசாங்கத்திற்கும் அறிவிக்கப்படும். பின்னர் குறித்த முறைப் பாடுகள் பொலிஸாருக்கு அனுப்பிவைக்கப்படும் என ரணில் மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7-10)

## 6 வகையான குற்றச்சாட்டுக்களுக்கான அபராதம் ரூ.25,000 வரை அதிகரிப்பு

வாகன சாரதிகளுக்கு எதிரான ஆறு வகையான குற்றச்சாட்டுக்களுக்கான அபராதத்தை 25,000 ரூபா வரை அதிகரிக்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனைத் தெரிவித்தார்.

இதன்படி, போதையில் வாகனம் செலுத்துதல், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்துதல், பாதுகாப்பற்ற வகையில் ரயில் பாதைகளில் பயணித்தல், காப்புறுதி ஆவணங்கள் இல்லாமை மற்றும் அதிக வேகத்துடன் வாகனம் செலுத்துதல் போன்ற ஆறு வகையான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட குழுவினருடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கெமுனு விஜேரத்ன மேலும் தெரிவித்தார். (இ-7-10)


## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஜாதிக ஹெல உறுமய கட்சியினர்

ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளரும் ஊழல், மோசடிக்கு எதிரான முன்னணியின் ஆலோசகருமான பேராசிரியர் நிஷாந்த வர்ணசிங்க நேற்று ஊழல், மோசடி தடுப்பு விசாரணை ஆணைக்குழுவிடம் முறைப்பாடொன்றை செய்துள்ளார். ஊழல், மோசடிக்கு எதிரான முன்னணியின்தலைவரான உலபனே சுமங்கல தேரருடன் இணைந்து இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

கோப் குழுவை அடிப்படையாகக் கொண்டு இந்த முறைப்பாட்டை வழங்கியிருப்பதாகவும் மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை, முறிகள் விற்பனை மோசடி தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இந்த முறைப்பாட்டில் முன்வைத்திருப்பதாக நிஷாந்த வர்ணசிங்க தெரிவித்தார். (இ-7-10)

## ஏ.ரி.பி உலக டென்னிஸ் சம்பியன்ஷிப்

# சம்பியனானார் அன்டி முர்ரே



ஏ.ரி.பி. உலக டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் அன்டி முர்ரே 6-3, 6-4 என்ற நேர்செட் கணக்கில் 5 முறை பட்டம் வென்ற ஜோகோவிச்சை எளிதில் வீழ்த்தி சம்பியன் பட்டம் பெற்றார்.

உலகின் 'ரொப் 8' வீரர்கள் பங்கேற்ற ஏ.ரி.பி. உலக டென்னிஸ் சம்பியன் போட்டி லண்டனில் நடந்தது.

இதன் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் இரவு நடந்தது. இதில் உலகின் முதல்நிலை வீரரான அன்டி முர்ரே (இங்கிலாந்து)- இரண்டாம் நிலை வீரரான ஜோகோவிச் (செர்பியா) மோதினர்.

இதில் முர்ரே 6-3, 6-4 என்ற நேர்செட் கணக்கில் 5 முறை பட்டம் வென்ற ஜோகோவிச்சை எளிதில் வீழ்த்தி சம்பியன் பட்டம் பெற்றார். இந்த வெற்றி மூலம் அவர் 'நம்பர் வன்' இடத்தை தக்க வைத்துக் கொண்டார்.

ஜோகோவிச்சிடம் கடைசியாக ஜூன் 5ஆம் திகதி பிரெஞ்சு ஓபன் இறுதிப் போட்டியில் முர்ரே தோற்றார். அதற்கு சொந்த மண்ணில் வைத்து இறுதியாட்டத்தில் பதிலடி கொடுத்தார் முர்ரே.

இந்தத் தோல்வியால் ஜோகோவிச்சால் மீண்டும் 'நம்பர் வன்' இடத்தை பிடிக்க இயலாமல் போனது. (க)

## முடி முக்கியமா? வெற்றி முக்கியமா?

# முடியை வெட்டியெறிந்த வீராங்கனை



சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் ரஷ்ய வீராங்கனை குஸ்னெட்சோவா வெற்றி பெறுவதற்காக தனது தலை முடியை வெட்டியெடுத்த காட்சி அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

மேற்படி போட்டியின் போது குஸ்னெட்சோவாவின் செய்கை அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது.

போட்டிக்கு முன்னதாக குஸ்டென்சோவா நடுவரிடம் கத்தரிக்கோலை வாங்கிக் கொண்டு வெளியேறினார். பின்னர் தனது இருகையில் இருந்து கொண்டு பின்பக்க முடியை வெட்டி வீசி விட்டு களம் இறங்கினார்.

இது குறித்து அவர் கூறுகையில், எனது தலைமுடி எனக்கு மிகவும் தொந்தரவாக இருந்தது. அதை எனது ஹேர் பேண்டில் கட்டி வைக்க முயற்சித்தேன்.

எனது முடி தடிமனாகவும், கனமாகவும் இருந்ததால் அதை என்னால் கட்டி வைக்க முடியவில்லை.

இப்போது முடி முக்கியமா? அல்லது வெற்றி முக்கியமா? எது முக்கியம் என பார்த்தேன். முடி பிறகு கூட வளர்ந்துவிடும். ஆனால் இந்தப் போட்டி அப்படி இல்லை. இதனால் முடியை வெட்டி விட்டதாக கூறியுள்ளார். (செ)

# பாகிஸ்தான் மகளிர் அணியை வெள்ளையடித்தது நியூசிலாந்து

பாகிஸ்தான் மகளிர் அணிக்கு எதிரான 5ஆவது ஒரு நாள் போட்டியிலும் நியூசிலாந்து மகளிர் அணி வெற்றி பெற்றது. இப்போட்டியில் அவ்வணி 69 பந்துகள் மீதமிருக்கையில் 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இவ்வெற்றி மூலம் நியூசிலாந்து மகளிர அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை முழுமையாக சுவீகரித்து பாகிஸ்தான் மகளிர் அணியை வெள்ளையடித்தது.

பாகிஸ்தான் - நியூசிலாந்து மகளிர அணிகள் மோதிய 5ஆவது ஒரு நாள கிரிக்கெட் போட்டி நேற்றுமுன தினம் நெல்சனில் நடைபெற்றது.

இப்போட்டியில்முதலில்துடுப்பெடுதாடிய பாகிஸ்தான் மகளிர் அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 220 ஓட்டங்களை எடுத்தது.

ஆயிஷா ஜாபர், ஜாவரியா கான் தலா 50 ஓட்டங்கள் எடுத்தனர்.

பநதுவீச்சில் நியூசிலாந்து அணி சார்பில் நியூட்டன் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

221 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 38.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 223 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தொடக்க வீராங்கனையும், அணித் தலைவியுமான சதர் வெயிட் சதம் 23 ஓட்டங்கள் குவித்தார்.

இவ்வெற்றி மூலம் நியூசிலாந்து மகளிா அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 5:0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பறறி பாகிஸ்தானை வெள்ளையடித்தது. (செ)



## வலைப்பந்தாட்ட போட்டிக்கு

# விண்ணப்பிக்குக

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வட மாகாண ரீதியிலான வலைப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் 077 - 394 6463 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை மேற்கொண்டு 24ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இத்தொடரின் அரையிறுதி, இறுதிப் போட்டிகள்எதிர்வரும்சனிக்கிழமை மின்னொளியில் நடைபெறும்.

சம்பியனாகும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 15 ஆயிரம் ரூபாய் பணப்பரிசும் இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு 10 ஆயிரம் ரூபாய் பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது. (க)

## தென்னாபிரிக்காவுடனான தொடர் தோல்வியின் எதிரொலி

# 32 வருடங்களுக்கு பிறகு ஆஸி அணியில் மாற்றம்



டு பிளசி தலைமையிலான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம செய்து வீளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 3 டெஸ்ட் போட்டித் தொடரில் தென்னாபிரிக்கா முதல் இரண்டு டெஸ்டிலும் வென்று தொடரை கைப்பற்றியது.

அவுஸ்திரேலிய மண்ணில் அந்த அணி தொடர்ச்சியாக 3 ஆவது முறையாக தொடரை வென்று புதிய வரலாறு படைத்தது.

பெர்த்தில் நடந்த முதல் டெஸ்டில் 177 ஓட்டங்களாலும் ஹொபர்ட்டில் இன்னிங்ஸ் மற்றும் 80 ஓட்டங்கள் வத்தியாசத்திலும் அவுஸ்திரேலயா மோசமாக தோற்றது. இரு அணிகள் மோதும் 3ஆவது மற்றும கடைசி டெஸ்ட் போட்டி வருகிற 24 ஆம் திகதி அடிலெய்டில் ஆரம்பமாகின்றது.

இந்த போட்டிக்கான அவுஸ்திரேலிய அணியில் அதிரடி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மோசமான தோலவி காரணமாக ஜோ பேர்ன்ஸ், அடம் வோஜஸ், பெர்குசன், பீட்டர் நெவில், ஜோ மென்னி ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய இடைக்காலதேர்வு குழு தலைவர் டிரெவர் ஹோன்ஸ் இந்த அதிரடியான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

மேட்ரென்ஷா, பீட்டர் ஹேண்ட்ஸ காம்ப், நிக் மேடின்சன் ஆகிய 3 துடுபபாட்ட வீர்களுக்கு வாய்ப்பு கிடைத்துளளது. இந்த 3 பேருமே டெஸ்ட் போட்டிக்கு அறிமுக வீரர்கள் ஆவார்கள்.

வேகப்பந்து வீரர்கள் சாயெர்ஸ், ஜேக்சன் பேர்ட், விக்கெட் காப்பாளா மத்யூ வேட் ஆகியோருக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

1984ஆம் ஆண்டுக்கு பிறகு அவுஸ்திரேலிய அணியில் 6 வீரர்கள் மாற்றம் செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும். (செ)

# மழை வெள்ளத்தால் அசௌகரியம்

யாழ்.பேருந்து நிலையம் ஓரமாக காணப்படும் கடைத் தொகுதிகளில் மழை நீர் வடிந்தோடாமல் தேங்கி நிற்பதால் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக கடை உரிமையாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் கடந்த மூன்று நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக பல இடங்களில் மழை நீர் தேங்கியுள்ளது.

யாழ்.பேருந்து நிலைய ஓரமாக காணப்படும் கடைத் தொகுதி பக்கமாக வெள்ள நீர் வடிந்து ஓடாமல் பெருமளவில் தேங்கி காணப்படுவதால் அங்கு சுகாதார சீர்கேடுகள் ஏற்படலாம் என அச்சம் வெளியிடப்படுகிறது.

தினமும் ஆயிரக்கணக்கானோர் மேற்படி கடைத் தொகுதிக்கு வருவதால் தாம் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும் கடை உரிமையாளர்கள்கவலைவெளியிட்டுள்ளனர்.

மேலும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து வெள்ள நீரை அப்புறப்படுத்தவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (செ)

# இலஞ்ச,ஊழல் விசாரணை ஆணைக்குழுக்களை மாகாண மட்டங்களிலும் விஸ்தரித்தல் வேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்றில் வலியுறுத்து

(கொழும்பு)

இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய விசாரணைகள் ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்டுள்ள பல முறைப்பாடுகள் குறித்து விசாரணை அறிக்கைகள் பல இன்னும் முடிவுறுத்தப்படவில்லை எனத் தெரிய வருகிறது. அதே நேரம் அறிக்கைகள் சில பூரணப்படுத்தப்பட்ட நிலையிலும், அவை தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகள் தாமதமாகி வருவதாகவும் கூறப்படுகின்றது. இது தொடர்பில் உண்மை நிலை வெளிப்படுத்தப்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) யின் செயலாளர் நாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், அரசியல் காழ்ப் புணர்ச்சிகள், உள் நோக்கங்கள் காரணமாகவும், குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்ற நிலைமைகளும் காணப்படுகின்றன. இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றபோது, குற்றஞ் சுமத்தப்படுகின்றவர் சமூகத்தில் தவறான கண்ணோட்டத்திற்கு ஆளாக வேண்டி ஏற்படுகின்றது.

எனவே, சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகள் தொடர்பில் உரிய விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், அக் குற்றச்சாட்டு பொய்யானது எனக் காணப்பட்டால், அக் குற்றம் சுமத்தப்பட்டவருக்கு நிவாரணங்களை வழங்கவும், இலஞ்சம் மற்றும் ஊழல்கள் தொடர்பான சட்டத்தில் பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்துவோருக்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டியதாக குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தின் பிரகாரம் குற்றச்சாட்டினை சுமத்தியவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் வேண்டும் என நான் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன்.

அதேநேரம், நாட்டில் இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகளை தடுக்கும் நோக்கிலும், அவை தொடர்பான விசாரணைகள் குறித்த கால தாமதங்களை தவிர்க்கும் வகையிலும், பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய பொருளாதார மற்றும் கால விரயங்களையும், சிரமங்களையும் தவிர்க்கும் வகையிலும் மாகாண மட்டங்களிலும் இலஞ்ச, ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவை விஸ்தரிக்க வேண்டும் எனவும் வலியுறுத்த விரும்புகின்றேன் என. அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## பேருந்துக்காக காத்திருந்தவர்களை திடீரென மோதித் தள்ளியது ஆட்டோ




பேருந்திற்காக காத்திருந்தவர்களை எதிர்ப்பக்கமாக வந்த ஆட்டோ மோதித்தள்ளியதில் நால்வர் படுகாயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை (21.11.2016) நண்பகல் 12 மணியளவில் மந்திகை பேருந்து தரிப்பிட நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் வீரபத்திரர் கோவிலடி புலோலி தெற்கைச் சேர்ந்த கதிரவேல் யோகராசா (வயது-55),வரணி வடக்கைச் சேர்ந்த தம்பு உருத்திரமூர்த்தி (வயது-57), கடுகம்பன் புலோலி தெற்கை சேர்ந்த சுப்பையா சிவனேஸ்வரன் (வயது-52),அந்தரான் கரணவாய் மேற்கைச் சேர்ந்த செல்லையா தங்கராசா (வய்து-68) என்போர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

விபத்து இடம்பெற்ற பகுதியில் இருந்து பாதணி, கைத்தொலைபேசி, மூக்குக் கண்ணாடி என்பனவற்றையும் பொலிஸார் மீட்டனர். வைத்தியசாலையில் கிளினிக் முடிவடைந்ததன் பின்னர் பேருந்திற்காக காத்திருந்தவர்களே படுகாயங்களுக்குள்ளாகினர்.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். ஆட்டோ சாரதியும் முகத்தில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (இ-60)

# பசுமைப் பல்கலையில் மாணவர்கள் அனுமதி

புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, அண்மையில் திறந்து வைக்கப்பட்ட ஹோமாகமவில் அமைந்துள்ள தெற்காசியாவின் முதலாவது பசுமைப் பல்கலைக் கழகத்தில் நேற்று முதல் மாணவர்களை அனுமதிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பல்கலைக்கழகத்திற்கு 8000 மாணவர்களை அனுமதிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சித் துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகம, பிற்றிபனவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பசுமைப் பல்கலைக்கழகம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த மாதம் 26 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.



மேலும், எதிர்காலத்தில் முப்பதாயிரம் மாணவர்கள் ஒரேநேரத்தில் கல்வி கற்கக் கூடியவகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பல்கலைக்கழகம் தெற்காசியாவின் முதலாவது பசுமைப் பல்கலைக்கழகம் ஆகும்.

அதிநவீன வசதிகளைக் கொண்ட இந்த பசுமைப் பல்கலைக்கழகமானது இந்த நாட்டின் கல்வித்துறையில் புதிய மாற்றத்தையும் புதிய பயணத்தின் ஆரம்பத்தையும் குறிக்கின்றது. ஹோமாகம, பிற்றிபன பிரதேசத்தில் 26 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த பசுமைப் பல்கலைக்கழகம் பத்து பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)


கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலையின் பழைய மாணவனும் எமது பாடசாலையின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டு பல அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருபவருமான திரு உ.பரராஜசேகரம் அவர்களின் அன்புச் சகோதரி

அமரர் கோகிலாம்பாள் உமாபதிசிவம்

(அவுஸ்திரேலியா)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(6658)

பாடசாலைச் சமூகம்,
யா/கீரிமலை நகுலேஸ்வர ம.வி, காங்கேசன்துறை.


## இராசி பலன்

22.11.2016
(கார்த்திகை 07, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
அட்டமி காலை 7.53 மணிக்கு
மகம் முற்பகல் 10.41 மணிவரை
சுபநேரம் 10.40-12.10 மணிவரை
இராகுகாலம் 3.10-4.40 மணிவரை
அட்டமி- நவமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம், அவிட்டம் | | |
| செவ் | | | சந் ராகு |
| சுக் | சூரி புத சனி | | குரு |

**மீனம்** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், தேகநலனில் முன்னேற்றம் காண்பீர்கள், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**மேடம்** பிள்ளைகள் குடும்ப பொறுப் புணர்ந்து நடந்து கொள்வர், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**இடபம்** தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்திதரும்.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப் படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்ச்சிகலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், குடும்பத்தில் சில முரண்பாடுகள் ஏற்படலாம்.

**சிம்மம்** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பச் சுமை கூடும் நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**தனுசு** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சேமிப்பு உயரும், எடுத்த காரியங்கள் கைகூடும்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், தொழில் முன்னேற்றகரமாக அமையும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி** சுப விரயங்கள் கூடும் நாள், பயணங்களால் அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம்.







தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் பத்தாம் ஆண்டு நினைவு தினமும் உருவச் சிலை திறப்பு விழாவும் நேற்று முன்தினம் சாவகச்சேரியில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, ரவிராஜின் தாயார், மனைவி, சகோதரி மற்றும் மகள் ஆகியோர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள் :- உ.சாளின்)

# அமரர் ஆ.சி.நடராஜாவின் 5ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஆ.சி.நடராஜாவின் 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் குரும்பசிட்டி பொதுநோக்கு மண்டபத்தில் (கலைஞானி கலையரங்கம்) இடம்பெறும்.

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொ.தங்கராசா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேச சபையின் செயலாளர் இ.பகீரதன், சுன்னாகம் இலங்கை மின்சார சபையின் மின் அத்தியட்சகர் க.நாவேந்தன், கௌரவ விருந்தினர்களாக தினக்குரல் கருணைப் பாலத்தின் பொருளாளர் எஸ்.சுஜீவன், குரும்பசிட்டி கிராம அலுவலர் க.ஜெயவிந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சானது பிரதேச கலாசார மத்திய நிலையங்களின் மூலமாக வெவ்வேறு கலை, மொழித்திறன் சார்ந்த வகுப்புக்களை வருடந்தோறும் நடத்தி வருகின்றது.

இதற்கமைவாக பருத்தித்துறை பிரதேச கலாசார மத்திய நிலையமானது 2017 ஆம் ஆண்டுக்கான இசை, நடனம், சித்திரம், கிராமியக் கலைகள், யோகாசனம் மற்றும் ஆங்கிலம், சிங்களம் ஆகிய பயிற்சி வகுப்புக்களைத் தொடர்ந்து நடத்தவுள்ளது. இதற்காக தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் வடமராட்சி - வடக்கு பிரதேசத்தினுள் வசிப்பவர்களாக இருக்க வேண்டும். மேலும் தமது பெயர், விலாசம், பிறந்த திகதி, வயது முகவரி, தொலைபேசி இலக்கம், கல்வி, துறைசார்ந்த தகைமை போன்ற சுய விபரங்கள் அடங்கிய தமது விண்ணப்பத்தினை எதிர்வரும் 30.11.2016 ஆம் திகதி புதன் கிழமைக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். நேர்முகத்தேர்வின் மூலம் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவர். (தொடர்பு இல. 077 669 6019) என பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர்.ரி.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (இ-3)

# வாழ்வாதார உதவி வழங்கல்



(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு கருணை உள்ளம் சமூக சேவைகள் அமைப்பினூடாக வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வுகள் நேற்று முன்தினம் தும்பளையில் கருணை உள்ளம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கருணை உள்ளம் அமைப்பின் செயலாளர் திருமதி க.ஜெனிஸ்ரனும், வட மாகாண சுகாதார அமைச்சரின் இணைப்பாளர் பா.சிந்துஜனும் கலந்து சிறப்பித்ததுடன் மாற்றுத் திறனாளிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (இ-9)

# சைவசமயத்தைப் பாதுகாக்க மாவட்டம் தோறும் ஆதீனம்

## சிவசேனையின் தலைவர் அறிவிப்பு



இந்து மக்களை சரியான முறையில் வழிநடத்தி செல்லவும் சைவசமயத்தை பாதுகாக்கவும், மாவட்டங்கள் தோறும் ஆதீனம் அமைக்கப்படவுள்ளதாக சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

அதன் முதற்கட்டமாக எதிர்வரும் கார்த்திகை விளக்கீடு தினத்தன்று மன்னார் சுந்தரர் ஆதீனம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

சிவசேனை அமைப்பின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமாகாணத்தில் 2 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள மன்னார் மாவட்டத்தில் 56 ஆயிரம் கிறிஸ்தவர்களும் 30 ஆயிரம் இந்துக்களும் 17 ஆயிரம் முஸ்லிம்களும் 2 ஆயிரம் சிங்களவர்களும் வாழ்கிறார்கள்.

அங்கு அதிகளவானவர்கள் தமிழ் பேசுகிறவர்கள்.

மன்னார் முழுமையான இந்துக்களின் மாவட்டமாக 400 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தது. திருக்கேதீஸ்வர பெருமான் கோவில் 5 ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த கோவில் தற்போது கிறிஸ்தவ பெரும் பான்மை பகுதியாக மாற்றப்பட்டுள்ளது.

இந்துக்களை கிறிஸ்தவர்களாகவும் இஸ்லாமியராகவும் மாற்றும் பெரும் முயற்சி நடைபெற்று வருகிறது. இந்து கிராமங்களை கிறிஸ்தவ, பௌத்த கிராமங்களாக மாற்றுகின்ற கொடுமையான சூழலை நாம் சந்தித்துள்ளோம்.

இதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. அங்குள்ள 26 ஆயிரம் இந்துக்கள் இந்துக்களாக இருந்து பெருகவேண்டும். மத மாற்றத்தால் குறையக்கூடாது.

இந்துக்களின் பழைமை வாய்ந்த புனித இடங்களுக்கு அருகில் எல்லாம் கிறிஸ்தவ தேவாலயங்களை அமைக்கிறார்கள். ஆனால் அப்பகுதியில் ஒரு கிறஸ்தவர்களும் இல்லை. அதே போன்று தான் புத்தர் சிலைகளை வைக்கிறர்கள்.

முன்னைய மன்னர்கள் வழிபட்ட புண்ணிய பூமியில் தற்போது கிறிஸ்தவர் ஆக்கிரமிப்பின் காரணமாக அப்பகுதிக்கு செல்ல முடியாமல் உள்ளது. மனங்களை சினம் கொள்ள வைக்கிறது. வழிபடவே வேண்டாம் எனும் மனோ நிலையை சைவ அடியார்களுக்கு கொடுக்கின்றார்கள்.

மற்றைய மதங்களை நாம் மதிக்கிறோம். அவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும் என விரும்புகிறோம். ஆனால் ஏனைய மதத்தினர் எம்மை இந்துக்களாக இருக்க விரும்புகிறார்கள் இல்லை. இதை 3 மதத்தவர்களும் இணைந்து செயகிறார்கள்.

இலங்கையில் 66 ஆயிரம் மொத்த பரப்பளவில் 25 ஆயிரம் சதுர கிலோ மீற்றரில் தமிழர் வாழ்ந்துள்ளார்கள். அப்பரப்பளவு குறுகி தற்போது 12 ஆயிரம் ஆக மாறியுள்ளது.

வேறு மதத்தினர் தமது மதங்களை பரப்புவதற்கும் ஆலயங்கள் அமைப்பதற்கும் அமைச்சர்கள், வெளிநாட்டவர்கள் ஆதரவு கொடுக்கிறார்கள்.

அந்த வகையில் ஆலயங்களைக் கட்டி விட்டு எம்மை எள்ளி நகையாடும் கொடுமையைப் பார்க்கும் போது உயிர் வாழ்வதா? வேண்டாமா? என உள்ளது.

எம்மை வாழ விடுவார்களா? என்ற கேள்வி எம்முன் எழுந்துள்ளது.

எனவே இவ்வாறான ஆபத்தில் இருந்து எம்மை காப்பாற்றுவதற்கு சிவசேனை அமைப்பினால் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆராய்ந்து வருகிறோம்.

அதாவது ஒரு ஊரிலே வழிபாட்டுத் தலம் அமைய வேண்டுமேயானால் அந்த ஊரில் உள்ள மக்களிடம் வாக்கெடுப்பு நடத்திய பின்னர் அமைக்க வேண்டும் என்ற கொள்கையை அரசுக்கு தெரிவித்துள்ளோம்.

இரண்டாவதாக ஏனைய சமயத்தில் உள்ள பாவ காரியங்களுக்கு அஞ்சும் நீதியுடன் வாழும் தலைவர்களை எமது அணியில் சேர்த்து நல்ல கருத்துக்களையும் ஒத்துழைப்பையும் பெற்று எமது சைவத்தை காப்பாற்றப்போகிறோம்.

அத்துடன் மதமாற்ற சட்டம் கொண்டுவர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளோம்.

சைவ மக்களின் வழிபாட்டு உரிமை மற்றும் அதன் தன்மை என்பவற்றை தெரிந்து கொள்வதற்கு சரியான தலைமைகள் மாவட்டங்களில் இல்லை.

உதாரணமாக வடகிழக்கு மாகாணங்களுக்கு வெளிநாட்டவர்கள் வருகிறார்கள்.

அவர்கள் கிறிஸ்தவ தலைமைகளைத்தான் சந்திக்கிறார்கள்.

அவர்கள் இந்துக்களின் நன்மை பற்றி பேசுவார்களா? பேசக்கூடிய தலைமை இருந்தால் எம்முடன் கலந்தாலோசிப்பார்கள்.

எனவே மாவட்டங்கள் தோறும் சைவ ஆதீனங்களை உருவாக்கவுள்ளோம்.

அதன் அடிப்படையிலே எதிர்வரும் கார்த்திகை விளக்கீடு அன்று மன்னார் மாவட்டத்துக்கு முதன் முதலாக மன்னார் சுந்த்ரர் ஆதீனம் ஆரம்பிக்கவுள்ளோம்.

அனைத்து மாவட்டங்களிலும் சைவ மக்களுக்கு வழிகாட்டக்கூடிய சைவ துறவிகள் தலைமை தாங்கும ஆதீனம் இருந்தால் தான் மக்களுக்குரிய வழிகாட்டல் தெளிவாக இருக்கும்.

மேலும் ஒரு விடயம் 400 ஆண்டு கால வரலாற்றில் சைவர்களாக இருந்தவர்கள் மட்டுமே தமிழர்களாக உள்ளார்கள்.

சைவர்கள் இல்லாமல் போனவர்கள் சிங்களவர்களாக மாறி போயுள்ளார்கள்.

தமிழ்த்தேசியம் பேசுபவர்கள் இதை யோசித்து பார்க்க வேண்டும்.


பௌத்தர்களுக்கு அரசும் இஸ்லாமியருக்கு அரபு நாடுகளும் கிறிஸ்தவர்களுக்கு மேலைத்தேய நாடுகளும் உள்ளன.

ஆனால் சைவர்களான எமக்கு யார் உள்ளார்கள். இந்த கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும். சைவம் உள்ள இடத்தில் தான் தேசியம் உள்ளது.

சைவம் இல்லாத இடத்தில் தேசியம் அழிந்து போய் விட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)







இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாட்டின் மூன்றாம் நாள் மாலை நேர நிகழ்வு நேற்று முன்தினம் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது. வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆசியுரையை யாழ்.சின்மயாமிஷின் வதிவிட ஆச்சாரியார் வண.ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் வழங்கியிருந்தார். அதனைத் தொடர்ந்து விருந்தினர்கள் உரையும், இசை அரங்கம், நூல் வெளியீடும், உரையரங்கமும் இடம்பெற்றன. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, கௌரவ விருந்தினராக நாவலர் நற்பணிமன்ற தலைவர் ந.கருணை ஆனந்தன், சிறப்பு அதிதிகளாக தரும்புர ஆதீன பன்னிரு திருமுறை மொழிபெயர்ப்பு இணைப்பாளர் மறவன்புலவு க.சச்சிதானந்தன், சைவமகாசபை பொதுச்செயலாளர் வைத்திய கலாநிதி ப.நந்தகுமார், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்:-பொ.சோபிகா)

# காங்கேசன்துறையிலிருந்து நாகபட்டினத்திற்கு கப்பல் விடுமாறு வடக்கு ஆளுநரிடம் கோரிக்கை

திருவெம்பாவை தினத்தில் இந்துக்கள் சிதம்பரம் சென்று தரிசிக்க காங்கேசன் துறையில் இருந்து நாகபட்டினத்துக்கு கப்பல் விடுங்கள் என வடமாகாண ஆளுநரிடம் இந்துக்கள் சார்பாக சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாட்டின் மூன்றாம் நாள் மாலை நேர நிகழ்வு நேற்று முன்தினம் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிதம்பரத்தில் ஆறுமுகநாவலர் காலத்தில் இருந்து கட்டப்பட்ட யாழ்ப்பாணத்தவருக்கு சொந்தமான 16 மடங்கள் உள்ளன. ஆனால் அங்கு போவதற்கும் தரிசிப்பதற்கும் எமக்கு முடியவில்லை.

முஸ்லிம்கள் மக்காவுக்கு போவதற்காக உதவி செய்கிறீர்கள். கிறிஸ்தவர்கள் ஜெருசலேம்போவதற்கு உதவி செய்கிறீர்கள். பௌத்தர்கள் புத்தகாயா போவதற்கு உதவி செய்கிறீர்கள். ஆனால் இந்துக்கள் மத.தலங்களை தரிசிக்க செல்வதற்கு என்ன உதவி செய்துள்ளீர்கள்?

எதிர்வரும் திருவெம்பாவை தினத்துக்கு சிதம்பரத்துக்கு சென்று 10 நாட்கள் தங்கி இருப்பதற்கு இந்துக்களுக்கு உதவி செய்யுங்கள்.

எனவே காங்கேசன்துறை துறைமுகத்தை மீள செயற்படுத்தி அதில் இருந்து நாம் நாகபட்டினம் செல்வதற்கு உதவி செய்யுங்கள். இதற்கு இந்திய அரசும் தயாராக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# மனைவியின் மோசமான செயற்பாட்டால் பொலிஸாரின் உதவியை நாடிய சிப்பாய்

(கொழும்பு)

கடற்படை சிப்பாய் ஒருவர் தனது மனைவியை குடிப் பழக்கத்திலிருந்து மீட்டுக் கொள்ள பொலிஸாரின் உதவியை நாடியுள்ளார்.

வடமத்திய மாகாணம் தம்புத்தேகமவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடுமையான மதுபோதைக்கு அடிமையான குறித்த பெண் பிள்ளைகளை பராமரிப்பதில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மது அருந்துவதற்காக பல்வேறு இடங்களுக்கு தமது மனைவி செல்வதாகவும் இதனால் குடும்பத்தை பராமரிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் கடற்படைச் சிப்பாய் தெரிவித்துள்ளார்.

தமது மனைவிக்கு அறிவுரை வழங்கி போதைப் பழக்கத்திலிருந்து அவரை மீட்பதற்கு உதவுமாறு கடற்படைச் சிப்பாய், தம்புத்தேகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டை விசாரணை செய்த சிறு குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ரவீந்திர ஜயதிஸ்ஸ, பெண்ணை அழைத்து குடிப்பழக்கத்தை கைவிடுமாறு கோரியுள்ளார்.

எனினும் தம்மால் குடிப் பழக்கத்தை கைவிட முடியவில்லை என குறித்த பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

31 வயதான இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

கடற்படைச் சிப்பாயும் அவரது மனைவியும் 12 ஆண்டுகளுக்கு முன்னதாக காதல் திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

விடுமுறைக்கு வீடு வரும் கடற்படைச் சிப்பாய் மதுபானம் கொண்டு வந்து மனைவிக்கு கொடுத்து குடிக்குமாறு வற்புறுத்தியுள்ளார்.

முதலில் மறுத்த மனைவி பின்னர் மதுப் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளார்.

குடிப் பழக்கம் குடும்பத்திற்கு தீமையானது என பொலிஸார் தெளிவுபடுத்திய போதிலும் அதனை தம்மால் கைவிட முடியாது என குறித்த பெண் தெரிவித்துள்ளார். (இ-7)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பரணி
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/6478

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 30செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:NCT/ அரசதொழில்
தொ.இ: B/6482

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சித்திரை
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:பொறியியலாளர் லண்டன்
தொ.இ: B/6484

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 36செவ் 1 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:Diploma in business management/ தனியார் தொழில்
தொ.இ: B/6487

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 47 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: G/2539

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 91சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
தொ.இ: G/2547

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 33
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BIT/ஆசிரியர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/2549

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 13செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/2571

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

இனிவரும் நாட்களில் கல்யாணமாலை ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை தினமாகும்.



அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
நீங்கள் அறிந்த
◆செய்திகள்
◆புகைப்படங்கள்
◆நிகழ்வுகள்
◆பேசும் படங்கள்
போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.
VIBER செயலி இல
076 636 3378
Viber

# 13 நீர்ப்பாசனக் குளங்களின் நீர்மட்டம், மழைவீழ்ச்சி அளவுகள்

## வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் அறிவிப்பு

(மல்லாவி)

**வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 13 நீர்ப்பாசனக் குளங்களுக்கு நேற்று திங்கட்கிழமை காலை 6.30 மணிவரை கிடைக்கப் பெற்ற நீர்வரத்தின் விபரத்தை வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.**

இதற்கமைய 26 அடி கொள்ளளவுடைய வவுனிக்குளத்திற்கு 11 அடி 9 அங்குலமாகவும் 10 அடி கொள்ளளவுடைய தென்னியன் குளத்திற்கு 6 அடி 4 அங்குலமாகவும் 12 அடி கொள்ளளவுடைய ஐயங்கன் குளத்திற்கு 3 அடி 6 அங்குலமாகவும் 10 அடி கொள்ளளவுடைய அம்பலப் பெருமாள் குளத்திற்கு 5 அடி 10 அங்குலமாகவும் 11 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய கல்விளான் குளத்திற்கு 4 அடியாகவும் 9 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய மருதங்குளத்திற்கு 6 அடியாகவும் 9 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய பழைய முறிகண்டி குளத்திற்கு 8 அடி 2 அங்குலமாகவும் 9 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய கோட்டைகட்டிய குளத்திற்கு 6 அடி 3 அங்குலமாகவும் 11 அடி கொள்ளளவுடைய கொல்லவிளான் குளத்திற்கு 3 அடி 2 அங்குலமாகவும் 12 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய மல்லாவி குளத்திற்கு 5 அடி 3 அங்குலமாகவும் 11 அடி 2 அங்குலம் கொள்ளளவுடைய தேராங்கண்டல் குளத்திற்கு 5 அடி 7 அங்குலமாகவும் 9 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய பனங்காமம் குளத்திற்கு 4 அடி 2 அங்குலமாகவும் 8 அடி கொள்ளளவுடைய அம்பலவன் சின்னக் குளத்திற்கு 6 அடி 9 அங்குலமா கவும் நீர்வரத்துக் கிடைக்கப் பெற்றுள்ளது.




இதேவேளை கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சியின் அளவின் படி வவுனிக்குளம் நீரேந்து பிரதேசத்தில் 35 மில்லி மீற்றராகவும் அம்பலப்பெருமாள் நீரேந்து பிரதேசத்தில் 80 மில்லி மீற்றராகவும் ஐயங்கன்குளம் நீரேந்து பிரதேசத்தில் 43 மில்லி மீற்றராகவும் கல்விளான் நீரேந்து பிரதேசத்தில் 10 மில்லி மீற்றராகவும் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# எட்டு நீர்ப்பாசனக் குளங்களின் நேற்றைய நீர்மட்ட அளவுகள்

## முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் அறிவிப்பு

(மல்லாவி)

முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட எட்டு நீர்ப்பாசனக்குளங்களின் நேற்று திங்கட்கிழமை காலை 6 மணிவரை கிடைக்கப்பெற்ற நீர்மட்ட அளவுகளின் விபரங்களை முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

இதற்கமைய 24 அடி கொள்ளளவுடைய முத்தையன்கட்டு குளத்திற்கு 4 அடியாகவும் 23 அடி 4 அங்குலம் கொள்ளளவுடைய உடையார் கட்டு குளத்திற்கு 11அடி 2அங்குலமாகவும் 21 அடி கொள்ளளவுடைய தண்ணி முறிப்பு குளத்திற்கு 9அடியாகவும் 12 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய கணுக்கேணி குளத்திற்கு12 அடி 2அங்குலமாகவும் 16 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய மடவாளசிங்கம் குளத்திற்கு 9 அடியாகவும்14அடி2அங்குலம்கொள்ளளவுடைய மருதமடு குளத்திற்கு 12அடி 9 அங்குலமாகவும் 20 அடி 3 அங்குலம் கொள்ளளவுடைய விசுவமடு குளத்திற்கு 14 அடி 6அங்குலமாகவும் 13 அடி 9அங்குலம் கொள்ளவுடைய தட்டயமலை குளத்திற்கு எட்டு அடியாகவும் நீர்வரத்து கிடைக்கப்பெற்றுள்ளது.

இதேவேளை கடந்த நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சியின் அளவுப்படி முத்தையன்கட்டு குள நீரேந்து பிரதேசத்தில் 55.5 மில்லிமீற்றராகவும் உடையார்கட்டு நீரேந்து பிரதேசத்தில் 73 மில்லி மீற்றராகவும் தண்ணி முறிப்புக் குள நீரேந்து பிரதேசத்தில் 60 மில்லிமீற்றராகவும் கணுக்கேணிக்குள நீரேந்து பிரதேசத்தில் 85 மில்லி மீற்றராகவும் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளதாக முத்தையன்கட்டு குள நீர்ப்பாசனத் திணைக்களத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# இராணுவத்தின் வசமுள்ள வித்தியாலயத்திற்கு சொந்தமான காணியை விடுவித்து தாருங்கள்

## எதிர்க்கட்சித் தலைவரிடம் கோரிக்கை





(பரந்தன்)

இராணுவத்தின் பிடியில் காணப்படும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்குச் சொந்தமான காணியை விடுவித்துத் தருமாறு, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் குறித்த பாடசாலை சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சிக்கு நேற்று திங்கட்கிழமை விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர், கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்டோருடன் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர். இதன்போதே இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அத்தோடு, யுத்த பாதிப்பிற்கு உள்ளாகிய மேற்படி பாடசாலைக்குத் தேவையான வளங்களை பெற்றுத் தருமாறும் எதிர்க்கட்சித் தலைவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கோரிக்கைகளை வெகு விரைவில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் பாடசாலை சமூகத்திற்கு உறுதியளித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், வடக்குமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா. மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை,கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த சந்திப்பையடுத்து, இரணைமடு குளத்தின் அபிவிருத்தி தொடர்பில் கேட்டறிவதற்காக, எதிர்க்கட்சித் தலைவர் குறித்த பகுதிக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (2)

### பேராற்றில் அனுமதிப்பத்திரமின்றி

# ஆற்றுமணலை அகழ்ந்தெடுத்து களஞ்சியப்படுத்திய மூவர் கைது

## உபகரணங்களும் கைப்பற்று

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பிரிவிற்குட்பட்ட ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பிரிவிலுள்ள கற்சிலை கிராமத்தின் ஊடாகச் செல்லும் பேராற்றில் அனுமதிப்பத்திரம் எதுவுமின்றி சுற்றுச்சூழலை பாதிக்கும் வகையில் ஆற்று மணலை அகழ்ந்தெடுத்து களஞ்சியப்படுத்திக் கொண்டிருந்த மூன்று சந்தேக நபர்களை மணல் அகழ்விற்கு பயன்படுத்திய உபகரணங்களுடன் கைது செய்துள்ளதாக ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து ஒட்டு சுட்டான் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் உத்தரவிற்கு அமைய சம்பவ இடத்தை சுற்றி வளைத்த பொலிஸார் மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மூன்று சந்தேக நபர்களை மணல் அகழ்வு உபகரணங்களுடன் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளின் பின்னர் கைப்பற்றப்பட்ட உபகரணங்களுடன் சந்தேக நபர்கள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# 778 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல்

## வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தெரிவிப்பு

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் ஒக்டோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் 778 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

குறிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, கட்டுப்பாட்டு விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, காலாவதியான பொருட்களை விற்பனைக்கு காட்சிப்படுத்தியமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, விலைகளை காட்சிப்படுத்தாமல் அத்தியாவசியப் பொருட்களை விற்பனை செய்தமை, இறக்குமதியாளர் மற்றும் விநியோகத்தர் ஆகக் கூடிய விலை என்பன குறிப்பிடாது பொருட்களை விற்பனை செய்தமை, பொருட்களில் உள்ள விலையை அழித்து அதிகரித்த விலை சுட்டுத்துண்டு ஒட்டியமை, பொருட்களை விற்பனை செய்யும் போது மிகுதிப்பணத்திற்கு பதிலாக மாற்றுப்பண்டம் வழங்கியமை, வியாபார நிலையத்தில் நடப்பு ஆண்டிற்கான முத்திரை இடப்படாத தராசு வைத்திருந்தமை என்பவற்றுக்கு எதிராகவே குறித்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதியில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 634 வர்த்தகர்களுக்கு எதிராகவும், செப்டெம்பர், ஒக்டோபர் மாதங்களில் வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதியைச் சேர்ந்த 144 வர்த்தகர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல்கள் செய்யப்பட்டுள்ளன என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது. (2-250)

# உலக மீனவர் தினம் அனுஷ்டிப்பு



வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் உலக மீனவர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா அருந்ததி விருந்தினர் விடுதியில் நேற்று இந்நிகழ்வு இடம்பெற்றது

இதன்போது "காணி மற்றும் கடலின் ஆட்சியுரிமையை அதை நம்பி வாழும் மக்களுக்கே உரித்தாக்கி உணவு தன்னாதிக்கத்தை வெற்றி கொள்வோம்" எனும் தொனிப்பொருளில் இவ்வாண்டு உலக மீனவர் தினத்தை மீனவர்கள் அனுஷ்டித்தனர்.

இதன்போது வடக்குமாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அந்நிய மீனவர்களின் ஊடுருவல், மீனவர்களின் வாழ்வாதார பிரச்சினைகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

இந்நிகழ்வில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹேமன் குமார, தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு- கிழக்கு இணைப்பாளர் அன்ரனி யேசுதாசன், வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் எம்.என். ஆலம், வடக்கு மாகாண கடற்றொழிலாளர் அமையத்தின் நிர்வாக குழுவினர், உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (2-250)

பெய்துவரும் அடைமழையை அடுத்து

# கிளி.யில் கிராமங்கள் வெள்ள நீரில் மூழ்கின




(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் சில நாட்களாக தொடர்ந்து பெய்துவரும் அடைமழையினால் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பொன்னகர், திருமுறிகண்டி, செல்வபுரம் ஆகிய கிராமங்களில் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்களின் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அக்கராயனுக்குச் செல்லும் முறிகண்டிவீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் மக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகின்றனர்.


முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களான முறிகண்டி, செல்வபுரம், வசந்த நகர் ஆகிய கிராமங்களில் வடிகான்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் குறித்த பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமையே வெள்ளநீர் தேங்குவதற்குக் காரணம் எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (2-281)



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 17 ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் மகா வித்தியாலய அதிபர் க.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற போது...

## நந்திக்கடலுக்குச் செல்ல முடியாத வகையில் அமைக்கப்பட்ட ராணுவ வேலி அகற்றப்படவில்லை

### சுமார் 70 கடற்றொழிலாளர் பாதிப்பு



(பனிக்கன்குளம்)

கேப்பாப்புலவு கடற்றொழிலாளர்கள் நந்திக்கடலுக்குச் செல்ல முடியாத வகையில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ வேலி அகற்றப்படாததன் காரணமாக எழுபது வரையான கடற்றொழிலில் ஈடுபடும் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


மாதிரிக் கிராமத்திலிருந்து நந்திக்கடலில் மீன்பிடியில் ஈடுபடும் குடும்பங்கள் குறித்த இராணுவ வேலியை நீண்ட தூரம் சுற்றியே கடலில் இறங்க வேண்டியுள்ளதாகவும் இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்டச் செயலர், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் என்பவற்றில் முறைப்பாடு செய்தும் பயனேற்படவில்லை என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த அரசின் காலத்தில் அமைக்கப்பட்ட இராணுவ வேலி நல்லாட்சி அரசிலும் அகற்றப்படாமலுள்ளது. கேப்பாப்புலவு மக்கள் சொந்த இடங்களில் குடியேற முடியாத நிலையில் இராணுவத்தினர் உருவாக்கிய மாதிரிக் கிராமத்தில் நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழும் நிலையில் தமது வாழ்வாதாரத்திற்காக நந்திக் கடலுக்குச் செல்லும் நிலையில் இராணுவ வேலியினை சுற்றி சென்றே கடற்றொழிலில் ஈடுபட வேண்டியுள்ளதாகவும் இதன் காரணமாக கேப்பாப்புலவு, வற்றாப்பளை, நீராவிப்பிட்டி ஆகிய பகுதி கடற்றொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இவ்விடயம் ஆராயப்பட்ட போதிலும் இராணுவ வேலி அகற்றவில்லை எனவும் கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (2-281)




## ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 91 வது பிறந்ததின விழா

### நெடுங்கேணியில் நடமாடும் இலவச மருத்துவ முகாம்




பகவான்ஸ்ரீ சத்ய சாயியின 91ஆவது பிறந்ததினததை முன்னிட்டு வவுனியா வடக்கு நெடுங்கேணியில் நடமாடும் இலவச மருத்துவ சேவை இடம்பெற்றுள்ளது.

வவுனியா பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தின் தலைவர் டீ.சிவராமின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமனினால் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் மருத்துவ முகாம் நெடுங்கேணி மகா வித்தியாலய வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் பொது மருத்துவ முகாம், நிபுணத்துவ மருத்துவ சேவை, கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும் காது, மூக்கு, தொண்டை நோய்களுக்கான சிகிச்சை, பற் சிகிச்சை, சுகாதார கல்வி வழங்கல், தொற்றா நோய்களுக்கான குருதிப் பரிசோதனை போன்ற வைத்திய சேவைகள் இடம் பெற்றதோடு கண் பரிசோதனையில் ஈடுபடுத்தப்பட்டு இலவச மூக்குக் கண்ணாடியும் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு 12 வைத்தியர்களும் வைத்திய நிபுணத்துவ மருத்துவரும் வருகை தந்து நோயாளிகளுக்கான மருத்துவ சேவையிலே ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

முல்லைத்தீவு மாவட்டத்தில்

## பயிரழிவு ஏற்பட்ட 151 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை பகிர்ந்தளிப்பு

### கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் முல்லை./வவு. ஆகிய மாவட்டங்களின் உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

மத்திய விவசாய அமைச்சின் கீழுள்ள கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் ஊடாக கடந்த 2015-2016 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையின் போது காப்புறுதி செய்த விவசாயிகளின் முல்லைத்தீவு மாவட்டத்தில் பயிரழிவு ஏற்பட்ட 151 விவசாயிகளில் 533 ஏக்கர் பயிரழிவிற்கு இழப்பீட்டுத் தொகையாக 32 இலட்சத்து 42 ஆயிரத்து 675 ரூபா நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களின்உதவிப் பணிப்பாளர்எம்.ஆர்.எம்.சமீர்தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கடந்த காலபோக நெற்செய்கையின் போது காப்புறுதி செய்வதவர்களில் பயிரழிவு ஏற்பட்ட குமுழமுனை கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட 13 விவசாயிகளின் 53 ஏக்கர் பயிரழிவிற்கு 3 இலட்சத்து 84 ஆயிரத்து 189 ரூபா பணம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளை கமநல சேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட 97 விவசாயிகளின் 322 ஏக்கர் பயிரழிவிற்கு 22 இலட்சத்து 55 ஆயிரத்து 522 ரூபா பணம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் ஒட்டுசுட்டான் கமநலசேவை பிரிவிற்குட்பட்ட மூன்று விவசாயிகளுக்கு 16 ஏக்கர் பயிரழிவிற்கு 69 ஆயிரத்து 133 ரூபா பணம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலைய பிரிவிற்குட்பட்ட 20 விவசாயிகளுக்கு 60 ஏக்கர் பயிரழிவிற்கு ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 269 ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் கமநல சேவை நிலைய பிரிவிற்குட்பட்ட 15 விவசாயிகளின் 73 ஏக்கர் பயிரழிவிற்கு 3 இலட்சத்து 34 ஆயிரத்து 856 ரூபா பணம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

உடையார்கட்டு கமநல சேவை நிலைய பிரிவிற்குட்பட்ட இரண்டு விவசாயிகளின் நான்கு ஏக்கர் பயிரழிவிற்கு 16 ஆயிரத்து 376 ரூபா பணம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

ஒலுமடு கமநலசேவை நிலைய பிரிவிற்குட்பட்ட ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் பயிரழிவிற்கு 53 ஆயிரத்து 330 ரூபா பணம்இழப்பீட்டுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## பத்மநாபாவின் 65வது பிறந்ததினம் மன்னாரில் அனுஷ்டிக்கப்பட்டது




(வவுனியா)


ஈ.பி.ஆர்.எல்.எப்.அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் தோழர் பத்மநாபாவின் 65 ஆவது பிறந்த தினம் கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை மன்னாரில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எப்.அமைப்பின மன்னார் மாவட்ட தலைமைக் காரியாலயத்தில் மத்திய குழு உறுப்பினர் ஜேம்ஸ் ஜேசுதாஸ் தலைமையில் தோழர் பத்மநாபாவின் 65 ஆவது பிறந்த தின நிகழ்வு நினைவுகூரப்பட்டது.

இதன்போதுவடக்குமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், டெலோ அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் பற்றிக் வினோ, ஈ.பி.ஆர்.எல். எப். அமைப்பின மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ், மத்திய குழு உறுப்பினர்களான யூட் குரூஸ், பீட்டர் மடுத்தீன், நானாட்டான் பரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் றீகன், மாவட்ட குழு உறுப்பினர்கள், கட்சியின் தோழர் ள் என பலர் கலந்து கொண்டு ஈ.பி. ஆர்.எல்.எப். அமைப்பின் ஸ்தாபக தலைவர் தோழர் பத்மநாபாவின் உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டதோடு சிறப்பு உரைகளும் இடம்பெற்மை குறிப்பிடத்தககது. (2-9)




# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரிப்பு



நான்கு பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையை அடுத்து ஏனைய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம 33 வீதம் உயர்வடைந்துள்ளது. இது தொடர்பாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சமன் வீரசிங்க தெரிவிக்கையில், நெற்செய்கைக்குத் தேவையான நீர் தற்போது நீர்த்தேக்கங்களில் சேமிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். (இ-7-10)

# புகையிரதம் - கார் விபத்து

களனிவெலி புகையிரதப் பாதையில், குறுக்குப் பாதையின் அருகாமையில் கார் ஒன்று புகையிரதத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது பெண் ஒருவர் உட்பட இரண்டு பேர் காயமடைந்து, ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புகையிரதப் பாதுகாப்புக் கடவை ஊழியர் சேவையில் இல்லாமையினாலே குறித்த விபத்து நிகழ்ந்ததாக அப்பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 80 | 100 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 100 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 45 | 80 | 80 | 70 |
| தக்காளி | 40 | 60 | 45 | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 | 40 | 60 | 60 |
| கோவா | 60 | 60 | 40 | 50 | 80 | 60 |
| கரட் | 80 | 60 | 70 | 80-160 | 160 | 80 |
| பூசணி | 40 | 40 | 25 | 40 | 60 | 40 |
| புடோல் | 40 | 60 | 30 | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 30 | 60 | 40 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 100 | 100 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 200 | 95 | 150 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 70 | 50 | 100 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | 120 | 70 | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 140 | 100 | 60 | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 80 | 200 | 90 | 80 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 50 | 50 | 120 | 50 |
| கறிமிளகாய் | 100 | 100 | 105 | 120 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 40 | 30 | 100 | 120 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 180 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 30 | 60 | 50 | 50 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 600 | 400 | 400 | 600 | 600 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-35 | 50 | 35-45 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | — | — | — | — | 200 | — |
| முள்ளங்கி | 60 | 100 | 30 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 15 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | — | 60 | — | 80 |

# சிறைக்குள் பேரறிவு

16

## 25 வருடங்கள் சிறைப்பட்டு வலிகளைச் சுமந்தவனின் தொடர்...



"அந்தச் சிறையின் சிறை அலுவலர் அறைக்குப் பின்புறம் தான் தூக்கு மேடை அமைந்திருந்தது. அந்த அறையின் ஜன்னல் வழியே அதைப் பார்க்க முடியும். என்னைப் பலியிடப் போகும் அந்த பலி பீடத்தைப் பழக்கப்படுத்திக் கொள்வது இறுதி நிமிடங்களில் பதற்றத் தைத் தவிர்க்கும் எனக் கருதிஅதைப் பார்த்து வைத்தேன்."

...விதி என்று சொல்லியும் என்னால் விட்டு ஒதுக்க முடியவில்லை. அது சொல்ல முடியாத தவிப்பு, சொல்லில் அடங்கா பெருந்துன்பம்.

அப்போதுதான் முதன்முறையாகப் புரியத் தொடங்கியது - அவ்வளவு எளிதில் மீளவே முடியாத பெரும் சூழ்ச்சியில் சிக்க வைக்கப்பட்டு விட்டேன் என்பது. அரசியல் சூழ்ச்சியில் பலியாகிப் போன எத்தனையோ அப்பாவி மனிதர்களில் நானும் ஒருவனாகிச் சாகப் போகிறேன் என்பதை



நினைக்க நினைக்க நெஞ்சம் விம்மியது. இதனை எதிர்க்க எனக்கு வழியுமில்லை - பலமுமில்லை. மரணத்தை எதிர்கொள்வதைத் தவிர வேறு மார்க்கம் ஏதும் என்னிடம் இல்லை. சாவைச் சந்திப்பதற்கு முன்பாக ஒரு சாதாரண மனிதனாக எனக்கு நானே கட்டிவைத்திருந்த எனது எதிர்காலக் கனவுக் கோட்டையைச் சிதைக்க வேண்டும். அதுவே, எனக்குச் சாவை எதிர்கொள்வதைக் காட்டிலும் சவாலாக இருந்தது.

எனது மரணம் பரிதாபத்துக்குரியதுதான். இருப்பினும், எந்த நிலையிலும் அழுதுவிடக் கூடாது - கண்ணீர் சிந்திவிடக்கூடாது என்பதில் உறுதியுடன் இருந்தேன்.

அந்தச் சிறையின் சிறை அலுவலர் அறைக்குப் பின்புறம் தான் தூக்குமேடை அமைந்திருந்தது. அந்த அறையின் ஜன்னல் வழியே அதைப் பார்க்க முடியும். என்னைப் பலியிடப்போகும் அந்த பலிபீடத்தைப் பழக்கப்படுத்திக் கொள்வது இறுதி நிமிடங்களில் பதற்றத்தைத் தவிர்க்கும் எனக் கருதி அதைப் பார்த்து வைத்தேன். அந்தச் சிறையில் இறுதியாகத் தூக்கிலிடப்பட்டவரின் இறுதி நிமிடங்கள் எப்படிக் கழிந்தன எனக் காவலர்களிடம் கேட்டறிந்தேன்.

28 வயதில் வாழ்க்கையைப் பற்றிய புரிதலே எனக்கு முழுமையடையாத போது, மரணத்தை எங்ஙனம் புரிந்துகொள்வது? அந்தத் துணிவை தருவதற்கு எனக்கு ஒரு துணை தேவைப்பட்டது. ஆத்திகர்களுக்கு உள்ள விதி, தலையெழுத்து, பிறவிப் பயன் என்ற பெயர்களில் தேடுதலுக்கும் வழியில்லை, ஆண்டவனிடம் அழுது முறையிட்டு ஆறுதல்படவும் வாய்ப்பில்லை. இந்த 25 ஆண்டுகால என் நீதிக்கான போராட்டத்தில் இதுவரை எத்தனையோ இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமியர் எனப் பாகுபாடு இல்லாமல் உண்மையான பாசத்தோடும் மனிதத்தோடும் தங்களது அன்பை, ஆதரவைச் செலுத்தி வருகின்றனர். அவர்களின் அன்பு இல்லையென்றால், இன்று நான் இல்லை. அவர்களின் மனிதம் போற்றத்தக்கது.

நீதிக்கான அவர்களது குரலே என் பலம். இருப்பினும், என்னை முழுமையான நாத்திகனாக உணர்ந்த அந்தத் தருணத்தைப் பதிவுசெய்வது எனது கடமை.

எனக்கு ஆறுதலும் தேறுதலும் கூறி மரணத்தை எதிர்கொள்ளும் துணிவைத் தந்தவர் வளளுவர். 'இடுக்கண் அழியாமை' அதிகாரத்தின் ஒவ்வொரு குறளையும் "உறங்குவது போலும் சாக்காடு" என்ற வாக்கியத்தையும் எத்தனை முறை வாசித்திருப்பேன் என்பது எனக்கே தெரியாது. அவைதான் எனக்கு வாழ்வு, மரணம் ஆகியவற்றின் ஆழ அகலத்தை அறிமுகம் செய்தது.

வள்ளுவம் தந்த தெளிவுதான், குற்றமற்ற எவரையும் கொல்லத் தயாராக இருக்கும் இந்த நீதி அமைப்பு முறை குறித்த புரிதலைத் தந்தது. மரண தண்டனை என்ற போலியானதும், ஏற்றத்தாழ்வு மிக்கதுமான தண்டனை வடிவம் குறித்து ஆராயும் உணர்வை உண்டாக்கியது. எல்லாம் சரி, மரணத்தை எதிர்கொள்ளும் மன உறுதியை வள்ளுவம் தந்துவிட்டது.

எட்டு ஆண்டு உழைப்பும் வீணாகி எனக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்துவிட்ட என் தாயாரின் முகத்தைப் பார்க்கும் துணிவை மட்டும் எனக்கு எந்த நூலும் வழங்கவில்லை. அந்த உணர்வை வேறு ஒரு சமயம் எழுதுவேன்.

மற்றபடி 09.06.1999 அன்று அதிகாலை தூக்கிலிடப்படுவதாக நாள் குறிக்கப்பட்ட செய்தியை எனக்கு முறைப்படி அறிவித்த எத்தனையோ படிப்பினைகளைக் கொடுத்துச் சென்ற மறக்க முடியாத அந்த நாள் 17.5.1999.

'கேட்பது உயிர் பிச்சையல்ல... மறுக்கப்பட்ட நீதி' என்பதே எனது 25 ஆண்டுகால முழக்கமாக இருக்கிறது.

(வலிகள் தொடரும்...)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 16.11.2016-15.12.2016



***விட்டுக்கொடுத்து வாழ்ந்தால் தான் விருப்பங்கள் நிறைவேறும் என்று எடுத்துரைக்கும் கும்ப இராசி நேயர்களே!***

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி புதனோடும் சூரியனோடும் இணைந்திருக்கிறார். பஞ்சம அஷ்டமாதிபதியானவர் புதன், சப்தமாதிபதியாக விளங்குபவர் சூரியன். இவர்களோடு இராசிநாதன் சனி இணைந்து செயற்படும் பொழுது குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தென்படும். மகனுக்கோ, மகளுக்கோ கல்யாணம் முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது கல்யாண முயற்சி கைகூடியிருப்பது கண்டு மகிழ்ச்சியடைவர்.

மனோபலம் மிக்க நீங்கள் எந்தப் பிரச்சினையையும் எதிர்கொள்ளத் தயங்க மாட்டீர்கள். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். ஒப்பந்தங்கள் வந்து உள்ளத்தை மகிழ்விக்கும். நிர்ப்பந்தங்கள் விலகி நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். சூரியபலம் நன்றாக இருப்பதால் பிரபலஸ்தர்கள் பின்னணியாக இருந்து உங்களுக்குத் தேவையான காரியங்களை தேவையான நேரத்தில் முடித்துக் கொடுப்பர்.

அரசுப் பணியில் அமர வேண்டுமென்று விரும்புபவர்களுக்கு அது கைகூடும். நேர்முகத் தேர்வில் இதுவரை தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் இப்பொழுது தேர்ந்தெடுக்கப்படுவர். குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். ஜென்மத்தில் கேதுவும் 7 இல் ராகுவும் இருப்பதால் சர்ப்ப தோஷம் உள்ளது. சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கம் நன்மையளிக்க வேண்டுமானால் அதற்குரிய ஆலயத்திற்கு சென்று வழிபட வேண்டும். அங்ஙனம் சர்ப்ப கிரகங்களை வழிபட்டு சாந்திப் பரிகாரங்களை செய்தால் நட்பு பகை ஆகாது. நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபம் கிடைக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். மனதிற்கினிய சம்பவம் நடைபெறும்.

கேதுவிற்குரிய தெய்வம் என்று பார்க்கும் பொழுது விநாயகப் பெருமானை வழிபடுவது நல்லது. வடக்கு நோக்கிய விநாயகப் பெருமானை சனிக்கிழமை தோறும் வழிபட்டு வந்தால், நடக்கும் காரியங்கள் நல்லதாக நடக்கும். நாணயப் பாதிப்புகள் அகலும். மனக்கவலையை

## முயற்சி வெற்றி தரும்!

அகற்றும் ஆற்றல் வழிபாட்டிற்கு மட்டுமே உண்டு. எனவே இம்மாதம் வரும் திருக் கார்த்திகை திருநாள் அன்று செந்தில் வடிவேலன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். கார்த்திகை தீபம் பார்த்து வழிபட்டால் காலம் காலமாக நடைபெறாத காரியங்கள் கூட நடைபெற்று மகிழ்ச்சியைத் தரும்.

**தனுசு ராசியில் புதனின் சஞ்சாரம்!**

நவம்பர் 25 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். நாட்டுப்பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். பணத்தட்டுப்பாடுகள் அகலும். தேகநலனில் ஆர்வம் காட்டி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள். உறவினர்களின் பகை அகலும். உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும்.




**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் டிசெம்பர் 4 ஆம் திகதி மகரத்திற்குச் செல்கின்றார். எனவே இடமாற்றம் ஒரு சிலருக்கு எதிர்பார்த்தபடி அமையும். பயணங்களால் பலன் கிடைக்கும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலத் தகவல் வந்து சேரலாம். வீடு, இடம் வாங்குவதில் இருந்த தாமதங்கள் அகலும். சுபவிரயங்கள் அதிகரிக்கும்.

**கும்பச் செவ்வாயின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 6 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் உங்கள் இராசிக்கு வரும்பொழுது சகோதர வர்க்கத்தினரால் தொழில் வளர்ச்சி கூடும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும். அரசியலில் உள்ளவர்களுக்கு செல்வாக்கு உயரும். புதிய பொறுப்புகள் வந்து சேரலாம். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் கவசம் பாடி அனுமனை வழிபடுவது நல்லது. பௌர்ணமியன்று மலை வலம் வருவது மகத்துவம் தரும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். ஆதாயம் எதிர்பார்த்தபடியே கிடைக்கும். தனாதிபதி குரு தன ஸ்தானத்தைப் பார்ப்பதால் பணப்புழக்கத்திற்கு குறைவு ஏற்படாது. வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்பும் அரவணைப்பும் கூடுதலாக இருக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. பிள்ளைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர. பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல மாற்றங்கள் வந்து சேரும். அஷ்டமத்தில் குரு சஞ்சரித்தாலும் அது பார்க்குமிடம் பலன் தரும் இடம் என்பதால் பயப்படத் தேவையில்லை. வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். கார்த்திகையன்று முருகப்பெருமானை வழிபாடு செய்யுங்கள்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



***சுறுசுறுப்பான உழைப்பின் மூலம் புகழ்பெறும் மீன இராசி நேயர்களே!***

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது குருபகவான் உங்கள் இராசியைப் பார்ப்பது யோகம்தான். நேச மனப்பான்மை கொண்டவர்கள் நிழல்போல் தொடர்ந்து வந்து உங்களுக்கு உதவி செய்வர். பணவரவு திருப்திகரமாக இருக்கும். தொழில் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும், வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்ளவும் உகந்த நேரம் இது.

குருவினுடைய நேரடிப் பார்வைபடும் பொழுதும் இராசியில் பதியும் பொழுதும் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும் அல்லவா? எனவே புதிய முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும் நேரமிது.

புகழ்மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பர். சம்பள உயர்வு, உத்தியோக உயர்வு போன்றவை உங்களைத் தேடி வருவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

ஒரு சிலருக்கு பணிபுரியும் இடத்திலிருந்தே வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பர். பொறுமைக்கு பரிசு கிடைக்கும் நேரமிது. 6 இல் ராகு இருந்து கேந்திரத்தில் குரு இருந்தால் அஷ்டலட்சுமி யோகம் உண்டாகும். அந்த அமைப்பு இப்பொழுது உள்ளது. இந்த நேரத்தில் நீங்கள் செய்யும் முயற்சி அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.

மாதத்தொடக்கத்தில் உள்ள கிரக நிலைப்படி பார்க்கும் பொழுது தனாதிபதி உச்சம் பெற்றிருப்பதும் உச்சம் பெற்ற செவ்வாயைக் குரு பார்ப்பதும் நன்மை தான். குரு சந்திரனை பார்க்கும் அமைப்பில் உள்ளதும் நன்மை தான். குரு மங்கள யோகம், குருச்சந்திர யோகம் செயற்படும் அமைப்பு உள்ளது. எனவே அப்படிப்பட்ட யோகம் தரும் குருவை வழிபட்டால நம்பிக்கைகள் வீண் போகாது. வார வழிபாடாக வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருபகவானை வழிபட்டு

## நல்லது நடக்கும்!

வருவது நல்லது.

மேலும் திருக்கார்த்திகைத் திருநாளில் விரதமிருந்து முருகப்பெருமானை வழிபட்டு வருவது நல்லது. குமரன் வழிபாடு குறைகளைத் தீர்க்கும்.

**தனுசு புதனின் சஞ்சாரம்!**

நவம்பர் 25 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் செல்கிறார். 4, 7 இற்கு அதிபதி 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். தொழில் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைக்கும் நேரமிது. வீடு வாங்க, விற்க எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செல்லும். குறிப்பாக குழந்தைகளின் முன்னேற்றம் கருதி முக்கிய புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**




டிசெம்பர் 4 ஆம் திகதி மகர இராசிக்குச் சுக்ரன் செல்கின்றார். 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வரலாம். உடன்பிறப்புகள் உங்களுக்குப் பகையாக மாறலாம். அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்தாலும் கூட அது தீமையாகத் தெரியும். குழந்தைகளால் பிரச்சினைகள் வராமல் பார்த்துக் கொள்ளவும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது.

**கும்பச் செவ்வாயின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 6 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். தனாதிபதி விரய ஸ்தானத்திற்கு சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. வீண் விரயங்களும் அதிகரிக்கும். சுபவிரயங்களும் உருவாகும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். பணப்பற்றாக்குறை ஏற்படும். வீடு, இடம் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். இம் மாதம் தட்சிணாமூர்த்தி வழிபாடு சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் குரு பார்வையால் குழப்பங்கள் அகலும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம கூடும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும். தடைப்பட்ட கல்வி முயற்சி தொடரவேண்டுமென்று விரும்புவீர்கள். எதிர்பாரா்த தன லாபம் உண்டு. குழந்தைகளின் எதிர்கால முன்னேற்றம் பற்றிச் சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணிநிரந்தரமாகும். செவ்வாய் தோறும் விரதமிருந்து முருகப்பெருமானை வழிபடுவது நல்லது. வாரவழிபாடாக வியாழக்கிழமை தோறும் சிவாலயம் சென்று தென்முகக் கடவுளை வழிபட்டால் நன்மைகள் கிடைக்கும்.

*(முற்றும்)*

# ‘தூய்மை இந்தியா’ போன்ற திட்டங்கள் நாட்டைப் பொருளாதார வல்லரசாக்கும்

## ஜனாதிபதி பிரணாப் நம்பிக்கை



**(டில்லி)**

**‘தூய்மை இந்தியா, டிஜிற்றல் இந்தியா’ போன்ற மத்திய அரசின் திட்டங்கள் இந்தியாவைப் பொருளாதார வல்லரசாக மாற்றும் என்று இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.**

சண்டீகரில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை விவசாயத் தொழில்நுட்பக் கண்காட்சியை தொடக்கி வைத்து, உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், நவீன தொழில்நுட்பங்கள் மூலம் பயிர் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். நம்மிடமுள்ள அனைத்து வளங்களையும் திறம்படப் பயன்படுத்துவதுடன், விவசாய உற்பத்தியை அதிகபட்ச அளவுக்கு உயர்த்த வேண்டும்.

மிகச் சிறப்பான நீர்ப்பாசன தொழில்நுட்பங்கள் மூலம் விவசாய உற்பத்தியில் இஸ்ரேல்சாதனை படைத்துள்ளது.

அவர்களிடம் நாம் பாடம் கற்க வேண்டும். கடந்த 15 ஆண்டுகளாக, இந்தியா நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைந்து வருகிறது.

உலக அளவில் பொருளாதார மந்த நிலை நிலவும் போதும், 7.6 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை எட்டியுள்ளோம்.

நம்நாடு சுதந்திரம் அடைந்த போது, பயிர் உற்பத்தி 50 மில்லியன் தொன்களாக இருந்தது. இப்போது, அது 270 மில்லியன் தொன்களாக அதிகரித்துள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக இஸ்ரேல் ஜனாதிபதி ரியூவென் ரிவ்லின் கலந்து கொண்டார்.

மத்திய வேளாண்துறை அமைச்சர் ராதாமோகன் சிங், பஞ்சாப் ஆளுநர் வி.பி. சிங் பத்னோர் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர். (இ-7)

## 59 நாட்கள் சிகிச்சைக்குப் பின்னர் அரைஇட்லி உண்ட முதல்வர் ஜெயா



(சென்னை)

சென்னை அப்பலோ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் தமிழக முதல்வர் ஜெயலலிதா 59 நாட்கள் சிகிச்சைக்குப் பிறகு இட்லி சாப்பிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

தமிழக முதல்வரும் அ.தி.மு.க பொதுச்செயலாளருமான ஜெயலலிதா திடீர் உடல்நலக்குறைவு காரணமாக கடந்த செப்டெம்பர் 22ஆம் திகதி சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பலோ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சென்னை வந்த லண்டன் வைத்தியர் ரிச்சர்ட் பீலே, டில்லி எய்ம்ஸ் வைத்தியசாலையின் நுரையீரல் சிகிச்சை நிபுணர் ஜி.கில்னானி, வைத்திய நிபுணர் அஞ்சன் ட்ரிக்கா, இதய சிகிச்சை நிபுணர் நிதிஷ் நாயக் ஆகியோரும் முதல்வருக்கு சிகிச்சை அளித்தனர்.

முதல்வருக்கு தொடர்ந்து அளிக்கப்பட வேண்டிய சிகிச்சைகள் குறித்து ஆலோசனைகளை வழங்கிவிட்டு சென்றனர். அதன்படி, அப்பலோ வைத்தியசாலை வைத்தியர்கள் குழுவினர், முதல்வருக்கு சிகிச்சை அளித்து வந்தனர்.

வைத்தியர்களின் தீவிர சிகிச்சையால் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த முதல்வர் இரண்டாவது முறையாக தனி வார்ட்டுக்கு மாற்றப்பட்டார்.

தனி வார்டில் உள்ள முதல்வரைக் கண்காணித்து தேவையான சிகிச்சைகளை வைத்தியர்கள் அளித்து வருகின்றனர். பெண் பிசியோ தெரபி நிபுணர் ஒருவரும் முதல்வருக்கு தொடர்ந்து பிசியோதெரபி சிகிச்சை அளித்து வருகிறார்.

முதல்வரின் உடல்நிலை பற்றி வைத்தியர்கள் தெரிவிக்கையில், “முதல்வரின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஓரளவு இயற்கையாக சுவாசிக்கத் தொடங்கியதால், அவருக்குப் பொருத்தப்பட்டிருந்த செயற்கை சுவாசக்கருவிகள் அகற்றப்பட்டன. ஆனால், அவரது தொண்டைப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த டிராகோடமி டியூப் மட்டும் அவசரத் தேவைக்காக அகற்றப்படவில்லை.

தற்போதும் தேவைப்படும் போது முதல்வருக்கு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு வருகிறது. முதல்வருக்கு திரவ உணவு மட்டுமே கொடுக்கப்பட்டது. உணவு முறையில் மாற்றம் செய்யப்பட்டு கொஞ்சம் திட உணவும் கொடுக்கப்பட்டு வந்தது.

முதல்வருக்கு சாப்பிட இட்லி கொடுக்க வைத்தியர்கள் முடிவு செய்தனர். அதனபடி முதல்வருக்கு சாப்பிட ஒரு இட்லி கொடுக்கப்படடது. அவரது தொண்டைப் பகுதியில் செயற்கை சுவாசத்திற்கான கருவி பொருத்தப்பட்டுள்ளதால், அவரால் அரை இட்லி மட்டுமே சாப்பிட முடிந்தது.

தினமும் இட்லி போன்ற திட உணவுகளைக் கொஞ்சம் கொஞ்சமாக முதல்வருக்கு சாப்பிடக் கொடுக்க வைததியர்கள் முடிவு செய்துள்ளனர்” என்றனர். (இ-7)

## பிரித்வி-II ஏவுகணையை இருமுறை வெற்றிகரமாக பரிசோதித்தது இந்தியா




ஆயிரம் கிலோ எடையுள்ள அணு ஆயுதங்களை சுமந்தபடி பாய்ந்து சென்று 350 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக் கும் ஆற்றல் கொண்ட பிரித்வி-II ஏவுகணை ஒடிசா மாநிலத்தில் உள்ள சாந்திப்பூர் பகுதியில் இருந்து நேற்று இருமுறை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

இந்தியாவின் பாதுகாப்புக்காக பிரித்வி ரக ஏவுகணைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் பிரித்வி-II வகை ஏவுகணை சுமார் 350 கிலோ மீற்றர் தூரம் பாய்ந்து சென்று தாக்கும் சக்தி கொண்டது.

பிரித்வி-II ரக ஏவுகணைகள் இராணுவ பயன்பாட்டுக்காக ஏற்கனவே சேர்க்கப்பட்டு விட்டது. என்றாலும் அது அடிக்கடி நவீனமாக்கப்பட்டு, சோதனை செய்யப்பட்டு வருகிறது. அந்த வகையில் நேற்று பிரித்வி-II ரக ஏவுகணை சோதித்துப் பார்க்கப்பட்டது.

இந்திய இராணுவத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கழகம் பிரித்வி-II ஏவுகணையில் தற்போது சில மாற்றங்களை செய்துள்ளது. அதன்படி பிரித்வி-II ஏவுகணைகளில் 500 முதல் 1000 கிலோ எடை கொண்ட வெடிபொருட்களை வைத்து பயன்படுத்த முடியும். இது 350 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இலக்கை வெற்றிகரமாக தாக்கி அழிக்கும் ஆற்றல் கொண்டது.

அணு ஆயுதங்களையும ஏந்திச் செல்லும் இந்த ஏவுகணைகள் திரவ எரிபொருளால் இயங்கும் இரட்டை இயந்திரங்களை கொண்டது. இதனால் 350 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள திட்டமிட்ட இலக்கை துல்லியமாகவும், வெற்றிகரமாகவும் தாக்கி அழிக்கும் ஆற்றல் கொண்டது.

இந்நிலையில் ஒடிசா மாநில கடலோர நகரமான பலசோரில் உள்ள சாந்திப்பூர் ஏவுதளத்தில் இருந்து பிரித்வி-II ஏவுகணை நேற்றுக் காலை 9.35 மணியளவில் இருமுறை விண்ணில் செலுத்தி பரிசோதிக்கப்பட்டது.

இந்த இரு சோதனைகளும் வெற்றிகரமாக நடந்தது. குறிப்பிட்ட இலக்கை அந்த ஏவுகணை வெற்றிகரமாக தாக்கியது என இந்திய இராணுவத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## கருத்துச் சுதந்திரத்தை இந்தியாவிடம் கற்கவும்

கருத்து சுதந்திரத்திற்கான உண்மையான அர்த்தத்தை அண்டை நாடுகள் இந்தியாவிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என பங்களாதேஷ எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரின் தெரிவித்துள்ளார்.

‘எக்ஸைல்’ (நாடு கடத்தல்) என்ற புத்தகத்தை தஸ்லிமா நஸ்ரின் எழுதியுள்ளார். அதில் பங்களாதேஷில் இருந்து இந்தியா வந்ததும் 7 மாதங்கள் தொடர்ச்சியாக தான் சந்தித்த போராட்டங்கள், விரட்டியடிக்கப்பட்ட சம்பவங்கள், ஆத்திரத்துடன் கழித்த நாட்கள், வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட துயரங்கள் என அனைத்து கசப்பான விடயங்களையும் பதிவு செய்துள்ளார்.

மிரட்டல்கள், தடைகள், கட்டுபபாடுகள் இருந்தாலும், மீணடும் இந்தியா திரும்ப ஆசைப்படுவதாகவும் ஒருநாள் சுதந்திரமான சிந்தனைக்கு இந்தியாவில் ஊக்கம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் “இந்தியாவில் தான் நான் வாழ விரும்புகிறேன். மற்றவர்களுக்கு முரணாக இருந்தாலும் எனது கருத்துக்களை சுதந்திரமாக தெரிவிக்க அனுமதிக்க வேணடும்.

கருத்துச் சுதந்திரம் என்றால் என்னவென்றே அறியாத அண்டை நாடுகள், இந்தியாவிடம் இருந்து அதன் அர்த்தத்தை கற்றுக்கொள்ள வேண்டும்” என தெரிவித்துள்ளார். (இ-7)

## ரவிசங்கருக்கு அமைதி விருது



உலக அமைதிக்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட ஆன்மீக குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கருக்கு சர்வதேச அமைதி விருது இந்தியாவின் தலைநகர் டில்லியில் வழங்கப்பட்டது.

டில்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்த விழாவில் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கருக்கு டாக்டர் நாகேந்திர சிங் சர்வதேச அமைதி விருதை மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வழங்கினார்.

நெதர்லாந்தின் தி ஹேக் நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதியாக பதவி வகித்த முதல் இந்தியரான நாகேந்திர சிங்கின் நினைவாக இந்த விருது வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சீனாவில் பனிப்புயல் எச்சரிக்கை





சீனாவின் சில பகுதிகளில் பனிப்புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் யாரும் வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். சீனாவில் உள்ள இன்னர் மங்கோலியா, பீஜிங், டியான் ஜின், ஹெபெய் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் கடுமையான பனிப்பொழிவு காணப்பட்டது. இது நேற்று வரை தொடர்ந்தது என அங்குள்ள தேசிய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தவிர, பீஜிங், ஹெபெய் உள்ளிட்ட பகுதிகளில் பனிப்புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மத்திய மற்றும் கிழக்கு சீனப் பகுதிகளில் நேற்று முன்தினம் முதல் நாளை மறுதினம் 24ஆம் திகதி வரை வெப்பநிலை 6 முதல் 10 டிகிரி செல்சியசாக இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சீனாவில், வானிலையின் தன்மையை குறிக்க, சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், நீலம் என நான்கு அடுக்கு வண்ணக் குறியீட்டு முறை பின்பற்றப்பட்டு வருகிறது. இதில் மிகவும் மோசமான வானிலைக்கு "சிவப்பு" குறியீடு பயன்படுத்தப்படும். தற்போது சீனாவில் "நீலம்" குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளது.

எனவே வானிலை பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது. இருப்பினும், மக்கள் குளிரின் தாக்கத்தில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளத் தேவையான வசதிகளை செய்து கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர். தேவையில்லாமல் வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சின்னா பின்னமாகும் சிரியாவின் அலெப்போ



(அலெப்போ)

சிரியாவின் கிழக்குப் பகுதியில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் 6 பேர் கொல்லப்பட்டுள்ள நிலையில், அந்நகரத்தின் மேற்கே அரசின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் வீசிய ஷெல் குண்டுத் தாக்குதலால் 7 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை கிளர்ச்சியாளர்களின் குண்டுவீச்சு அலெப்போவின் மேற்கில் இருக்கும் ஃபர்கான் மாவட்டத்திலுள்ள பாடசாலையைத் தாக்கியதில் இந்த 7 குழந்தைகளும் கொல்லப்பட்டுள்ளதாக சிரியாவின் அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

குளோரின் வாயு நிரம்பிய பேரல் குண்டுகள் வீசப்பட்ட பிறகு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளதாக அலெப்போவின் கிழக்கிலுள்ள செயற்பாட்டாளர்களும் வைத்தியர்களும் தெரிவித்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் சிரியாவுக்கான சிறப்பு தூதுவரோடு நடைபெற்றதொரு கூட்டத்தில், அலெப்போவின் கிழக்குப் பகுதியில் தன்னாட்சி நிர்வாகம் அமைக்கும் முன்மொழிவை சிரியாவின் வெளியுறவு அமைச்சர் வலீடு அல் மோலெம் நிராகரித்து விட்டார். (இ-7)

# அமெரிக்காவின் நிலைப்பாடு குறை மதிப்பிற்கு உட்படும்

## ஜனாதிபதி ஒபாமா அறிவுறுத்து



டிரான்ஸ் பசுபிக் கூட்டுறவு வர்த்தக ஒப்பந்தத்தை கொண்டு முன்னோக்கி நகரவில்லை என்றால் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடு குறை மதிப்பிற்கு உட்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பெருவில் இடம்பெற்ற ஆசிய பசுபிக் பொருளாதார கூட்டு மாநாட்டின் நிறைவு நாளான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களை சந்தித்த போதே ஒபாமா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பெருவின் தலைநகர் லிமாவில் ஒரு வாரமாக இடம்பெற்ற ஆசிய- பசுபிக் பொருளாதார கூட்டுறவு மாநாட்டின் போது, சுதந்திர வர்த்தக எதிர்காலம் குறித்தும் குறிப்பாக டிரான்ஸ் பசுபிக் கூட்டுறவு வர்த்தக ஒப்பந்தம் குறித்தும் பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்டன.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவாகியதை அடுத்தே இந்த சந்தேகங்கள் வலுப்பெற்றுள்ளன. இதற்கு டிரான்ஸ் பசுபிக் கூட்டுறவு ஒப்பந்தம் குறித்து டொனால்ட் ட்ரம்ப் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டமையே காரணமாக உள்ளது.

இந்நிலையில் ஆசிய- பசுபிக் பொருளாதார கூட்டு மாநாட்டின் இறுதியில் செய்தியாளர்களை சந்தித்து கலந்துரையாடிய பராக் ஒபாமா, டிரான்ஸ் பசுபிக் கூட்டு ஒப்பந்த பங்காளிகளுடன் நேற்று முன்தினம் சந்திப்பு இடம் பெற்றது. இந்த ஒப்பந்த விவகாரத்தில் எமது உறுதிப்பாட்டை மேலும் உறுதிப்படுத்தும் ஒரு வாய்ப்பாக சந்திப்பு அமைந்திருந்தது.

எங்களுடைய கூட்டாளர்கள் டிரான்ஸ் பசுபிக் கூட்டு உடன்படிக்கையுடன் முன்னோக்கி செல்ல வேண்டும் என்பதில் தெளிவாக உள்ளனர். பல நாடுகள் டிரான்ஸ் பசுபிக் கூட்டு உடன்படிக்கையில் சேர்வதை உறுதி செய்யத் தொடங்கியுள்ளன.

அதேநேரம், குறிப்பிட்ட பிரதேசங்களில் குறைந்த தரத்துடனான குறைவான இலட்சிய வர்த்தக ஒப்பந்தம், தொழிலாளர்களுக்கு குறைவான பாதுகாப்பு, சூழலியல் குறைவான பாதுகாப்புக்கள் எனப் பல்வேறு எதிர்ப்புக்குரல்களையும் ஏற்கனவே கேட்டு வருகின்றோம்.

அத்தகைய ஒப்பந்தங்கள் அமெரிக்க தொழிலாளர்கள் மற்றும் தொழில் சந்தைகளில் விலக்கப்படும். ஆகவே இத்தகைய காரணங்களால் அமெரிக்க பொருளாதாரத்திற்கு டிரான்ஸ் பசுபிக் கூட்டு உடன்படிக்கை சாதகமானது என்பதுடன் அமெரிக்க தொழில் சந்தை மற்றும் அமெரிக்க தொழிலாளர்களுக்கும் சாதகமானதே. டிரான்ஸ் பசுபிக் கூட்டு உடன்படிக்கையுடன் முன்னோக்கி செல்லவில்லை எனில் அமெரிக்கா குறைமதிப்பிற்கு உட்படும் என்று தெரிவித்துள்ளார். (இ-7)

# 78,564 காகித யானைகள் அமெரிக்காவில் கின்னஸ் சாதனை






அமெரிக்காவில் உள்ள விலங்கியல் பூங்காவில் ஒரே நேரத்தில் 78 ஆயிரத்து 564 காகித யானைகள் காட்சிக்கு வைக்கப்பட்ட நிகழ்ச்சி, கின்னஸ் சாதனையில் இடம் பெற்றது. இதற்கு முன் பிரிட்டனைச் சேர்ந்த விலங்குகள் நல அமைப்பு ஒரே நேரத்தில் 33,764 காகித யானைகள் காட்சிப்படுத்தியதே சாதனையாக இருந்தது.

உலகளவில் ஆண்டுதோறும் 35 ஆயிரம் யானைகள் வேட்டையாடப்படுகின்றன. இதனால் யானைகளை அழிவில் இருந்து பாதுகாக்கும் விதமாக அமெரிக்க வனவிலங்கு நல அமைப்பு சார்பில் காகித யானைகள் செய்யும் நிகழ்ச்சி நடந்தது.

அமெரிக்காவில் காகிதங்களில் உருவங்கள் செய்வதற்கு "ஓரிகாமி" என்று பெயர். பிராங்ஸ் வனவிலங்கு பூங்காவில் ஒரே நேரத்தில் 78 ஆயிரத்து 564 காகித யானைகள் காட்சிக்கு வைக்கப்பட்டன. இதற்காக அமெரிக்காவில் உள்ள 50 மாகாணங்களிலிருந்தும், 40 வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமானோர் காகித யானைகள் செய்து கொண்டு வந்தனர். இதில் 109 வயது பெண்மணி உட்பட பலர் பங்கேற்றனர். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் ஜான் கூறுமபோது, "உலகளவில் தினமும 96 யானைகள் வேட்டையாடப்படுகின்றன. இதைத் தடுக்க வேண்டும். யானைகளை பாதுகாக்க, உலகின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தீவிரவாதிகள் தாக்குதல் உயிரிழந்த இளைஞனுக்கு அன்னை தெரேசா விருது



(டாக்கா)

பங்காளதேஷில் தீவிரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்த இளைஞனுக்கு அன்னை தெரேசா விருது வழங்கப்பட்டது.

பங்காளதேஷ் தலைநகரம் டாக்காவில் வெளிநாட்டு தூதரக அலுவலகங்கள் உள்ள பகுதியில் ஹோலி கபே என்ற ஹோட்டல் உள்ளது. கடந்த ஜூலை முதலாம் திகதி அங்கு புகுந்த ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

அதில் பங்காளதேஷத்தைச் சேர்ந்த பராஷ் அயாஷ் உசேன் என்ற இளைஞன் கொல்லப்பட்டார். பங்காள தேஷத்தைச் சேர்ந்தவரான இவரை ஹோட்டலை விட்டு வெளியேற தீவிரவாதிகள் அனுமதித்தனர். ஆனால் தன்னுடன் வந்திருந்த வெளிநாட்டு நண்பர்களையும் விடுவிக்கும்படி பராஷ் கேட்டுக் கொண்டார்.

அதற்கு மறுத்த தீவிரவாதிகள் அவரையும் சுட்டுக் கொன்றனர். அவரது உயிர்த் தியாகத்தைப் போற்றி கௌரவிக்கும் வகையில் அவருக்கு அன்னை தெரேசா நினைவு சர்வதேச விருது வழங்கப்படுகிறது.

இந்த விருதை 'ஹார்மோரி' அறக்கட்டளை தலைவர் ஆபிரகாம் மதாய் மும்பையில் நடந்த விழாவில் பராஷ் அயாஷ்உசேனின் பெற்றோரிடம் வழங்கினர்.

பராஷ் அட்லாண்டாவில் உள்ள எமோரி பல்கலைக்கழத்தில் ஒக்ஸ்போர்ட் கல்லூரியில் படித்தார். கோடை விடுமுறைக்காக அமெரிக்காவில் இருந்து பங்காள தேஷம் வந்திருந்த போது தீவிரவாதிகளின் தாக்குதலுக்குப் பலியானார்.

இதற்கு முன்பு நோபல் பரிசு பெற்ற பாகிஸ்தானின் மலாலா யூசுப்சாய், திபெத் பௌத்த மதத் தலைவர் தலாய் லாமா, மலேசிய முன்னாள் பிரதமர் டாக்டர் மகாதீர் முகமது உள்ளிட்டோர் அன்னை தெரேசா விருது பெற்றுள்ளனர். மரணம் அடைந்த பின்னர் இந்த விருது பெறும் முதல் நபர் பராஷ் அயாஷ் உசேன் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


# இனவாதம், பிரிவினைவாதம் என்பவற்றை முற்றாக ஒழிப்பது பொலிஸாரின் கடமை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**இனவாதம் மற்றும் பிரிவினை வாதத்தை முழுமையாக இல்லாதொழிப்பது தொடர்பில் பொலிஸாருக்கு முக்கிய கடமை இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**





மேலும் ஆசிய பிராந்தியத்தின்சிறந்தபொலிஸ்சேவையாக இந்த நாட்டு பொலிஸ் சேவை தரம் உயர்த்தப்படும் என்று பிரதமர் தெரிவித்தார்.

களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் அலுவிகாரை விளையாட்டு மைதானத்தில் பயிலுநர் பயிற்சியை முடித்து வெளியேறியவர்களுக்காக நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர், ஒற்றுமையை வலியுறுத்தி நாட்டின் தனித்துவத்தை நிலைநாட்டுவதில் இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விசேட பொறுப்பு காணப்படுகிறது.

தமிழ் ,சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பேசக்கூடிய உத்தியோகத்தர்கள் இந்த நாட்டுக்கு மிக அவசியம்.

21 ஆம் நூற்றாண்டுக்கு பொருத்தமான அனைத்து அம்சங்களைக் கொண்ட ஆசிய பிராந்தியத்தின் சிறந்த பொலிஸ் சேவையாக இந்த நாட்டு பொலிஸ் சேவை மாற்றியமைக்கப்படும் என்று குறிப்பிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, குற்றத்தடுப்பு விடயம் தொடர்பில் கூடுதலான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டிய தன் அவசியத்தையும் சுட்டிக் காட்டினார். இதற்காக விசேட பொலிஸ் பல்கலைக்கழகம் ஒன்றும் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பொலிஸ் சேவையில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது தொழிலை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு அவர்களுக்கான சேமநலன் விடயங்களிலும் கூடுதலாக அக்கறை செலுத்தப்பட வேண்டும் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# மீண்டும் இனவாத உணர்வுகள் தீவிரம் மனித உரிமை அமைப்புக்கள் கவலை

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் இனவாத உணர்வுகள் தீவிரமடைய தொடங்கியுள்ளமை தொடர்பில் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன.

இதனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். ஜெனிவா தீர்மானம் மூலம் அரசாங்கம் தன்னை நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலுக்கு அர்ப்பணித்துள்ளது.

அண்மைய நாட்களில் நாங்கள் அவதானிக்கக்கூடியதாகவுள்ள ஆபத்தான உரைகளை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் அதிகாரிகளுக்குள்ளது என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் போன்றவற்றுக்காக தன்னை அர்ப்பணித்த நாட்டில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமில்லை எனவும் தெரிவித்தார்.

உலகின் பல பகுதிகளில் பகைமை பேச்சு மற்றும் சகிப்புத்தன்மையின்மை அதிகரித்து வருவதாக தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவுக்கான இயக்குநர், அரசுகள் அனைத்து மக்களும் மனித உரிமைகளை அனுபவிப்பதற்கு உள்ள உரிமை குறித்த தங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார். (இ-7-10)

# ஒன்பது ஆண்டுகளில் 18 பில்லியன்கள் இழப்பைச் சந்தித்துள்ளது மிஹின்லங்கா

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட மிஹின்லங்கா விமான சேவை, ஒன்பது ஆண்டுகளில் 18 பில்லியன் ரூபா இழப்பைச் சந்தித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

2007ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த விமான சேவை ஒருபோதும் இலாபத்தை ஈட்டவில்லை என்றும் கடந்த மார்ச் 31 ஆம் திகதி வரையில், 17.27 பில்லியன் ரூபா நட்டத்தையே சந்தித்திருப்பதாகவும் அதிகாரபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மிஹின் லங்கா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், கடந்த 9 ஆண்டு கால நிதி செயற்பாடுகள் குறித்து விபரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, 2006-07 காலப் பகுதியில், 195 மில்லியன் ரூபாவையும் 2007-08 காலப்பகுதியில் 3161 மில்லியன் ரூபாவையும் 2008 - 2009 காலப்பகுதியில் 1300 மில்லியன் ரூபாவையும் 2009-10 காலப்பகுதியில் 1221 மில்லியன் ரூபாவையும் 2010-11 காலப்பகுதியில் 940 மில்லியன் ரூபாவையும் 2011-12 காலப்பகுதியில் 1968 மில்லியன் ரூபாவையும் 2012-13 காலப்பகுதியில் 3293 மில்லியன் ரூபாவையும் 2013-14 காலப் பகுதியில் 2592 மில்லியன் ரூபாவையும் 2014-15 காலப் பகுதியில் 1406 மில்லியன் ரூபாவையும் 2015-16 காலப் பகுதியில் 1196 மில்லியன் ரூபாவையும் மிஹின்லங்கா விமான நிறுவனம் இழந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

தொடர் நட்டத்தை அடைந்து வந்த மிஹின் லங்கா நிறுவனத்தின் அனைத்து விமான சேவைகளும் கடந்த ஒக்டோபர் 31 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### செய்யும் தொழிலை மதிப்பதுண்டா?

சிலர் பொழுது எப்படாவிடியும் என்று காத்திருந்து நான் செய்வதெல்லாம் ஒரு தொழிலா? நான் செய்வதெல்லாம் ஒரு வேலையா? மனுஷன் பார்ப்பானா இதை? என்று தாங்கள் செய்யும் தொழிலைத் திட்டுவார்கள். இப்படியே பேசிக் கொண்டு செய்வதையும் சரிவரச் செய்யமாட்டார்கள்.

அவனைப் பாருங்கள்– எப்படி இருக்கிறான்! இவரைப் பாருங்கள் எப்படி இருக்கிறார் என்று உதாரணம் காட்டிப் பேசுவார்கள். ஆனால் அவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு முன்னேற மாட்டார்கள். மாற்று வழிகளைப் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள்.

எந்தத் –தொழில் –வியாபாரம் –வேலையாக இருந்தாலும் சரி , அதை மனிதன் நேசிக்க வேண்டும். இந்த ஈடுபாட்டை வளர்த்துக் கொண்டால் அதன் மீது மதிப்பு ஏற்படும்.

அப்படித் தொழில் மீது நாம் வைக்கும் மதிப்பு நம்மை நிச்சயம் உயர்த்தும்.

சினிமா உதாரணம் காட்டுகிறேன் என்று யாரும் சண்டைக்கு வரக் கூடாது. சிவாஜி கணேசனின் அபார நீடித்த வளர்ச்சிக்கு இரண்டே காரணங்கள் தான் இருக்க முடியும். ஒன்று திறமை , இரண்டாவது அவர் தன் தொழிலை மதிப்பது அல்லது நேசிப்பது. இன்னும் சொல்லப் போனால் அவரது நேசிப்புத்தான் அவரது திறமைக்குக் காரணம்.

ஒரு சேட்டு கடைக்குப் பேல் பூரி சாப்பிடப் போயிருந்தேன். அந்த முதலாளி அப்போது தான் கடைக்குள் நுழைந்தார். நுழைந்த மாத்திரத்தில் அந்தக் கடையின் படிக்கட்டைத் தொட்டு (ஒரு – புழுதி– அழுக்கு –மண்) கண்களில் ஒற்றிக் கொண்டார்.என் உடம்பு சிலிர்த்துப் போனது. தொழில் செய்யும் இடத்தை –வாடிக்கையாளர்களின் காலடி மண்ணை ஒருவன் கண்களில் ஒற்றிக் கொள்கிறான் என்றால், அது அந்த மனிதனை உயர்த்தாமல் வேறென்ன செய்யும்?

பல வெளிநாட்டுக்காரர்களுடன் பழகியிருக்கிறேன், 5 நாட்கள் தொழில் அல்லது வேலை என்றால் உண்மையாக உழைக்கிறார்கள்.அந்த ஐந்து நாட்களில் குடும்பத்தை இரண்டாம் பட்சமாக நினைக்கிறார்கள். ஆறாம் நாள், ஏழாம் நாளோ குடும்பத்தைப் பற்றி மட்டுமே சிந்தனை. எந்த நேரத்தில் எது முக்கியம் எனத் தெரிந்து வைத்துக் கொண்டு அதற்கு முக்கியத்துவம் தருகிறார்கள். நம்மில் பலரோ தொழில் செய்யும் போது வீட்டில் கவனம். வீட்டில் இருக்கும் போதோ தொழிலில் கவனம். எப்படி உருப்பட முடியும்?

இலங்கை போயிருந்த போது என் நண்பரின் கடையில் அமர்ந்திருந்தேன். அவருக்கு ஒரு போன் வந்தது, எடுத்தார். யாரோ பேசினார்கள். கேட்டுக் கொண்டே இருந்தார். ஒரு நிமிடம் வரை இவர் பேசவே இல்லை. வை போனை! என்று முரட்டுத் தனமாகச் சொன்னார். யார்? என்றேன், என் மனைவி என்றார். தொடர்ந்து பிசினஸ் நேரத்தில் கொஞ்சல் என்ன வேண்டியிருக்கிறது! என்றாரே பார்க்கலாம்!

என்னுடைய எழுத்தாள நண்பர் ஒருவர் குளிக்காமல், பல் துலக்காமல் பேனாவைத் தொடமாட்டார்.அந்தப் பயபக்தி அவரை நன்கு வளர்த்திருக்கிறது.

உங்கள் வட்டத்தில் விடுவிடுவென வளர்பவர்களையெல்லாம் எண்ணிப் பாருங்கள். அவர்கள் நிச்சயம் தொழிலை நேசிப்பவர்களாகவும் மதிப்பவர்களாகவும் தான் இருக்க முடியும். தொழிலை அலட்சியப்படுத்துகிறவர்கள் வளர்ந்ததாகச் சரித்திரமே இல்லை.

**லேனா தமிழ்வாணன்**


# க.பொ.த. (சா/த) பரீட்சை- 2016
# மாதிரி வினாத்தாள்

விஞ்ஞானம்-II

3 மணித்தியாலம்

03) A.

A, D, E, G, J, L, M, Q, R என்பவற்றால் தரப்பட்டிருப்பது 1 தொடக்கம் 20 வரையிலான அணுவெண்களை அயனாக்கற் சக்தி கொண்ட மூலகங்களுள் தொடர்ச்சியானவை சிலவாகும். தரப்பட்டுள்ள குறியீடுகள் அவற்றின் நியமக்குறியீடுகள் அல்ல. J என தரப்பட்டிருப்பது 2ம் ஆவர்த்தனத்தை சேர்ந்த மூலகமாகும். மேற்படி மூலகங்களின் முதலாம் அயனாக்கற்சக்தி மாற்றமடைவது வரைபாக தரப்பட்டுள்ளது.




i) முதலாம் அயனாக்கற்சக்தி என்பதால் கருதுவது யாது?

.....................................................

ii) அயனாக்கற்சக்தியை அளவிடும் அலகு யாது?

.....................................................

iii) வரைபின்படி ஒரேகூட்டத்தைச் சேர்ந்த மூலகங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

.....................................................

iv) A இலும் பார்க்க E இன் முதலாம் அயனாக்கற்சக்தி குறைவாகக் காணப்படுவதற்கு காரணம் யாது?

B.

$_{20}X$ மூலக அணுவொன்றின் திணிவு $6.68 \times 10^{-23}$ g ஆகும்.
(அணுத்திணிவு அலகு = $1.67 \times 10^{-24}$ g)

i) அணுத்திணிவு அலகு என்பதன் கருத்தை விளக்குக.

.....................................................

ii) மூலகம் X இனது சாரணுத்திணிவை கணிக்க


iii) மூலகம் X சேர்வைகளை உருவாக்கும்போது அயன்களை உருவாக்கும். இதன்போது இலத்திரன்களை இழக்குமா? அல்லது ஏற்குமா? பங்கிட்டுக் கொள்ளுமா?

.....................................................

iv) மூலகம் X இனால் உருவாக்கப்படும் அயனின் குறியீட்டை தருக?

C.

தாக்கவீதத்தின்பால் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளை பரிசீலிப்பதற்காக தயார் செய்த ஒழுங்கமைப்புகள் சில வருமாறு




i) மேற்படி ஒழுங்கமைப்பை அடிப்படையாகக் கொண்டு அட்டவணையில் a,b என்பவற்றை நிரப்புக.


| தாக்கவீதத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணி | அக்காரணியை பிரதிபலிக்கும் ஒழுங்கமைப்பு |
|---|---|
| a. | B, C |
| தாக்கிகளின் பௌதிக இயல்பு | b. |

ii) இங்கு உயர்வீதத்தில் தாக்கம் நடைபெறுவது B, C ஆகியவற்றில் எதனில் ஆகும்?

.....................................................

04) A.

கீழே தரப்பட்டுள்ளது மாணவன் ஒருவனால் அமைக்கப்பட்ட மின்சுற்று ஒன்றாகும். இங்குள்ள தடைகள் அனைத்தும் 4Ω கொண்டவையாகும். ஒவ்வொரு மின்கலமும் 1.5V மின்னியக்கவிசை கொண்டவையாகும்.




i) ஆளி S ஐ மூடும்பொழுது சுற்றில் ஆடலோட்ட மின்னோட்டமா? நேரோட்ட மின்னோட்டமா? பாயும்

.....................................................

ii. ஆடலோட்ட மின்னோட்டத்திற்கும் நேரோட்ட மின்னோட்டத்திற்கும் இடையிலான வேறுபாட்டை தருக?

.....................................................

iii) மேற்படி சுற்றில் மொத்தத்தடையை கணிக்க?

....................................

iv) சுற்றில் இணைக்கப்பட்டுள்ள அம்பியர்மானியின் வாசிப்பை கணிக்க?

.....................................................

v. இச்சுற்றில் தடை R2 இற்கு குறுக்கேயான அழுத்தவேறுபாட்டை கணிக்க.

.....................................................

B.

மேசையின்மீது வைக்கப்பட்டுள்ள மரக்குற்றியின்மீது விசையொன்றை பிரயோகிக்கும்போது இயக்கத்திற்கு எதிராக உராய்வு விசையொன்று இரண்டு மேற்பரப்புக்களுக்கும் இடையே தொழிற்படும். இவ்வுராய்வு விசை பொருளின் இயக்கத்திற்கேற்ப மூன்றுவிதமாகும்.
கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறித்த சந்தர்ப்பத்திற்கேற்ற உராய்வு விசையை உரிய கூட்டினுள் குறிப்பிடுக.


| | வாயு | பயன்பாடு |
|---|---|---|
| 1. | ஐதரசன் | காலநிலை அவதான பலூன்களை நிரப்பிக்கொள்ளல் |
| 2. | ஒட்சிசன் | தீயணைப்பதற்கு |
| 3. | காபனீரொட்சைட்டு | உலருணவுப் பொருட்களை பொதிசெய்வதற்கு |
| 4. | நைதரசன் | தகனத்துணையாக |

C.

உருவில் தரப்பட்டிருப்பது ஊஞ்சலின்மீது அசைவின்றி இருக்கும் ஒரு மாணவி ஆகும். அவரது நிறை W ஆகும்.

i. மாணவியின் நிறையினால் a, b இழைகள் வழியே செயற்படும் இழுவை சமமானவை ஆகும்.

இழை a இன் மீதான விசை .......... திசை .........
இழை b இன் மீதான விசை .......... திசை .........





ii) இழைகள் வழியே தொழிற்படும் விசைகளினது விளையுள் விசையையும் திசையையும் தருக?

.....................................................

## பகுதி-II B - கட்டுரை வினாக்கள்

05) A.

இழையங்கள், அங்கங்கள், தொகுதிகள் மூலம் அங்கிகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. பல்வேறு தொகுதிகளினூடாக உயிர்ச்செயற்பாடுகள் ஒன்றுடனொன்று தொடர்புபட்டுள்ளன. உயிர்ச்செயற்பாடுகளின் பொருட்டான சக்தி ATP இனது சிதைவின்மூலம் கிடைக்கச்செய்யும். கீழேயுள்ள படங்களில் A இல் தாவர இழையமொன்றும் B, C, D ஆகியவற்றில் விலங்கு இழையங்களும் தரப்பட்டுள்ளன.




i) A இன் மூலம் தரப்பட்டுள்ள தாவர இழையத்தின் இரு தொழில்களை குறிப்பிடுக?

ii) B, C என்பவற்றின் மூலம் எந்தத் தசையிழையங்கள் பிரதிபலிக்கின்றன என்பதை குறிப்பிடுக.

iii) ATP இனது தொழிற்பாடுகள் இரண்டை குறிப்பிடுக?

iv) உணவுச்சமிபாட்டின்போது புரதச்சமிபாட்டுக்கான நொதியத்தையும் புரதச்சமிபாட்டு விளைவுகளையும குறிப்பிடுக?

B.

மேலே தரப்பட்ட B, C, D ஆகிய இழையங்களுள் சில இச்சைவழி இயக்கத்திற்குரியவை. சில இச்சையின்றிய இயக்கத்திற்குரியவை. இதயத் துடிப்புவீதம் கட்டுப்படுத்தப்படுவது நரம்புத்தொகுதியின் நீள்வளைய மைய விழையத்தினால் ஆகும்.

i) இதயத்துடிப்பின் போதான இதய இயக்க கட்டங்களை குறிப்பிடுக.

ii) மூளியினால் கட்டுப்படுத்தப்படும் 2 செயற்பாடுகளை குறிப்பிடுக?


C.

கலப்பிரிவின் மூலம் உருவாகும் புதிய கலங்களின் கரு கட்டியெழுப்பப்படுவது தாய்க்கலக்கரு பிரிந்து உண்டாகும் நிறமூர்த்தங்களின் மூலமாகும். கலப்பிரிவு இழையுருப்பிரிவு, ஒடுக்கற்பிரிவு என இருவகையானது.

i) ஒடுக்கற்பிரிவுக்கும் இழையுருப்பிரிவுக்கும் இடையிலான வேறுபாட்டை குறிப்பிடுக?

16 ஆம் பக்கம் பார்க்க...

ii) குருதியுறையா நோய் X இலிங்க நிறமூர்த்தத்தில் காவப்படும் பின்னடைவுப் பரம்பரையலகினால் உருவாவது ஆகும். இந்நோய்க்கு காரணமான பரம்பரையலகுகளின் சேர்மானங்களுக்கேற்ப எச்சங்கள் நோயுள்ளவையாக அல்லது நோயற்றவையாக அல்லது காவிகளாக காணப்படலாம். கீழே தரப்பட்டிருப்பது பரம்பரையலகுச் சேர்மானத்திற்கு இணங்க A காவிப்பெண்ணாகும். B, C, D மூலம் பிரதிபலிக்கப்படும் தோற்றவமைப்புக்கள் எத்தகையன? (குருதியுறையா நோய்க்கு காரணமான பின்னடைவுப் பரம்பரையலகு h உம் ஆட்சியான பரம்பரையலகு H எனவும் கொள்க)




A B C D

iii) தோட்டப்பட்டாணித் தாவரத்தின் காய்கள் பச்சைநிறமாக(G), மஞ்சள்நிறமாக(g) காணப்படலாம். மஞ்சளுக்கு பச்சை ஆட்சியானது. பச்சைநிறக் காய்களைக் கொண்ட இதரநுக தாவரங்கள் இரண்டு கலப்பு பிறப்பிற்கு உட்படுத்தியபோது பெறப்படும் எச்சங்களை புனற்றின் சதுரத்தில் குறிக்க?

06) A.

ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்படும் சில அமிலங்களும் காரங்களும் கீழே தரப்பட்டுள்ளன. $HCl, H_2SO_4, NaOH, CH_3COOH, NH_4OH$

i) மேற்படி சேர்வைகளுள் வன்னமிலம் ஒன்றையும் மென்காரம் ஒன்றையும் தெரிவுசெய்க.

ii) நீர்க்கரைசலில் HCl அயனாக்கமடைவதற்கான இரசாயனச்சமன்பாட்டை எழுதுக?

B.

NaOH பளிங்குகள் 4g ஐ நிறுத்தெடுத்து அதனை நீரில் கரைத்து $100cm^3$ கரைசல் தயாரிக்கப்பட்டது.

i) மேற்படி தாக்கம் அகவெப்பத்தாக்கமா? புறவெப்பத்தாக்கமா? உமது விடைக்கான அவதானத்தை தருக?

ii) மேற்படி தாக்கத்தின்போது சூழலுக்கு இழக்கப்படும் சக்தியை குறைப்பதற்காக பயன்படுத்தக்கூடிய ஒழுங்கமைப்பை வரைக?

iii) மேலே தயாரிக்கப்பட்ட NaOH நீர்க்கரைசலின் செறிவை கணிக்க?

(NaOH இன் மூலர்த்திணிவு = $40\ g\ mol^{-1}$)

C.

மூன்று கலவைகள் A, B, C என்பவற்றின்மூலம் தரப்பட்டுள்ளன.

a – மண்ணுடன் கலந்த அரிசி
b – உப்புக்கரைசல்
c – நீரில் கரைந்த அயடீன் கரைசல்


i) மேற்படி கலவைகளின் கூறுகளை வேறுபடுத்திக் கொள்வதற்கான நுட்பங்கள் ஒவ்வொன்று தருக?

ii) மேலே c இல் தரப்பட்டுள்ள கூறை வேறுபடுத்துவதற்காக பயன்படுத்தக்கூடிய சேர்வை யாது?


iii) மேற்படி கலவைகளினுள் ஏகவினக்கலவையை அடையாளம்கண்டு எழுதுக.

D.

ஆய்வுகூடத்தில் உருவாக்கப்பட்ட ஒழுங்கமைப்புக்கள் இரண்டு படங்களில் தரப்பட்டுள்ளன.




உரு - I




உரு - II


i. உரு – I இல் தரப்பட்டுள்ள ஒழுங்கமைப்பு உரு – II இல் தரப்பட்டுள்ள அமிலத்தினுள் அமிழ்த்தப்படும் போது மின்குமிழ் ஒளிரும்.

a. இங்கு நாகத்தகட்டில் நடைபெறும் தாக்கத்திற்கான சமன்பாட்டை தருக?
b. இங்கு செப்புத்தகடு அனோட்டாகவா? கதோட்டாகவா? தொழிற்படும்.

ii) உரு – I இலுள்ள ஒழுங்கமைப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள பல்பகுதியங்கள் இரண்டை பெயரிடுக?

07) A.

குழிவாடி ஒன்றின் அச்சில் சில புள்ளிகள் தரப்பட்டுள்ளன. மேசையின்மீது வைக்கப்பட்டுள்ள இத்தகைய குழிவாடியொன்றின் முன்னால் உரு – II இல் உள்ளவாறு எரியும் மெழுகுதிரியை வைத்தபோது ஆடியுள் சுவாலையின் விம்பத்தை பார்க்கக்கூடியதாக இருந்தது.




உரு - I




உரு - II

i) மேற்படி தோன்றிய விம்பத்தின் இயல்புகள் இரண்டு தருக?


ii) மெழுகுதிரிச்சுவாலை ஆடியிலிருந்து சுவரைநோக்கி அசைக்கப்படுகின்றது. அதன்போது ஆடியில் விம்பம் மறைந்து சுவர்மீது தெளிவற்ற ஒளிச்சுவடு ஆகின்றது. இது தெளிவான விம்பமாகும்வரை மெழுகுதிரி சுவரைநோக்கி அசைக்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் சுவாலையின் விம்பத்தை வரைந்து காட்டுக?

iii) மேலே ii இற்குரிய சந்தர்ப்பத்தில் விம்பம் தோன்றுவதைக்காட்ட கதிர்வரிப்படம் வரைக?

iv) இவ்வாறு பெறப்படும் பிரகாசமான விம்பத்தின் இரு இயல்புகளை தருக?

B.

படத்தில் தரப்பட்டிருப்பது நீர்நிலை ஒன்றிலுள்ள ஓடமாகும். அதன் நிறை 2000N ஆகும். அதில் 50kg திணிவுடைய நால்வர் உள்ளனர்.




i) நீரினால் ஓடத்தின்மீது உறிஞ்சப்படும் மேலுதைப்பை கணிக்க?

ii) மேற்படி சந்தர்ப்பத்தில் ஓடம் 40cm அமிழ்ந்திருக்குமாயின் ஓடத்தின் அடியிலுள்ள புள்ளியொன்றில் நீரினால் உறிஞ்சப்படும் அமுக்கத்தை கணிக்க?

iii) இவ்வோடம் நீர்நிலையின் ஓரிடத்திலிருந்து கரையைநோக்கி நேர்கோட்டுப் பாதையில் பயணிக்கின்றது. ஓடத்தின் பயணத்திற்கு எடுத்த கால அளவு 5 நிமிடங்கள் ஆகும். ஓடத்தின் சராசரிவேகம் $2ms^{-1}$ ஆயின் ஓடம் பயணம் செய்த தூரத்தைக் காண்க?

iv) ஓடம் சீரானவேகத்தில் பயணம் செய்ததாக கொண்டு ஓடத்தின் இயக்கத்திற்குரிய இடப்பெயர்ச்சி - நேர வரைபை வரைக?

C.

i) அலைகளை பொறிமுறை அலைகள், மின்காந்த அலைகள் என எப்பண்புகளை அடிப்படையாகக் கொண்டு வேறுபடுத்துவது?

ii) அலைகளின் அலைநீளத்தால் தீர்மானிக்கப்படும் ஒலியின் சிறப்பியல்பு எது?

D.

சூடாக்கப்பட்ட பொருளொன்றின் வெப்பநிலையை இரச வெப்பமானியைப் பயன்படுத்தி அளவிடமுடியும்.

i) பொருளின் வெப்பநிலையை அளப்பதற்காக வெப்பமானியின் குமிழ் பொருளினுள் அமிழ்த்தப்படுவதுண்டு. இதன்போது பொருளிலிருந்து வெப்பமானியின் குமிழினூடாக இரசத்தைநோக்கி வெப்பம் எவ்வாறு கடத்தப்படும்?

ii) வெப்பமானி திரவமாக இரசம் பயன்படுத்துகின்றமைக்கான இரசத்தின் பண்பு எது?

08) கூரையொன்று திருத்தும்பொழுது கீழே நின்ற ஒருவரை நோக்கி ஓடு ஒன்று வீசப்பட்டது. ஓட்டின் திணிவு 2kg ஆகும். ஓடு தரையைத் தொடும்போது அதன்வேகம் $20ms^{-1}$ ஆகும்.

A.

ஓடு விழுந்ததைக்கண்ட மனிதன் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அப்பால் பாய்ந்தார்.

i) சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மனிதனின் பின்வரும் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் ஏற்படும் மாற்றங்கள் ஒவ்வொன்றை தருக?

a. சுவாசத்தொகுதி
b. குருதிச்சுற்றோட்டத்தொகுதி

ii) மேற்படி சம்பவத்தில் பிரதான தசைவகைகளின் பங்களிப்புகளுக்கு இவ்விரண்டு உதாரணங்கள் தருக?

iii) தன்னை நோக்கிவரும் ஓட்டினைக் கண்டதுமுதல் அதன்பொருட்டு துலங்குதல் வரையிலான நரம்புக்கணத்தாக்க கடத்தலை கருத்திற்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

a. வாங்கி யாது?
b. சம்பந்தப்படும் மையநரம்புத்தொகுதியின் பகுதி யாது?
c. உறுத்துணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கான விளைவுகாட்டி யாது?

iv) சுவாசப்பொறிமுறையுடன் தொடர்பான படிமுறைகள் சில வருமாறு

விலாஎன்பிடைத் தசைகளின் சுருக்கம்
↓
விலாஎன்புகள் முன்னோக்கியும் மேல்நோக்கியும் அசைதல்
↓
a. ..................................
↓
நெஞ்சறைக்கூட்டின் கனவளவு அதிகரித்தல்
↓
b..............................
↓
c..............................

a, b c எனும் படிமுறைகளை குறிப்பிடுக.

B.

i) ஓட்டின்மீது செயற்பட்ட ஈர்வையினாலான ஆர்முடுகல் யாது?


ii) ஓட்டின் சராசரி வேகம் யாது?

iii) a. ஓடு தரையைத் தொடுவதற்காக செலவாகிய கால அளவு யாது?
b. தரையிலிருந்து கூரைவரையிலான உயரம் யாது?

iv) அங்குள்ள மனிதன் ஒருவன் அண்மைப்பார்வை குறைபாடு காரணமாக கண்ணாடியொன்றை பயன்படுத்துகின்றான். அவனினால் கூரையிலிருந்து ஓடு விடுவிக்கப்பட்ட கணத்தில் நோக்கப்பட்டதாயின் அதன்பொருட்டான கதிர்ப்படத்தை வரைக?

09) A.

ஒளிகாலும் இருவாயி ஒன்றைப் பயன்படுத்தி தயார்செய்யப்பட்ட எளிய இலத்திரனியல் சுற்று படத்தில் தரப்பட்டுள்ளது.




மிகுதி நாளை தொடரும்...

# மக்கள் போக்குவரத்து ஆட்டோ சாரதிகளுக்கான வயதெல்லை

(கொழும்பு)

மக்கள் போக்குவரத்துக்கான ஆட்டோ சாரதிகளுக்கான அனுமதிக்குரிய வயதெல்லையை 25 ஆக அதிகரிப்பதென தேசிய வீதிப் பாதுகாப்புச் சபையின் தலைவராகிய கலாநிதி சிசிர அறிவித்துள்ளார்.

இந்த வயதிற்கும் குறைவானவர்களை சாரதிகளாக அனுமதிக்கப் போவதில்லை என்பதுடன் முறைப்படி அனுமதிக்கப்படுவோருங்கூட குறைந்தது 2 வருட கால நன்னடத்தையின் கீழ் வைதது அவதானிக்கப்பட்டு பயணிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கும் விதத்திலேயே அவர்களுக்கான அனுமதி உறுதிப்படுத்தப்படும். அவர்களுக்கான வயதுக் கட்டுப்பாட்டு வரையறைகள், விதிமுறைகள் பற்றி அது சம்பந்தமான தனது பரிந்துரைகளை கடைப்பிடிக்கும்படி குறிப்பான அரச அதிகாரிகளுக்கு தேசிய வீதிப் பாதுகாப்புச் சபை அறிவுறுத்துகிறது.

25 வயதிற்கும் குறைவான சாரதிகளின் காரணமாக விளைந்த மற்றும் தொடரும் பாரதூரமான விபத்துக்களை தவிர்க்கும் முகமாகவே இம் முடிவுகள் எட்டப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# படையினரைக் கேவலப்படுத்தாதீர்; எதிரணியிடம் எஸ்.பி.கோரிக்கை

(கொழும்பு)



இராணுவப் புரட்சிக்கான வாய்பபுக்கள் இருப்பதாக கூறி, இலங்கைப் படையினரை கேவலப்படுத்த வேண்டாம் என்று கூட்டு எதிரணியினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், இராணுவப் புரட்சி ஏற்படும் வாய்ப்பு இருப்பதாக, நாடாளுமன்றத்தில் தினேஷ் குணவர்த்தன நிகழ்த்திய உரை தொடர்பாக கருத்து வெளியிட்டார்.

"இராணுவப் புரட்சிக்கான வாய்ப்பு இருப்பதாக, மிகவும் தீவிரமான கருத்து ஒன்றை வெளியிட்டிருப்பது எதிர்பாராத ஒன்று.

இதனை அரசாங்கம் புறக்கணிக்காது. இதுகுறித்து உன்னிப்பாக கண்காணிக்கும். இந்த அறிக்கை சமூகத்தில் எதிர்மறையான செல்வாக்கை செலுத்தும்.

இலங்கை இராணுவம் உலகில் மிகச் சிறந்த இராணுவங்களில் ஒன்று. தீவிரவாதத்தை அழிப்பது தொடர்பாக அவர்களால் உலகத்துக்கு போதிக்க முடியும்.

இலங்கையில் மிகமோசமான அரசியல் சூழ்நிலைகள் இருந்த போது, இலங்கை படையினர், நம்பிக்கை, விசுவாசம், மிகச் சிறந்த ஒழுக்கத்தைப் பின்பற்றி நிரூபித்தவர்கள்.

எனவே, இந்தக் குற்றச்சாட்டை நிராகரிக்கிறோம். இராணுவத்துக்குள் பிளவுகளை ஏற்படுத்த வேண்டாம் என்று கூட்டு எதிரணியை கேட்டுக் கொள்கிறோம்.

நாட்டுக்கும், இராணுவத்துக்கும் அவப்பெயரை ஏற்படுத்தும் மலினத்தனமான முயற்சிகளை அவர்கள் கைவிட வேண்டும்.

சிலர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருடன், இந்த இராணுவப் புரட்சி குற்றச்சாட்டை தொடர்புபடுத்த முனைகிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)


# பிராந்திய விமான நிலையமாகும் பலாலி விமான தளம்

பலாலி வான் போக்குவரத்து சேவையை பிராந்தியத்திற்கான ஒன்றாக அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவின் உதவியை நாடியிருப்பதாகவும் காங்கேசன்துறை துறைமுகத்தினை தனியார் முதலீடுகளூடாக அபிவிருத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுவதாகவும் மத்திய அமைச்சர் ஒருவர் தெளிவுபடுத்துகிறார்.

அதாவது புனர்வாழ்வு மீள் குடியேற்றம் சிறைச்சாலை அபிவிருத்திகள் மற்றும் இந்து மத விவகாரங்கள் சம்பந்தமான அமைச்சரான டி.எம். சுவாமிநாதன் டெய்லிமிரர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றின் போது மேற்படி விமான நிலையத்தின் அபிவிருத்திக்குரிய சாதக பாதக தன்மைகளை இந்திய கம்பனியொன்று நேரடியாக ஆராய்ந்து வருவதாக பலாலி நிலையத்தினை பிராந்திய போக்குவரத்து நோக்கங்களுக்காக நவீனமயப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாக அவர் மேலும் கூறுகின்றார்.

போட்டியின்போது கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அவர் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திகள் தனியார் கம்பனிகளூடாக மேற்கொள் ளப்படுகிறதென்றும் இதற்கு முந்திய ஆட்சியில் துறைமுகக்கடலின் கப்பல் சிதைவுகள் அகற்றப் பட்டதாகவும் அதனை மேற்கொண்ட இந்தியா பலாலி விமான நிலையத்தை விஸ்தரிப்பதற்கான பரிந்துரையை மேற்கொண்ட போதிலும் அப்போதைய அரசு அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்ததாகவும் கூறினார்.

# பொலிஸார் மீது மிளகாய்ப்பொடி வீச்சு



(கரணவாய்)

வடமராட்சி முள்ளிப்பகுதியில் உள்ள பொலிஸ் காவலரணில் நின்ற பொலிஸார் மீது மிளகாய்ப்பொடி வீச்சுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை மூன்று மணியளவில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

புலோலி- கொடிகாமம் வீதியில் உள்ள புளியங்கியான் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள சந்தியில் பொதுமக்களின் பாதுகாப்புக் கருதியும் சட்டவிரோத செயற்பாட்டை தடுக்கவும் பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டது.

இந்நிலையில் அதிகாலை நான்கு பொலிஸார் கடமையில் இருந்த போது ஆறுபேர் நடந்து வந்துள்ளனர். அவர்கள் பொலிஸாரிடம் கதைக்க முற்பட்டு விட்டு தம்மிடம் இருந்த மிளகாய்ப்பொடியினை பொலிஸார் மீது வீசியுள்ளனர். பொலிஸாரின் சட்டையில் மட்டும் மிளகாய்ப்பொடிபட்டது.

இதேவேளை அந்த ஆறு பேரும் தப்பிச் சென்று காட்டு வழியாக ஓடியுள்ளனர். இதனை யடுத்து அப்பகுதிக்கு மேலதிக பொலிஸார் அழைத்து வரப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (இ-60)

# (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 906

சிந்து





வசந்தன்





பபி





ஜோய்




யதுஷன்




மாயா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ரயில் தடம்புரள்வு; 150 பேர் உயிரிழப்பு

## ஒருவருக்கு 15 இலட்சம் இழப்பீடு





கான்பூர் அருகே இந்தூர்-பாட்னா எக்ஸ்பிரஸ் ரயில் தடம்புரண்டு, கவிழ்ந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 150 ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலத்திலுள்ள இந்தூரில் இருந்து உத்தரப் பிரதேசம் மாநிலம் வழியாக பீகார் மாநில தலைநகர் பாட்னா நோக்கி வேகமாக சென்று கொண்டிருந்த இந்தூர்-ராஜேந்திரா நகர் எக்ஸ்பிரஸ் ரயில், நேற்று முன்தினம் அதிகாலை 3.10 மணியளவில் கான்பூர் நகரில் இருந்து சுமார் 100 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள புக்ரயான் என்ற இடத்தில் தண்டவாளத்தைவிட்டு விலகிச் சென்று தடம்புரண்டது.

இதனால் நேற்றுக்காலை நிலவரப்படி 150 பேர் உயிரிழந்துள்ளனர். இவ்விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தாருக்கு பிரதமரின் நிவாரண நிதியில் இருந்து தலா 2 இலட்சம் ரூபாயும் ரயில்வே துறையின் சார்பில் தலா 3.5 இலட்சம் ரூபாயும உத்தரப்பிரதேசம் மாநில அரசின் சார்பில் தலா 5 இலட்சம் ரூபாயும் மத்தியப் பிரதேசம் மாநில அரசின் சார்பில் தலா 5 இலட்சம் ரூபாயும் என மொத்தம் 15.5 இலட்சம் ரூபாய் நிதியுதவியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயம் அடைந்தவர்களின் மருத்துவ செலவுக்கு பிரதமரின் நிவாரண நிதியில் இருந்து தலா 50 ஆயிரம் ரூபாயும் ரயில்வே துறையின் சார்பில் தலா 50 ஆயிரம் ரூபாயும் உத்தரப் பிரதேசம் மாநில அரசின் சார்பில் தலா 50 ஆயிரம் ரூபாயும் மத்தியப்பிரதேசம் மாநில அரசின் சார்பில் தலா 50 ஆயிரம் ரூபாயும் என மொத்தம் 2 இலட்சம் ரூபாய் நிவாரண உதவியாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# காஷ்மீர் எல்லைப்பகுதியில் மீண்டும் துப்பாக்கிச் சூடு!



ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள இந்திய எல்லைக் கோட்டுப் பகுதியிலும் பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்றுக்காலை அத்துமீறி துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

முன்னதாக, நேற்று முன்தினம் அதிகாலையில் இருந்தே ரஜோரி மாவட்டத்தின் எல்லைக்கோட்டுப் பகுதியில் உள்ள இந்திய நிலைகளின் மீது பாகிஸ்தான் படைகள் துப்பாக்கிகளால் சுட்டும், மோட்டார் குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினர். இந்திய வீரர்களும் எதிர்த் தாக்குதல் நடத்தினர்.

நேற்று முன்தினம் பின்னிரவு வரை நீடித்த இந்த மோதலில் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த வீரர்களில் நான்குபேர் காயமடைந்தனர்.

அவர்களில் படுகாயமடைந்த ராய் சிங் என்பவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

சிகிச்சை பெற்றுவரும் மேலும் ஒரு வீரரின நிலைமை கவலைக் கிடமாக உள்ளதாக தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் பூஞ்ச் மாவட்டத்திற்குட்பட்ட கிருஷ்ணா காட்டி எல்லைக் கோட்டுப் பகுதியில் உள்ள இந்திய இராணுவ நிலைகள் மீது நேற்றுக்காலை பாகிஸ்தான் இராணுவத்தினர் அத்துமீறி துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இந்தத் தாக்குதலுக்கு இந்திய வீரர்கள் தக்க பதிலடி கொடுத்தனர். (இ-7)

# தமிழ் சினிமா வரலாறு

## எம்.ஜி.ஆருடன் பானுமதி நடித்த வெற்றிப் படங்கள் 305

**அபூர்வ சகோதரர்கள்**

பானுமதியின் நடிப்புத் திறமையை முழுவதுமாகப் பிரகாசிக்கச் செய்த படம் ஜெமினியின் அபூர்வ சகோதரர்கள். இதில் பானுமதியின் நடிப்பை அற்புதம் என்றே கூறவேண்டும்.

படத்தில் இரட்டை வேடங்களில் மிகப் பிரமாதமாக நடித்தார் எம்.கே.ராதா. அவருக்கு இணையாகப் புகழ் பெற்றார் பானுமதி.

அபூர்வ சகோதரர்கள் தமிழ், இந்தி, தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டது. மூன்று மொழிகளிலும் பானுமதிதான் கதாநாயகி. மூன்று படங்களிலும் சிறந்த நடிகைக்கான பரிசு பெற்றார்.

**லைலா மஜ்னு**

இதன்பின் சொந்தப் படத்தயாரிப்பில் பானுமதி ஈடுபட்டார். லைலா மஜ்னு கதையை தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளிலும் தயாரித்தார்.

இரண்டு மொழிகளிலும் கதாநாயகன் ஏ.நாகேஸ்வர ராவ். பானுமதியின் கணவர் ராமகிருஷ்ணா இப்படத்தை டைரக்ட் செய்தார்.

இனிய பாடல்களும் சிறந்த நடிப்பும் கொண்ட லைலா மஜ்னு வெற்றிகரமாக ஓடியது.

**டைரக்ஷன்**

பிறகு பானுமதி சண்டிராணி என்ற படத்தை சொந்தமாகத் தயாரித்து இரட்டை வேடங்களில் நடித்ததுடன் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றார். கதாநாயகன் என்.டி ராமராவ்.


தெலுங்கில் மிகப்பெரிய வெற்றி பெற்ற இப்படம் தமிழில் சுமாராகவே ஓடியது.

எம். ஜி.ஆருடன் பானுமதி நடித்த படங்கள் மாபெரும் வெற்றி பெற்று வெள்ளி விழா கொண்டாடின.

எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்த முதல் படம் ராஜகுமாரி (1947). அதன் பிறகு சில படங்களில் கதாநாயகனாக நடித்தார். என்றாலும் அவருடைய முழுத் திறமையையும் வெளிப்படுத்தி வசூல் மன்னன் என்ற பெயரை வாங்கித் தந்த படம் மலைக்கள்ளன்.

கோவை பட்சிராஜா ஸ்ரூடியோவில் ஸ்ரீராமுலு நாயுடு டைரக்ட்ஷனில் உருவான இப்படத்தில் எம்.ஜி.ஆருக்கு ஜோடி பானுமதி. 22.07.1954இல் வெளிவந்த இந்தப் படம் மகத்தான வெற்றி பெற்று வசூலைக் குவித்தது.

எம்.ஜி.ஆரும் பானுமதியும் இணைந்து நடிப்பதற்கு ரசிகர்களிடம் பெரும் வரவேற்பு இருந்தது. எனவே மதுரை



"காஞ்சித்தலைவன்" படத்தில் எம்.ஜி.ஆருடன் பானுமதி.

வீரன், அலிபாபாவும் நாற்பது திருடர்களும், தாய்க்குப்பின் தாரம் முதலான படங்களில் எம்.ஜி.ஆரும் சேர்ந்து நடித்தார்கள். எம்.ஜி.ஆர். சொந்தமாகத் தயாரித்து டைரக்ட் செய்த நாடோடி மன்னன் படத்திலும் பானுமதி தான் கதாநாயகி.

கலைஞர் கருணாநிதி வசனம் எழுத மேகலா பிக்சர்ஸ் தயாரித்த காஞ்சித் தலைவன் படத்தில் எம்.ஜி.ஆரும் பானுமதியும் இணைந்து நடித்தனர். இந்தப்படத்தின் தொடக்க விழாவில் அறிஞர் அண்ணா பேசுகையில் நடிப்புக்கு இலக்கணம் வகுத்தவர் பானுமதி என்று குறிப்பிட்டார்.

**சிவாஜியுடன்**

சிவாஜிகணேசனும் பானுமதியும் இணைந்து நடித்த முதல் படம் கள்வனின் காதலி இது கல்கி எழுதிய கதை.

1955இல் வெளிவந்த படம் சுமாரான வெற்றியைத்தான் பெற்றது என்றாலும் சிவாஜி,பானுமதி இருவரும் போட்டி போட்டு நடித்தனர்.

இதன் பின் பானுமதியின் சொந்தப்படமான "மணமகன் தேவை"யில் சிவாஜி நடித்தார்.


தொடர்ந்து மக்களைப் பெற்ற மகராசி, ராணி லலிதாங்கி முதலிய படங்களில் சிவாஜியும் பானுமதியும் நடித்தனர்.

**ரங்கூன் ராதா**

அறிஞர் அண்ணா எழுதிய கதையான ரங்கூன் ராதாவை மேகலா பிக்சர்ஸ் படமாக எடுத்தது. வசனத்தை கலைஞர் கருணாநிதி எழுதினார். (தொடரும்)

# மீண்டுமொரு இனக்கலவரத்துக்கு அரசாங்கம் துணைபோகின்றதா?

## திஸ்ஸ விதாரண கேள்வி



(கொழும்பு)

மீண்டும் தலைதூக்கிவரும் இன, மத அடிப்படைவாதிகளுக்கு எதிராக அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கின்றது. அதனால் மீண்டுமொரு இனக்கலவரத்துக்கு அரசாங்கம் துணைபோகின்றதா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் புதிய அரசியல் அமைப்பு திருத்தத்தினூடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என லங்கா சமசமாஜ கட்சியின் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பு திருத்தம் பாராளுமன்றத்தில் இடம்பெற்று வருகின்றது. அதில் எமது கருத்துக்களையும் நாம் சமர்ப்பித்துள்ளோம். இந்த நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகிறோம். அத்துடன் அரசாங்கம் அரசியலமைப்பு திருத்தத்தினூடாக தேசிய பிரச்சினைக்கு தீர்வு கண்டு இன, மத பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

மேலும் நாட்டுக்குள் தலைதூக்கிவரும் இன, மத அடிப்படைவாதிகளை கட்டுப்படுதத தேவையான நடவடிக்கைகள் எதையும் அரசாங்கம் இதுவரை எடுக்கவில்லை. இவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல் படுத்தவேண்டும்.

ஏனைய இன, மதங்களுக்கு எதிரான பிரசாரம் மற்றும் தூண்டுதலை தடுப்பது அரசாங்கத்தின் கடமை. அத்துடன் மதங்களுக்கு எதிராக யாரேனும் செயற்படுவதாக குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டால் உடனடியாக அதற்கு எதிராக அரசாங்கம் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அவ்வாறு நடந்து கொள்வதாக தெரியவில்லை. அதனால்தான் அடிப்படைவாதிகளின் செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# இந்தியாவிலிருந்து மீளத்திரும்பியவர்களுக்கும் யாழ்.இந்தியத் தூதுவருக்கும் இடையே சந்திப்பு

இந்தியாவில் இருந்து அண்மையில் மீளத் திரும்பியவர்களுக்கும் இந்திய துணைத் தூதுவருக்குமான கலந்துரையாடல் இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழகத்தின் (ஒபர் - சிலோன் ) ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாகிய நா.வேதநாயகன் தலைமையில் நாளை 23 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (இ

# அவுஸ்திரேலியாவில் நிலத்தடி நீர் முகாமைத்துவம் குறித்து பயிற்சி

## வடக்கு விவசாய அமைச்சின் சார்பில் அறுவர் பங்கேற்பு






ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவத்தின் ஊடாக நிலைத்து நிற்கும் நிலத்தடி நீர் முகாமைத்துவம் என்ற ஒரு மாத காலப் பயிற்சிநெறி அவுஸ்திரேலியாவின் குயின்ஸலாந்தில் நடைபெற்று வருகிறது.

இலங்கையைச் சேர்ந்த நீர் முகாமைத்துவத்துடன் தொடர்பானவர்களுக்கென மாத்திரமே விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட இப் பயிற்சிநெறியில் இலங்கையில் இருந்து 15 பேர் கலந்து கொண்டுள்ளனர்.

வடக்கில் நிலத்தடி நீர் தொடர்பாக அதிக பிரச்சினைகள் நிலவுகின்ற மாவட்டமாக யாழ்ப்பாணம் உள்ளது. இதைக் கருத்திற் கொண்டு பயிற்சியில் யாழ்.மாவட்டத்துக்குக் கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து 8 பேரும் தென்னிலங்கையில் இருந்து 7 பேரும் இப் பயிற்சியில் கலந்து கொண்டுள்ளனர்.

இத்தகைய ஒரு பயிற்சியை ஏற்பாடு செய்து தருமாறு வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அவுஸ்திரேலிய இயற்கை வளங்கள் மற்றும் கனிமத் திணைக்களத்தின் பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்திருந்தார்.

இதன் அடிப்படையில் இப்பயிற்சியை ஒழுங்கு செய்துள்ள சர்வதேச நீர் ஆராய்ச்சி மையம் யாழ். மாவட்டத்துக்கான ஒருங்கிணைப்பை விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடமும் தென்னிலங்கைக்கான ஒருங்கிணைப்பை கொழும்பில் இயங்கும் சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி எச்.மந்திரி திலகே என்பவரிடமும் ஒப்படைத்திருந்தது.

விவசாய அமைச்சின் சார்பில் முன்னாள் மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளரும் தற்போதைய பிரதிப் பிரதம செயலாளருமான எந்திரி சோ.சண்முகானந்தன், நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் ச.சர்வராஜா, கை.பிரகாஷ், பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராஜா ஆகியோருடன் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் வட மாகாண சபை உறுப்பினர்கள பா.கஜதீபன், கலாநிதி க.சர்வேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து இரசாயனவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் மீனா செந்தில்நந்தனன், புவியியல் துறையைச் சேர்ந்த கலாநிதி லோறீன் இராஜசூரியர் ஆகியோரும் பங்கேற்றுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 31 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வரும் நீர் முகாமைத்துவம் தொடர்பான இப்பயிற்சி நெறி எதிர்வரும் டிசெம்பர் 2 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. (இ-7-10)

# செய்தித்துளிகள்

## பரீட்சை 26 ஆம் திகதி

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் தரம் - 12 (2018 ஆம் ஆண்டு) மாணவர்களுக்கு நாளை 23 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற இருந்த பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என தொண்டைமானாறு வெளிக்கள நிலைய இயக்குநர் அறிவித்துள்ளார். (இ-3)

## 2ஆம் பருவகால மீள்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவன 2016 ஆம் ஆண்டிற்கான 2 ஆம் பருவகால மீள்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் விண்ணப்பங்கள் கடந்த 18 ஆம் திகதியிலிருந்து விநியோகிக்கப்படுகின்றன. அவற்றைப் பெற்று எதிர்வரும் டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பூர்த்தி செய்து நிறுவன நிர்வாகப்பகுதியில் வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளவும் என உதவிப்பதிவாளர் யோ.ரிசாந்தன் அறிவித்துள்ளார். (இ-3)

## அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரியிலிருந்து க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு 2 ஆம் தடவையாக தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மாணவர்கள் இவ் அனுமதி அட்டையினை பிரதி அதிபரின் அலுவலகத்தில் உடனடியாகப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதி அதிபர் ரி. மோகனதாஸ் அறிவித்துள்ளார். (இ-3)

## 4 அனல்மின் நிலையங்கள் செயலிழப்பு



எரிபொருள் பிரச்சினை காரணமாக 4 அனல்மின் நிலையங்கள் செயலற்று உள்ளதாக மின் பொறியியல் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக 400 மெகாவோல்ட் மின் உற்பத்தி துண்டிக்கப்பட்டுள்ளதாக மின் பொறியியல் சங்கத்தின் தலைவர் அதுல வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் இவ்வாறான பிரச்சினை ஏற்பட்டிருந்தது.

இதன் காரணமாக 300 மெகாவோல்ட் மின் உற்பத்தி துண்டிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## சாதாரண தரப் பரீட்சையை முன்னிட்டு விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நடைபெறவுள்ள நிலையில் விசேட டெங்கு ஒழிப்புத் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, மேல்மாகாணத்தில் கூடுதலாக டெங்கு பரவும் அபாயம் காணப்படுவதால் பரீட்சை நிலையங்களில் இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரஷிலா சமரவீர தெரிவித்துள்ளார்.

குறித்த சாதாரண தரப் பரீட்சை இடம்பெறவுள்ள நிலையங்களை சூழவுள்ள பகுதிகளில் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்காக புகை விசிறும் நடவடிக்கைகள் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் சகல பிராந்திய சுகாதாரப் பிரிவுகளையும் தெளிவுபடுத்தியுள்ளதாகவும் 2016ஆம் ஆண்டு, அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் பதிவாகக்கூடிய ஒரு ஆண்டாக காணப்படுவதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர தெரிவத்தார். (இ-7-10)

# தேசிய வியாபார பதிவு அலுவலகத்தை ஸ்தாபித்தல்

## பட்ஜெட் - 2017

நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம் **அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி** என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...



(தொடர்ச்சி)

145.நாட்டில் பதிவு செய்யாத மருந்து விற்பனை நிலையங்கள் பெரும் எண்ணிக்கையில் காணப்படுவதுடன் தகைமை பெறாத மருந்தகர்களும் குறிப்பிடத்தக்களவு காணப்படுகின்றனர். இந்நிலைமையினை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல் வேண்டும்.

இந்த வகையில் அனைத்து மருந்து விற்பனை நிலையங்களும் தேசிய மருந்துப் பொருட்கள் அதிகார சபையின் கீழ் உடனடியாக பதிவு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் இதற்குக் கட்டுப்படாதவர்களுக்கு 100,000 ரூபா அபராதமாக விதிக்கப்படும்.

146. சபாநாயகர் அவர்களே, ஆயுர்வேத மருத்துவத் துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நோக்கத்தினை மையமாகக் கொண்டு ஆயுர்வேத மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினை வலுப்படுத்துவதற்கு ரூபா 250 மில்ல்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

147. சபாநாயகர் அவர்களே, நாட்டில் இலவச சுகாதார பராமரிபபு சேவை வழங்கல் முறைமையின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம். இத்துறைக்கு நிதிக்கு மேல் நிதியினை வாரி வழங்கிய போதிலும், பொதுமக்கள் அவற்றின் தொகையினை அறிவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமுள்ளது.

எனவே, ஒவ்வொரு நோயாளியும் அரசாங்க வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறும் போது அவர்களது நோயினை குணப்படுத்துவதற்காக அரசினால் அவர்களுக்காக செலவிடப்பட்ட தொகையினை சுட்டிக்காட்டுகின்ற செலவீனப் படிவமொன்றினை வழங்குவதற்கு நான் சிபார்சு செய்கின்றேன்.

### இலங்கையில் வியாபாரம் மேற்கொள்வதை இலகுபடுத்தல்

148. சபாநாயகர் அவர்களே, எமது அரசாங்கம் ஆகக் குறைந்தளவு சிவப்பு நாடாக்களுடன் வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு முடியுமான சூழலினை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் காணப்படுகின்றது.

தற்பொழுது நாம் இலகு வியாபாரம் புரிதல் சுட்டியில் 110 ஆவது இடத்தில் இருக்கின்றோம் என்பதனை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்நாட்டில் வியாபாரமொனறினை பதிவு செய்வதற்கு முன்னர் வியாபாரமொன்று பின்பற்றப்பட வேண்டிய ஆகக்குறைந்தது 8 படிமுறைகள் காணப்படுகின்றன.

இது இத்துறையில் முன்னணியில் திகழ்கின்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது சராசரித் தேவைக்கு அதிகமானதாகும்.இதனை 2020 ஆம் ஆண்டளவில் 5 செயன்முறையாகக் குறைப்பது எமது நோக்கமாகும். இதனுடன் வேறு ஏனைய பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக 2018 ஆம் ஆண்டளவில் உலகில் 70 ஆவது இடத்தில் எம்மை இருக்குமளவுக்கு செய்ய முடியும்.

149. இந்த வகையில் கம்பனிகள் பதிவாளரின்ன வாரத்தில் 7 நாட்களும் தொழிற்பாட்டுக்காக திறப்பதற்கு நான் முன்மொழிவதுடன் அந்நோக்கத்திற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் தொழில் திணைக்களம் என்பவற்றினை வலுப்படுத்துவதற்கும் முன்மொழிகிறேன். இதன் மூலம் வியாபாரமொன்றினை ஆரம்பிப்பதற்கான காலத்தினை 10 நாட்களிலிருந்து 4 நாட்களாக குறைப்பதற்கு முடியும்.

150.அனைத்து வியாபாரங்களும் பதிவு செய்வதற்கு தேவைப்படுத்துகின்ற தேசிய வியாபார பதிவு அலுவலகமொன்றை ஸ்தாபிப்பதற்குத் தேவையான சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

எமது நாட்டினால் கைச்சாத்திடப்பட்ட வர்த்தக உடன்படிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்தும் பணிக்காக தேசிய வியாபார வழக்குத் தொடுநர் ஒருவரினை நியமிப்பதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம்.

தேசிய வியாபார பதிவகம் மற்றும் வர்த்தக வழக்குத் தொடுநரின் அலுவலகம் என்பவற்றினைத் ஸ்தாபிப்பதற்கு ரூபா 50 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

151.சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் மிக விரைவாக கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில் பாதுகாக்கப்பட்ட கொடுக்கல் -வாங்கல் சட்டத்திற்கான திருத்தங்களை நாம் அறிமுகப்படுத்தவுள்ளோம்.

152. சபாநாயகர் அவர்களே, முதலீடுகளைக் கவருவதற்கு தெளிவான காணிக் கொள்கையொன்று அவசியமாகும். இந்த வகையில், காணிகளின் உரித்தினை எவ்வித நிபந்தனையுமின்றி வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளுக்கு வழங்குவதற்கான சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

பெரும்பான்மையான வெளிநாட்டு பங்குகளைக் கொண்ட தனியார் கம்பனிகள் காணிகளை நீண்டகால அடிப்படையில் குத்தகைக்குப் பெறுவதற்கான அங்கீகாரம் வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

எவ்வாறாயினும்,அத்தகைய கம்பனிகள் ஆகக்குறைந்தது 150 பேருக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதுடன் ரூபா 250 மில்லியனை (காணியின் பெறுமதி நீங்கலாக) முதலீடு செய்து குறித்த அந்தஸ்தினை ஆகக் குறைந்தது 3 வருடங்களுக்கு பேணி வருத லும் வேண்டும். அவ்வாறு, இல்லாதுவிடின் 3 வருட இறுதியில் ஒப்பந்தத்தினை நிறைவேற்றாமைக்காக குத்தகைக்கான 100 சதவீதம் உடனடியாக அறவிடப்படும். அத்தகைய குத்தகைப் பெறுமதியானது காணியின் சந்தைப்பெறுமதியில் அரச விலை மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்படும்.

153.தற்பொழுது வழக்கிலுள்ள 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைவாக, 70 வயதையடைந்த தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் அத்தகைய சபையில் பணியாற்ற முடியாது எவ்வாறாயினும், பணிப்பாளர் சபைத் தலைவர் மற்றும் உறுப்பினாகள் மற்றும் உரிமையாளர்கள் 70 வயதினையும் தாண்டி பணிப்பாளர் சபையில் தொடர்ந்து சேவையாற்றுவதற்கு முடியுமான வகையில் இவ்வரையறையினை நீக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

154. சபாநாயகர் அவர்களே, நிதித்துறையில் உறுதியான ஒழுங்குபடுத்துகை செயன்முறையொன்று காணப்பட்ட போதும் பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான ஆற்றலினை நீதிக்குப் புறம்பான முறையில் வழங்கமுடியாது என்பதனை நாம் நம்புகின்றோம்.

இந்த வகையில், ரூபா 500,000 கடன் வரையறைக்குட்பட்ட கடன் பெறுநர்களின் கடன் வரலாற்றினை வழங்காதிருக்குமாறு கடன் தகவல் பணியகத்திற்கு (CRIB)நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

155.கடனிறுக்க வகையின்மை மற்றும் வங்குரோத்து நிலை தொடர்பாக நாட்டில் காணப்படும் சட்டங்களை நவீனகால நடைமுறைகளுக்கேற்ற வகையில் திருத்துவதற்கான தேவை காணப்படுவதனால் பொருத்தமானதும் வினைத்திறன் மிக்கதுமான சட்டங்களை உருவாக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

156.வரவு-செலவுத்திட்ட கலந்துரையாடல்களின் போது, பல வியாபாரிகள் தமது கடைகளை ஆகக் குறைந்தது இரவு 11 மணி வரைக்கும் திறந்திருப்பதற்கு விரும்புவதாக தமது கருத்தைத் தெரிவித்தனர்.

தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கமும் இரவு 11 மணியின் பின்னர் பேருந்து சேவைகளை வழங்குவதன் மூலம் இதற்கு ஒத்துழைப்பு வழங்க உடன்பட்டிருப்பதனால் குறித்த கோரிக்கையினை நிறைவேற்றுவதற்கு நான் ஊக்கமளிக்கின்றேன்.

157.முறையற்ற கொடுக்கல்-வாங்கல்களில் இருந்து நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளை பாதுகாக்கும் முகமாக செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் நீக்கப்பட்டு வெளிநாட்டுச் செலாவணி சட்டம் அறிமுகப்படுத்தப்படும். வலுப்படுத்தப்பட்ட, சிறந்த கொடுப்பனவு வழங்கப்பட்ட ஊழியப்படை.

158. சபாநாயகர் அவர்களே, ஊழியப்படையில் மூன்றிலொரு பகுதியினர் முறைசார் துறைகளில் ஈடுபட்டுள்ளதுடன் எஞ்சிய மூன்றிலிரண்டு பகுதியினர் முறைசாரா துறையில் ஈடுபட்டுள்ளனர். முறைசார் துறையானது தொழில் சட்டங்களினால் மிகவும் பாதுகாக்கப்பட்டதுடன் அதில் நெகிழ்வான பணி நேரங்கள், பகுதிநேர வேலை அல்லது 45 மணித்தியாலங்கள் மற்றும் வாரத்தில் ஐந்தரை நாட்கள் சேவையில் ஏதேனும் மாற்றங்கள் என்பன காணப்படமாட்டாது.

அதற்கு மாற்றமாக ஊழியப்படையில் பெரும்பாலானவர்கள் முறைசாரா துறையில் ஈடுபட்டுள்ளதுடன் அவர்கள் தொழில் சட்டங்களிலிருந்து எவ்வித பாதுகாப்பையும் பெற்றிருக்கவில்லை.

இந்த வகையில் எமது ஊழியப்படையில் பெரும்பாலானவர்கள் இந்நாட்டிலுள்ள இறுக்கமான தொழில் சட்டங்களிலிருந்து எவ்வித நன்மையனையும் பெற்றுக் கொள்வதில்லை.

159.தற்பொழுது நடைமுறையிலுள்ள தொழில் சட்டங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 60 சதவீதமாகக் காணப்படும் சேவைத்துறையின் கேள்வியினை ஈடுசெய்வதற்கான சவால்களை எம்மில் ஏற்படுத்தியுள்ளதுடன் அடுத்த சில வருடங்களில் சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் துறையினை பிரதான வளர்ச்சி ஊக்குவிப்பாளர்களாக பதிவு செயவதற்கு மதிப்பிடப்பட்டுள்ளது. நவீன சேவைத்துறையில் எமது போட்டி பயன் வழங்கப்பட்டுள்ளதுடன் நாட்டுக்குள் அறிவுச் செயன்முறை வெளியார் சேவை (KPO),நீதிச் செயன்முறை வெளியார் சேவை (LPO) மற்றும் வியாபார செயன்முறை வெளியார் சேவை (BPO) கைத்தொழில்களை கவருகின்ற அளவு நாம் சிறந்த இடத்தில் காணபடுகின்றோம். எவ்வாறாயினும், அறிவுச் செயன்முறை வெளியார் சேவை மற்றும் வியாபாரச் செயன்முறை வெளியார் சேவை ஆகிய இரண்டு தொழிற்றுறைகளும் இரவு நேர வேலை, பகுதி நேர வேலை மற்றும் வீட்டுடன் கூடிய வேலை என்பன போன்ற நெகிழ்வுப் போக்கான வேலை மணித்தியாலங்கள் தேவைப்படுத்துகின்றன.

தகவல் தொழில்நுட்ப மற்றும் சுற்றுலாத்துறையின் சம்பளங்கள் ஏற்கனவே உயர் மட்டத்தில் காணப்படுவதுடன் உரிய வளர்ச்சிப் போக்கினையும் காட்டுகின்ற அதேவேளை சம்பளங்களை மாத்திரம் உயர்ந்த போக்கில் காணமுடியுமாகவுள்ளது. தொழில்நுட்பவளர்ச்சி, தொழில் வாய்ப்புகள் என்பன குறிப்பிடத்தக்களவு மாற்றமடைந்திருப்பதனை நாம் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும், சேவைத் துறையில் தொழில்நுட்பரீதியில் குறிப்பிடத்தக்க ஆற்றலினை வெளிப்படுத்துவதற்கு தொழில்சட்டங்களுக்கான திருத்தங்கள் அத்தியாவசியமானவையாகும். அத்தகைய திருத்தங்களினை மேற்கொள்ளும் போது தொழில் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித விட்டுக்கொடுப்பும் காணப்படமாட்டாது என்பதுடன் சிறந்த கொடுப்பனவு வழங்கப்படுகின்ற புதிய தொழில்கள் வழங்கப்படும். அதேவேளை அவற்றில் எமது இளைஞர், யுவதிகளை நாம் ஈடுபடுத்த முடியுமென உங்களுக்கு உறுதி வழங்குகின்றேன்.

தேசிய தொழிற்சங்க பேரவையின் ஒத்துழைப்பினை நான் பாராட்டுவதுடன் ஊழியர்கள் மற்றும் தொழில் வழங்குநர்கள் ஆகிய இருசாராரும் உடன்படும் வகையில் தொழில் சட்டங்களை திருத்துவதற்கு அவர்கள் சிபார்சுகளை வழங்கினர்.

அ. தனியார் துறையினருக்கு 45 மணித்தியாலங்கள் மற்றும் வாரத்தில் 5 நாட்கள் அதேவேளை அரசாங்கத்துறைக்கு வாரத்தில் 40 மணித்தியாலங்கள் என்ற நெகிழ் வுப் போக்குடைய வேலை நேரங்கள்.

(தொடரும்)

கெட்ட உள்நோக்கத்தோடு கூறப்படும் ஓர் உண்மை ஆயிரம் பொய்களை விட மோசமானது.
*- ஓர் அறிஞர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

# தமிழரின் உயிர்த்தியாகத்திற்கான இலட்சியத்தை அடைய வேண்டும்

## மாவை.சேனாதிராசா வலியுறுத்தல்

இலட்சக்கணக்கான தமிழ மக்கள் என்ன நோக்கத்திற்காக,என்ன இலட்சியத்திற்காக தம்முயிரை தியாகம் செயதார்களோ அந்த இலட்சியத்தை நாம் தொடர்வதும் அதனை அடைவதுமே முக்கியமானதாகும் என தமிழரசு கட்சியின தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாணமாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜின்பத்தாம் ஆண்டு நினைவு நிகழ்வானது நேற்று முன்தினம் யாழ்.சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு நினைவு பேருரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 2002ஆம் ஆண்டு நாம் தேர்தல் பரப்புரைக்காக ஊர்காவற்றுறைக்கு செல்லும் போது தம்பாட்டி பகுதியில் வைத்து கடற்படையினர் நிற்கும் போதே எம்மீது பின்னால் வந்தவர்கள் துப்பாக்கியால் சுட்டார்கள். எம்மை இரும்புகளாலும் தாக்கினார்கள். இதில் 2 பேர் கொல்லப்பட்டார்கள், 20க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருந்தார்கள். இசசம்பவத்தின் போது தம்பி ரவிராஜ் உடன் இருந்திருந்தார். அவரே பொலிஸாருக்கும் தகவல் கொடுத்து வாக்குமூலமும் கொடுத்திருந்தார்.

அந்த வழக்கானது 14 ஆண்டுகளுக்கு பின்னர் யாழ்.மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. இச்சம்பவத்தில் முக்கியமான ஓர் சாட்சியாக தம்பி ரவிராஜ் காணப்பட்டார். அவர் சம்பவத்தை நேரில் கண்டவர்.

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள்மனிதவுரிமைபேரவை அலுவலகத்தின் முன்பு மனிதவுரிமைகளுக்காக போராடியதற்காக அவரது உயிர் பறிக்கப்பட்டது. இவற்றையும் விட ரவிராஜ் சிங்கள மக்களுக்கு விளங்கிக் கொள்ளக் கூடிய அவர்களது வடிவிலான மொழியிலேயே பேசி தமிழ் மக்களது பிரச்சினைகளையும் அவர்களது நியாயமான கோரிக்கைகளையும் சிங்கள மக்கள் புரிந்துகொள்ளக் கூடியதாக எடுத்துரைத்திருந்தார். இத்தகைய தனித்துவமான அணுகுமுறைகளை அவர் பின்பற்றி சிங்கள மக்களின் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியதனாலுமே அவரது உயிர் பறிக்கப்பட்டது.

நீதிக்காகவும் தமிழின விடுதலைக்காகவும் தன்னுயிரை ஒப்படைத்த ரவிராஜின் படுகொலை வழக்கானது மிக நீண்ட காலத்திற்கு பின்பு எமது மக்களால் மாற்றியமைக்கப்பட்ட ஆட்சியில் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் எம் மீதான தாக்குதல் வழக்கும் மீண்டும் எடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் ரவிராஜ போல இலட்சக்கணக்கான தமிழ் மக்களது ஆத்மா இன்னமும் எம்மை சுற்றிக் கொண்டுதான் உள்ளது. அத்தகையவர்களது ஆன்மாவை நினைவுகூருவது மட்டுமல்லாது அவர்கள் என்ன நோக்கத்திற்காக, என்ன இலட்சியத்திற்காக தம்முயிரை தியாகம் செய்தார்களோ அந்த இலட்சியத்தை நாம் தொடர்வதும் அதனை அடைவதுமே முக்கியமானதாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# சாவகச்சேரியில் சம்பந்தர் உரைத்த கீதோபதேசம்

கிருஷ்ண பரமாத்மா குருசேத்திரத்தில் வைத்து அருச்சுனனுக்கு கீதோபதேசம் செய்தார்.

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் போர் ஆரம்பிப்பதற்கு முன்னதாக கீதோபதேசம் உரைக்கப்படுகிறது.

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதன் பொருட்டே கீதோபதேசம் செய்யப்படுகிறது.

அருச்சுனா! நீ எதைக்கொண்டு வந்தாய் அதை இழப்பதற்கு. இன்று உன்னுடையது நாளை இன்னொருவனுடையதாகிறது. நாளை மறுதினம் வேறு ஒருவருக்காகிறது. ஆகையால் நீ! எதற்காக இந்தப் பூமிக்கு வந்தாயோ வந்ததன் கடமையைச் செய் என்பதாக கீதோப்தேசம் மொழிகிறது.

இவ் உபதேசம் துவாரபர யுகத்தில் நடந்தது. இப்போது கலியுகம். கலியுகத்திலும் எத்தனையோ மகான்கள், தலைவர்கள் பிறந்து வாழ்ந்து இந்த உலகம் உய்யும் பொருட்டு உபதேசம் செய்துள்ளனர்.

இத்தகைய உபதேசங்கள் இன்றும் தொடர்கிறது. துவாரபர யுகத்தில் சொல்லப்பட்ட கீதோபதேசத்துக்கும் கலியுகத்து உபதேசங்களுக்கும் வேறுபாடு உண்டு.

அந்த யுகத்தில் தர்மம் நிலைக்க வேண்டும் என்பது உபதேசம் செய்பவரின் நோக்கு. இந்த யுகத்தில் தர்மத்துக்கு எதிரானவர்களும் தம்மை தர்மவான்களாகக் காட்டிக்கொண்டு உபதேசம் செய்கின்றனர். அதற்காக எல்லாமும் அப்படியல்ல.

இவை ஒருபுறம் இருக்க, நேற்று முன்தினம் சாவகச்சேரியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜ் அவர்களின் உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமாகிய இரா.சம்பந்தர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை அவரின் முன்னைய உரைகளில் இருந்து வேறுபட்டதாக வித்தியாசமானதாக இருந்தது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் கிடைத்து விடும் என்று அவர் முன்னர் தமிழ் மக்களுக்கு வழங்கிய உத்தரவாதத்தை பொதுமைப்படுத்தி சமரசம் செய்வது போல அமைந்திருந்தது.

அதாவது 2016 டிசம்பர் மாதம் 31-ம் திகதிக்கு இன்னும் 40 நாட்களே உள்ள நிலையில் சம்பந்தர் அவர்கள் ஒரு கீதோபதேசம் செய்ய நினைத்தார்.

அவரின் கீதோபதேசத்தில்,

"…. எமக்குள்ளே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் ஆனால் மக்களின் விடயங்களில் நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து செயற்பட வேண்டும். அரசியல் தீர்வை பெறுவதற்கு பல ஆண்டுகளுக்கு பின்னர் சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது அதனை சரிவரப் பயன்படுத்தவேண்டும். இதன்படி **எல்லாம் நடந்து விட்டது என்று நாம் கூறவில்லை. அதற்காக ஒன்றுமே நடைபெற்று விடவில்லை என்றும் கூற முடியாது…**" என்பதாக சம்பந்தர் அவர்களின் உபதேசம் விரிந்து செல்கிறது.

இப்போது சம்பந்தர் உரைத்த கீதோபதேசத்தின் சாரம் தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதுதான்.

அப்படியானால் தமிழ் மக்களிடையே ஒற்றுமை இல்லை என்பது போலவும் சில வேளைகளில் 2016 டிசம்பர் 31-ம் திகதிக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியப்படவில்லை எனில் அதற்குக் காரணம் நம்மிடம் இல்லாத ஒற்றுமையும் இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்குரிய சந்தர்ப்பத்தை நாம் சரிவரப் பயன்படுத்தவில்லை என்பதுமாகவே இருக்கும். இதைச் சொல்வதே அவர் உரைத்த உபதேசத்தின் உட்பொருள்.

இதிலிருந்து கண்ணன் குருசேத்திரத்தில் உரைத்த கீதோபதேசமும் சம்பந்தர் ஐயா சாவகச்சேரியில் உரைத்த கீதோபதேசமும் எங்கே வேறுபடுகிறது எனில்,

முன்னையவர் தர்மத்தைக் காக்கவும் பின்னையவர் தன்னைக் காக்கவும் உபதேசம் செய்துள்ளமை அறிதற்குரியது.

# புதிதாக 52 மதுபான அனுமதிப்பத்திரங்கள்

(கொழும்பு)

கடந்த வருடத்தில் புதிதாக 52 மதுபான அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் ஊடாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா மேம்பாட்டு திணைக்களத்தின் அனுமதியுடன் இந்த புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 51.7 பில்லியன் லீற்றர் மதுபானம் மற்றும் 125.6 பில்லியன் லீற்றர் பியர் என்பன கடந்த வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் அபராத கட்டணம் ஆகியவற்றின் ஊடாக, 1.6 பில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாகவும் அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-7)

# ஐந்தாயிரம் ரூபாய் நாணயத்தாளை இரத்துச் செய்யவும்- உதய கம்மன்பில

5000 ரூபா நாணயத்தாளை இரத்து செய்ய வேண்டுமென பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கறுப்புப்பணத்தை வெளிகொண்டு வர 5000 ரூபாவினை தடை செய்ய வேண்டுமென அவர் தெரிவித்தார். இவ்வாறு 5000 ரூபா நாணயத்தாளை இரத்து செய்வதன் மூலம் உண்மையில் கறுப்புப் பணத்தை வைத்திருப்பது ராஜபக்ஷக்களா? அல்லது மத்திய வங்கி கள்வர்களா? என்பது அம்பலமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

1973ஆம் ஆண்டு காணப்பட்ட உச்ச அளவு பெறுமதி வாய்ந்த 100 ரூபா நாணயத்தாளை அப்போதைய நிதி அமைச்சர் என்.எம் பெரேரா தடை செய்திருந்தார் எனவும இது ஒன்றும் இலங்கைக்கு புதிய விடயமல்ல எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2016

"புல்லின் இதழை மாந்தன் உருவாக்கும் வரை இயற்கை அவனது அறிவியல் அறிவைக் கண்டு சிரிக்கவே செய்யும்."

*-தோமஸ் அல்வா எடிசன் (அமெரிக்க அறிவியலாளர்)*

# மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும்பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் குருமன்காடு பிரதேசம், பெரியார்குளம், பூந்தோட்டம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் உயிலங்குளத்திலிருந்து ஆண்டாங்குளம் வரை, அடம்பன், பள்ளிவாசல்பிட்டி, பெரியநீலாசேனை, பாப்பாமோட்டை, அடம்பன் நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும்மின் தடைப்படும். (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்




❖ பாரதநாடே! உனது பெண்மையின் இலட்சியம் சீதை, சாவித்திரி, தமயந்தி என்பதை மறவாதே; நீ வழிபடும் கடவுள் யோகியர்களுக்கெல்லாம் யோகியும் எல்லாம் துறந்த சங்கரரும் ஆகிய உமாபதியே என்பதை மறவாதே. உனது மணமும் உனது செல்வமும் உனது வாழ்வும் உனது ஐம்புல இன்பத்திற்காக அல்ல, உனது தனிப்பட்ட சுய ஆனந்தத்திற்காக அல்ல என்பதை மறவாதே; உனது பிறப்பு, தேவி அன்னையின் பலிபீடத்தில் நீ பலியாவதற்கே என்பதை மறவாதே.

❖ உனது சமூக அமைப்பு அகண்ட அகிலாண்ட அன்னையின் இயல்பின் பிம்பமே என்பதை மறந்து விடாதே. தாழ்ந்த வகுப்பினரும் கல்லாத மூடரும் ஏழைகளும் உனது இரத்தக் கலப்புற்ற சகோதரர்களே என்பதை மறவாதே. ஏ. வீரா துணிவு கொள். தீரனாகு. நீ ஓர் இந்தியனாயிருப்பது பற்றிப் பெருமை கொள். நான் ஓர் இந்தியன், ஒவ்வோர் இந்தியனும் எனது சகோதரன் என்று பெருமையோடு பறைசாற்று.

❖ மூட இந்தியனும் ஏழையும் அநாதையுமான இந்தியனும் பிராமண இந்தியனும் எனது சகோதரனே என்று கூறு. அரையில் கோவணம் மட்டும் கட்டியவனாயினும் நீயும் உரத்த குரலில் இந்தியன் எனது சகோதரனே. இந்தியன் எனது உயிரே. இந்தியாவின் தேவதேவிகள் நான் வணங்கும் கடவுளே ஆவார்.

# இந்தியாவின் சுழலில் சுருண்டது இங்கிலாந்து



இங்கிலாந்து அணிக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்தியா 246 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதனால் 1-0 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலை வகிக்கிறது.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி விசாகபபட்டினத்தில் நடைபெற்று வந்தது.

இந்தியா முதல் இன்னிங்சில் 455 ஓட்டங்கள் குவித்தது. கப்டன் விராட் கோலி (167) மற்றும் புஜாரா (119) அபாரமாக விளையாடி சதம் அடித்தனர். பின்னர் விளையாடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 255 ஓட்டங்களில் 'ஓல் அவுட்' ஆனது. பென் ஸ்டோக்ஸ் 70 ஓட்டங்களும் ஜோரூட், ஜானி பேர்ஸ் டோவ் தலா 53 ஓட்டங்களும் எடுத்தனர். இந்திய அணி தரப்பில் அஸ்வின் 67 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட்டை கைப்பற்றினார்.


இதையடுத்து 200 ஓட்டங்கள் முன்னிலையில் 2 ஆவது இன்னிங்சை விளையாடிய இந்தியா 204 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. விராட் கோலி அதிகபட்சமாக 81 ஓட்டங்கள் எடுத்தார். மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழுந்தனர். இங்கிலாந்து அணியின் பிராட் மற்றும் ரஷித் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளை சாய்த்தனர.


இதனையடுத்து, 405 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் பிற்பகலில் ஆட்டத்தை தொடங்கியது. ஆட்ட நேர இறுதியில் இங்கிலாந்து அணி 2 விக்கெட் இழப்பிற்கு 87 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கப்டன் குக் 54 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில், நேற்று 5 ஆம் நாளில் இங்கிலாந்து அணி தனது ஆட்டத்தை தொடர்ந்து விளையாடியது. தொடக்கம் முதலே மைதானம் பந்துவீச்சுக்கு சாதகமாக இருந்தது. குறிப்பாக சுழற்பந்து வீச்சாளர்கள் அபாரமாக பந்து வீசி விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனால் அடுத்தடுத்து விக்கெட்டுகள் வீழ்ந்த வண்ணம் இருநதன. இங்கிலாந்து அணியின் விக்கெட் கீப்பர் பேர்ஸ்டோவ் மட்டும் அதிகபட்சமாக 34 ஓட்டங்கள் குவித்து ஆட்டமழுந்தார். கடைசியில் இங்கிலாந்து அணி 97.3 ஓவர்கள் மட்டுமே விளையாடி 158 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால் இந்திய அணி 246 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அஸ்வின் மற்றும் புதுமுக வீரர் ஜெயந்த் யாதவ் தலா 3 விக்கெட்டுகளை சாய்த்தனர். முதல் இன்னிங்சில் 167 ஓட்டங்கள் , 2 ஆவது இன்னிங்சில் 87 ஓட்டங்கள் எடுத்த கப்டன் விராட் கோலி ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்படடார்.

இந்த வெற்றியின் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. முன்னதாக இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது குறிப்பிடத்தக்கது. (க)





## நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர்கள் உலக தரம் மிக்கவர்கள்;வில்லியம்ஸன்





நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், கிறிஸ்சேர்ச்சில் இடம்பெற்ற முதலாவது போட்டியில், எட்டு விக்கெட்டுகளால் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றுள்ள நிலையில், தமது வேகப்பந்து வீச்சாளர்களின் திறமை வெளிப்பாடுகள் உலகத் தரம் மிக்கவை என நியூசிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்ஸன் தெரிவித்துள்ளார். நியூசிலாந்து அணி, எவ்வளவு திறமையான வேகப்பந்து வீச்சுக் குழாமைக கொண்டிருக்கின்றது என்பதை அவரின் வார்த்தைகள் வெளிப்படுத்தின.

இந்நிலையில், கருத்துத் தெரிவித்த வில்லியம்ஸன், எந்தவித சந்தேகமுமின்றி, இரண்டாவது இனிங்ஸில் தமது பந்துவீச்சே போட்டியைத் தீர்மானித்த பகுதியாக அமைந்ததாகக் கூறினார். மேலும் கருத்துத் தெரிவித்த அவர், நீண்ட நேரத்துக்கு சரியான இடங்களில் தமது நான்கு வேகப்பந்து வீச்சாளர்களும் பந்து வீசியமை உலக தரம் மிக்கது என்று கூறினார்.(க)

# றொனால்டோ ஹெற்றிக்கோல் அத்லெட்டிகோவை வென்றது றியல்





ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையே இடம்பெற்று வரும் லா லிகா தொடரில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இடம்பெற்ற மட்ரிட் நகர அணிகளின் மோதலில், கிறிஸடியானோ றொனால்டோவின் ஹெற்றிக்கோடு, அத்லெட்டிகோவை, 3-0 என்ற கோல் கணக்கில் றியல் தோற்கடித்தது. 2013 ஆம் ஆண்டுக்குப் பின்னர், லா லிகா போட்டியொன்றில், தனது மட்ரிட் நகர வைரிகளான அத்லெட்டிகோவை றியல் தோற்கடிப்பது இதுவே முதற் தடவையாகும்.

இப்போட்டியில், றியல் மட்ரிட் சார்பாக பெறப்பட்ட மூன்று கோல்களையும் கிறிஸ்டியானோ றொனால்டோவே பெற்றார். போட்டியின் 23 ஆவது நிமிடத்தில் கிடைக்கப் பெற்ற "பிறீ கிக்" மூலம் தனது முதலாவது கோலை றொனால்டோ பெற்றார். இதில், றொனால்டோ அடித்த "பிறீ கிக்" ஆனது அத்லெட்டிகோ மட்ரிட் அணியின் தடுப்புச் சுவர் அமைத்தவர்களில் பட்டே சென்றது. றொனால்டோ பெற்ற இக் கோலுடன் 1-0 என்ற கோல் கணக்கில் முதற்பாதியின் முடிவில் றியல் மட்ரிட் முன்னிலை பெற்றது.

எவ்வாறெனினும் போட்டியின் 12ஆவது. நிமிடத்தில் றொனால்டோ பலமாக தலையால் முட்டிய பந்தொன்றை, அத்லெட்டிகோ மட்ரிட் அணியின் கோல் காப்பாளர் ஜன் ஒப்ளக் மயிரிழையில் தடுத்திருந்தார். இல்லாவிட்டிருந்தால் முதற்பாதியின் முடிவிலேயே 2-0 என்ற கோல் கணக்கில் றியல் மட்ரிட் முன்னிலை பெற்றிருக்கும்.

இருந்தபோதும் போட்டியின் இரண்டாவது பாதியில் பந்துடன் கோல் கம்பத்தை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்த கிறிஸ்டியானோ றொனால்டோ வீழ்த்தப்பட கிடைக்கப் பெற்ற பெனால்டியை, போட்டியின் 71 ஆவது நிமிடத்தில் அவர் கோலாக்கினார். பின்னர், போட்டியின் 77ஆவது நிமிடத்தில், கரித் பேலிடமிருந்து பந்தைப் பெற்ற றொனால்டோ, தனது ஹெற்றிக்கை பூர்த்தி செய்தார். இப்போட்டியில் பெறப்பட்ட கோல்களுடன் சேர்த்து, இப்பருவகால லா லிகா தொடரில் எட்டுக் கோல்களைப் பெற்றுள்ள கிறிஸ்டியானோ றொனால்டோ, லா லிகாவின் இப்பருவகாலத்தில், அதிக கோல்கள் பெற்றவர்கள் பட்டியலில், பார்சிலோனாவின் லியனல் மெஸ்ஸி, லூயிஸ சுவாரஸ் ஆகியோருடன் முதலிடத்தைப் பகிர்கிறார். பார்சிலோனா, மலாகா அணிகளுக்கிடையிலான போட்டியல், இரண்டு அணிகளும் கோலெதனையும் பெறாத நிலையல் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. உடல்நலக் குறைவு காரணமாக, இப்போட்டியில் மெஸ்ஸி பங்கேற்கவில்லை என்பதோடு, இடைநிறுத்தும் காரணமாக லூயிஸ் சுவாரஸ்ும் இப்போட்டியில் பங்கேற்றிருக்கவில்லை.

இதேவேளை, இரண்டு கோல்கள் பின்தங்கியிருந்து மேலதிக நேரத்தில் பெறப்பட்ட கோலோடு 3-2 என்ற கோல் கணக்கில் டெபோர்ட்டிவா லா கொரனா அணியை செவில்லா தோற்கடித்தது.

இப்போட்டிகளின் முடிவில், 30 புள்ளிகளைப் பெற்றுள்ள றியல் மட்ரிட், லா லிகா புள்ளிகள் தரவரிசையில் முதலிடம் வகிப்பதுடன், 26 புள்ளிகளைப் பெற்றுள்ள பார்சிலோனா இரண்டாமிடத்திலும் 24 புள்ளிகளைப் பெற்ற செவில்லா மூன்றாமிடத்திலும் உள்ளது. (க)

## சிம்பாவே - மேற்கிந்திய தீவுகள் மோதிய முத்தரப்பு ஒருநாள் போட்டி சமநிலையில்



சிம்பாவே-இலங்கை-மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் சிம்பாவே அணிக்காகச் சமநிலையைப் பெற்றுக் கொடுத்த நாயகனாக டொனால்ட் டிரிபானோ, தனது கனவு இதுவாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

புலவாயோவில் இடம்பெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி, 50 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, ஒரு கட்டத்தில் 32 பந்துகளில் 8 விக்கெட்டுகள் கைவசமிருக்க 37 ஓட்டங்கள் தேவை என்ற பலமான நிலையில் காணப்பட்ட போதிலும் பின்னர் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. 49 ஆவது ஓவரில் 10 ஓட்டங்கள் குவிக்கப்பட, 5 விக்கெட்டுகள் கைவசமிருக்க, 4 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலைமை மேற்கிந்தியத் தீவுகளுக்குக் காணப்பட்டது.

அந்த ஓவரை வீச அழைக்கப்பட்ட டிரிபானோ, அதற்கு முன்னர் 10ஆவது ஓவரையே வீசியிருந்தார். 50ஆவது ஓவரின் முதலாவது பந்தில் ஓர் ஓட்டம் பெறப்பட்டது. 2ஆவது பந்தில், அதிரடி வீரரான கார்லொஸ் பிறெத்வெய்ட் ஆட்டமிழந்தார். 3 ஆவது பந்தில், அணித்தலைவர் ஜேஸன் ஹோல்டர் அடித்த பந்து, மறுமுனையில் நின்ற ஆஷ்லி நேர்ஸை, ரன அவுட் முறையில் ஆட்டமிழக்கச் செய்தது. 4ஆவது பந்தில் காலில் பட்ட பந்து மூலமாக ஓர் ஓட்டம் பெறப்பட்டது. எனவே, 2 பந்துகளில் 2 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலை ஏற்பட்டது. 5 ஆவது பந்தில் உயர அடிக்கப்பட்ட பந்து மூலமாக, ஓர் ஓட்டம் பெறப்பட, ஓட்டங்களின் எண்ணிக்கை சமனானது. இறுதிப் பந்தை அற்புதமாக வசிய டிரிபானோ, அதிலிருந்து ஹோலடர் ஓட்டங்கள் பெறுவதைத் தடுத்தார். விக்கெட் காப்பாளரிடம் சென்ற பந்தில் ஓட்டங்கள் பெற முயலப்பட, ரன அவுட் பெறப்பட்டது. எனவே, போட்டி சமநிலையில் முடிந்தது.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பெறப்பட்ட 34 ஆவது சமநிலை முடிவு இதுவாகும். இவ்வாண்டில் பெறப்பட்ட, அவ்வாறான 2ஆவது முடிவு. இதற்கு முன்னர் நொட்டிங்காமில், இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையிலான போட்டி, சமநிலையில் முடிவடைந்திருந்தது.

சமநிலை முடிவைப் பெற்றுக் கொடுத்த டிரிபானோ கருத்துத் தெரிவிக்கையில், "என்னைப் பொறுத்தவரை, இது என் கனவு. எனக்கு நானே கதைத்துக் கொண்டிருந்தேன். "சிறிய வயது முதல் நான் காத்திருந்த சந்தர்ப்பம் இது தான்" என நான் சொல்லிக் கொண்டிருந்தேன்" என்று குறிப்பிட்டார். (க)

## த.ம.பேரவையின்...

யாகக் கொண்டு இப்பத்திரிகையாளர் மாநாடு நடைபெறவுள்ளது.

பத்திரிகையாளர் மாநாட்டில் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன் மற்றும் த.வசந்தராஜா ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (செ)

## 2002 # ஊர்காவற்...

மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2002ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி ஊர்காவற்றுறை பகுதிக்கு தேர்தல் பரப்புரைக்காக சென்ற தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மீது ஆயுததாரிகள் சிலர் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இத் தாக்குதலில் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் ஏரம்பு பேரம்பலம் மற்றும் ரெலோ அமைப்பின் ஆதரவாளரான யோகசிங்கம் கமல்ஸ்ரோன் ஆகிய இருவரும் படுகொலை செய்யப்பட்டனர்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அப்போதைய வேட்பாளர்களான மாவை சேனாதிராஜா, எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் ரவிராஜ் உள்ளிட்ட 15க்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர்.

இந்நிலையில் இது தொடர்பான வழக்கு விசாரணையானது திருகோணமலை நீதிமன்றில் விசாரணையில் இருந்து பின்னர் 14 வருடங்கள் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் தற்போது இவ்வழக்கானது 14வருடங்களின் பின்னர் மீண்டும் யாழ்.மேல் நீதிமன்றில் விசாரணைக்காக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டு நேற்றைய தினம் தொடர் வழக்கு விசாரணைக்காக மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இதன்போதே நீதிபதி மேற்படி உத்தரவை பிறப்பித்திருந்தார். நேற்றை வழக்கு விசாரணையின் போது,

குறித்த வழக்கின் நான்கு சந்தேகநபரில் 3ஆம் 4ஆம் சந்தேகநபர்கள் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். இவ் வழக்கு விசாரணையில் குற்றம்சாட்டப்பட்ட 3ஆம் 4ஆம் சந்தேகநபர்கள் சார்பாக சட்டத்தரணி றெமிடியஸ் முன்னிலையாகியிருந்தார். அத்துடன் சட்டமா அதிபர் சார்பில் பிரதி மன்றாதிபதி நாகரட்னம் நிஷாந்தன் முன்னிலையாகியிருந்தார்.

தொடர்ந்த வழக்கு விசாரணையில் இவ்வழக்கின் முதலாம், 2ஆம் சந்தேகநபர்கள் மன்றில் முன்னிலையாகாத நிலையில் அவர்கள் இருவர் சார்பாகவும் தாம் முன்னிலையாகுவதற்கான அனுமதியை சட்டத்தரணி றெமிடியஸ் மன்றில் கோரியிருந்தார்.

தொடர்ந்து பிரதி மன்றாதிபதியான நாகரட்ணம் நிஷாந்தன் மன்றில் விண்ணப்பம் ஒன்றை செய்திருந்தார். இதன்படி குறித்த வழக்கில் இன்றைய தினம் சாட்சிகளாக அழைக்கப்பட்டிருந்த 2ஆவது சாட்சி மரணமடைந்திருப்பதாகவும் அதற்கான மரண பதிவினை பொலிஸார் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்து அதனை மன்றில் சமர்ப்பித்திருந்தார்.

இதேபோன்று முதலாவது சாட்சி வெளிநாடு சென்றிருப்பதாகவும் 3ஆவது சாட்சிக்கான அழைப்புக்கட்டளை சென்றடையவில்லை எனவும் எனவே அவ் அழைப்பு கட்டளையை மீண்டும் அனுப்புவதற்கு மன்று உத்தரவிட வேண்டும் எனவும் அத்துடன் இது தொடர்பான மேலதிக தகவல்களை தாம் மன்றுக்கு வழங்குவதாகவும் தனது விண்ணபப்த்தை மேற்கொண்டிருந்தார்.

இதனை தொடர்ந்து நீதிபதி தனது கட்டளையில், சட்டத்தரணி முதலாம், 2ஆம் எதிரிகள் சார்பாக முன்னிலையாகுவதற்கு கோரியிருந்த விண்ணபப்த்திற்கான அனுமதியை வழங்கியிருந்தார். அத்துடன் சட்டமா அதிபரின் பிரதி மன்றாதிபதி குறிப்பிட்ட விடயங்களை கருத்திலெடுத்து 3ஆவது சாட்சிக்கு மீண்டும் அழைப்புக்கட்டளை அனுப்புவதற்கு உத்தரவிட்டதுடன் அவரை எதிர்வரும் 25 ஆம் திகதி சாட்சியமளிக்குமாறும் பணித்திருந்தார்.

மேலும் முதலாம், 2ஆம் எதிரிகளுக்கு பகிரங்க பிடியாணையை பொலிஸ்மா அதிபர் ஊடாக நிறைவேற்றவும் பணித்திருந்தார். தொடர்ந்து இவ் வழக்கின் 2ஆவது எதிரியாக உள்ள நபர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளாரா? அவ்வாறு இருந்து ஓய்வு ஊதியம் பெறும் காலத்தை முடித்துக்கொண்டாரா? அப்படி முடித்திருந்தால் அவருக்கு கொழும்பு ஓய்வூதிய திணைக்களமானது ஓய்வூதியம் செலுத்துமாக இருந்தால் அதனை உடனடியாக நீதிமன்றின் மறு அறிவித்தல் வரை நிறுத்த வேண்டும் என ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு உத்தரவிட்டிருந்தார்.

மேல்நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்பட்ட ஒரு நபர் நாட்டில் இருந்து தப்பி வெளிநாடு சென்றிருப்பதானது நீதிமன்றத்தினை அவமதிப்பதாகவே மன்று கருதுகின்றது. அத்தகைய ஓர் நபருக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற சலுகைகள் எவையும் வழங்கப்படகூடாது.

அத்தகைய விடயத்தை கருத்தில் எடுத்தே இவ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த நபருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டமை தொடர்பான சகல தகவல்களையும் பதிவாளர் யாழ்.மேல்நீதிமன்றம் என தலைப்பிடப்பட்டு உடனடியாக பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு உத்தரவிட்டிருந்தார்.

அத்தோடு குறித்த இரு சந்தேகநபர்களும எக்காலகட்டத்தில் விமான நிலையத்தின் ஊடாக வெளியேறினார்கள்? அவர்கள் பாரப்படுத்திய கடவுசீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, பயணம் செய்த விமான நிலைய தகவல்கள் அவற்றின் குறிப்புக்கள், அவர்கள் எவ்விதமாக வெளியேறினார்கள், ஏதாவது அமைப்புடன் சேர்ந்தா அல்லது கூட்டங்கள் சம்மந்தமாக வெளியேறினார்களா, அப்படியாயின் அவர்களது பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருந்த கடிதங்கள் உட்பட மேற்குறிய அனைத்து விடயங்கள் தொடர்பான பூரண் அறிக்கையையும் மன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் இவர்கள் அரச கடமையிலா அல்லது யாருடைய சிபாரிசின் ஊடாக வெளியேறினார்கள்.

அதற்கு எந்த தூதுவராலயம் அனுமதி வழங்கியது ஆகிய அனைத்து தகவல்களையும் யாழ்.மேல் நீதிமன்றில சமர்ப்பிக்க வேணடும் என குடிவரவு குடியகல்வு திணைக்கள பணிப்பாளருக்கு உத்தரவிட்டிருந்தார்.

மேலும் குறித்த நபர்கள் மீண்டும் நாட்டுக்கு வருகைதருகின்ற போது கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்து உடனடியாக யாழ்.மேல் நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் என இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்கள பணிப்பாளருக்கு உத்தரவிட்டார். குறிப்பாக இலங்கையானது ஐரோப்பிய நாடுகளுடன் நாடுகடத்தும் ஒப்பந்தங்களை செய்துள்ளது.

இதனை பயன்படுத்தி இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி கொலை செய்தமை மற்றும் கொலை செய்ய முயற்சித்தமை என்ற குற்றச்சாட்டில் தேடப்படுகின்ற இருவரையும் சர்வதேச பொலிஸார் ஊடாக கைது செய்ய வேண்டும் என நீதிபதி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டார்.

அத்துடன் இது விடயங்கள் தொடர்பான பூரண அறிக்கையினை நீதியமைச்சின் செயலாளர் மற்றும் வெளிநாட்டமைச்சின் செயலாளர் ஆகியோர் இரண்டு மாத காலத்துக்குள் யாழ்.மேல் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பிடியாணை உறுதிப்படுத்திய பத்திரங்களை உடனடியாக நீதியமைச்சின் செயலாளருக்கும் வெளிநாட்டமைச்சின் செயலாளருக்கும் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி உத்தரவு பிறப்பித்தார். (செ-4-9)

## எகிறிய வாசுவுக்கு...

விக்கிரமசிங்க யார் வேண்டுமானாலும் பதவியில் இருங்கள் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என பிரதமர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் பிரதமர் பதில் அளிக்கையில்,

தூரநோக்குடன் கொண்ட அபிவிருத்தி திட்டத்தின் அடிப்படையிலேயே நாம் செயற்பட்டு கொண்டு வருகின்றோம். முறையாக தெரிந்து கொள்ளாமல் கருத்து வெளியிட வேண்டாம். நாட்டை அபிவிருத்தி செய்வது மட்டுமே எமது நோக்கமாகும், மத்திய வங்கியில் இடம் பெற்ற ஊழல்கள் தொடர்பில் தனிப்பட்டவர்கள் விசாரணை நடத்தவில்லை. நேர்மையான விசாரணைகளே நடைபெறுகின்றது.

கூட்டு எதிர்க்கட்சிக்கு உள்ளேயும் பிளவு ஏற்பட்டு இரண்டு மூன்று பிரிவுகள் இருக்கின்றது. முதலில் அதனை சரி செய்து கொள்ளுங்கள். அதேபோன்று கடந்த காலத்தில் இருந்து தொடர்ந்து வந்த மிகப்பெரிய கடன் தொகையினால் அவற்றினை நிவர்த்தி செய்து நாட்டை முன்னேற்ற வேண்டிய கடமை எமக்கு உண்டு. சீனாவா? இந்தியாவா? முக்கியம என நாங்கள் முடிவு செய்யவில்லை, யார் மூலம் நாட்டை அபிவிருத்தியடைய செய்ய முடியும் என்பது பற்றி மட்டுமே நாம் சிந்தித்து செயற்படுகின்றோம்.

இப்போது அமெரிக்கா ஜனாதிபதி மாறிவிட்டார், முன்னர் அமெரிக்கா கூறியவை தற்போதைய நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு விடலாம். இது போன்று பல மாற்றங்கள் ஏற்படும். இவை அனைத்தையும் தாண்டி நாம் அபிவிருத்திப் பாதையில் செல்ல வேண்டிது மட்டுமே முக்கியம். வீணாக குழப்பங்களை ஏற்படுத்த எவரும் முயல வேண்டாம் எனவும் பிரதமர் கருத்து தெரிவித்தார்.

அப்போது சபையை குழப்பும் விதமாக கருத்து வெளியிட்டு வந்த கூட்டு எதிர்க்கட்சியினர் பிரதமரின் இந்த பதில்களைத் தொடர்ந்து அமைதியாக இருந்தனர். (செ-11)

## மழையுடன் கூடிய...

விட்டு மழை அல்லது இடியுடன் கூடிய மழை இன்னும் இரு நாட்களுக்கு பரவலாக பொழியக்கூடும் என வானிலை அவதான நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் போது சில பிரதேசங்களில் 75 - 100 மில்லி மீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என வானிலை ஆய்வாளர் உதேனி வீரசிங்க தெரிவித்துள்ளார். (செ)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# இன நல்லுறவுகளை சீர்குலைக்கும் விகாராதிபதியை இடமாற்றுங்கள்

## சுமணரத்ன தேரர் குறித்து ஜனாதிபதிக்கு கடிதம்

மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரரை, வேறு ஒரு விகாரைக்கு இடமாற்றுமாறு ஜனாதிபதிக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் தலைவர் ஏ.எம்.எம்.தௌபீக் மற்றும் செயலாளர் எல்.எல்.எம்.சபீல் நழீமி ஆகியோர் கையொப்பமிட்டு இக்கடிதத்தை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பியுள்ளனர்.

இக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிவரும் ஒரு தாய் நிறுவனமாகும்.

இப் பிரதேசத்தில் இன நல்லுறவைக் கட்டியெழுப்புவதிலும், இனங்களுக்கிடையிலான சக வாழ்வு வேலைத்திட்டங்களை மேற்கொள்வதிலும் இப்பிரதேச மக்களின் சமூக,சமய, கலாசார,பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாப்பதிலும் முன்னின்று உழைத்து வரும் நிறுவனமுமாகும்.

தற்போது நிலவும் நல்லாட்சி அரசாங்கத்தில், இன நல்லுறவு, இனப் பிரச்சினைக்கான தீர்வுத்திட் டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்ற வேளையில் ஆங்காங்கே சிறுபான்மையினருக்கு எதிரான சம்பவங்களும் நடைபெற்று வருவதையும் தாங்கள் அறிவீர்கள்.

குறிப்பாக மட்டக்களப்பு மங்கள ராமய விகாராதிபதி சுமணரத்ன தேரர் இப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கெதிராக மிகக்கேவலமான முறையில் தன்னுடைய செயற்பாடுகளை அண்மைக்காலத்தில் அரங்கேற்றி வருவதை தாங்கள் அறிவீர்கள்.

கடந்த யுத்தகாலத்தில் இந்நாட்டில் மூவின மக்களும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, தற்போது தான் இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான சந்தர்ப்பத்தில், மேற்படி விகாராதிபதியின் மோசமான செயற்பாடுகள் மூவின சமூகத்தினரையும் பாதிக்கும் என நாம் அஞ்சுகிறோம்.

கிராமசேவை உத்தியோகத்தர், பொலிஸ் அதிகாரிகள் போன்றோரை அவர்களது பணியை நிறைவேற்ற விடாமல் இடையூறு செய்வதையும்,மோசமான வார்த்தைகளை பிரயோகிப்பதையும் கைகலப்பில் ஈடுபடுவதையும் செய்திகள் ஊடாக தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

எந்த சமூகத்திலிருந்து இன நல்லுறவுக்கான அச்சுறுத்தல் வருமாக இருந்தாலும் அதற்கெதி ரான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியது தங்களின் தார்மீகக் கடமையாகும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தி லும் இவ்வாறான செயற்பாடுகள் மிக உச்ச நிலையில் இருந்ததை தாங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்.

எனவே, இன நல்லுறவை சீர்குலைக்கும் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி சுமனரத்ண தேரரை, வேறு ஓர் இடத்துக்கு இடமாற்றி, சமூகங்களுக்கிடையிலான உறவுகளைப் பேணக்கூடிய ஒருவரை மட்டக்களப்பு மங்களராமய விகாரைக்கு விகாராதிபதியாக நியமிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ)

# சம்பந்தனின் பாதுகாப்பை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி, நீதி, சட்டம், ஒழுங்கு அமைச்சுக்களின் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.


இது தொடர்பில் அவர் தனதுரையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், "எதிர்க்கட்சித் தலைவருக்கு இதுவரை உத்தியோக பூர்வ வாசஸ்தலம் வழங்கப்படவில்லை. தொடர்ந்தும் அந்த வாசஸ்தலம் வழங்குவதற்கு தாமதிக்காது உடன வழங்கப்பட வேண்டும்.

நாட்டில் தற்போதைய நிலைமையில் கூலிக்கு கொலை செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

அண்மையில் கூட இருவர் மீது காரில் வந்து பகிரங்கமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டிருகின்றது. இது போன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றிருக்கின்றன.

ஆகவே எதிர்க்கட்சித் தலைவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். அவருக்குரிய உத்தியோக பூர்வமான வரப்பிரசாதங்களை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

# ம(றை)றக்கப்பட்டது "மாமனிதர்"...




யுள்ளன.

இவ்வாறு மாமனிதர் பட்டத்தை நீக்கியதன் மூலம் சிலை அமைப்போடு தொடர்புடைய அனைவரும் தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்றை மறைக்கும் அரசியலை முன்னெடுக்க தயாராகியுள்ளனர் எனவும் சமூக வலைத்தளங்களில் குற்றச்சாட்டுக்கள் பலமாக முன்வைக்கப்படுகின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் நிதியுதவியில் சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக, அமரர் ரவிராஜின் உருவச்சிலை ஒன்று அமைக்கப்பட்டது.

இந்த சிலை திறப்பு விழா நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிலையை திறந்து வைத்திருந்தார். இவ்வாறு திறந்து வைக்கப்பட்ட சிலையில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில், கௌரவ அமரர் நடராஜா ரவிராஜ் என்றே பொறிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரால் வழங்கப்பட்ட "மாமனிதர்" பட்டத்தை பொறிக்காமல் தவிர்த்துள்ளனர். தேசியம் சார் நின்று செயற்பட்டவர்களில் சொற்ப அளவிலானோர்க்கு "மாமனிதர்" பட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் வழங்கி கௌரவித்தனர்.

இந்த கௌரவமே தமிழீழ அரசியல் வரலாற்றில் மிக உயர்ந்த கௌரவமாக கருதப்படுகின்றது. இவ்வாறு வழங்கப்பட்ட கௌரவத்தை நீக்குவது என்பது மிகப் பெரிய வரலாற்றுத் தவறாகும்.

உடனடியாக குறித்த கல்வெட்டு நீக்கப்பட்டு மாமனிதர் என விளிக்கும் கல்வெட்டு பொருத்தப்பட வேணடும் என சமூக வலைத்தளங்கள் ஊடாக பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-4)

# போக்குவரத்து குற்றங்...

லாமை, சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்துதல், மது போதையில் வாகனம் செலுத்துதல், இடப்புறமாக முந்திச் செல்ல முற்படுதல், அதிக வேகத்துடன் வாகனம் செலுத்தல், பாதுகாப்பற்ற வகையில் ரயில் கடவைகள் ஊடாக பயணித்தல், அனுமதிப்பத்திரம் இல்லாத ஒருவருக்கு வாகனத்தை செலுத்துவதற்கு இடமளித்தல் ஆகிய ஏழு வகையான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த யோசனை போக்குவரத்து அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின் போது சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது. (செ-11)

# 138.3 மில்லி...

வித்தார்.

குடாநாட்டில் பருவ மழை ஆரம்பித்துள்ள நிலையில், பல பாகங்களில் கடும் மழை பெய்து வருகிறது.

கடந்த 20ஆம் திகதி காலை 8.30 மணியில் இருந்து 21ஆம் திகதி காலை 8.30 மணிக்கு உட்பட்ட 24 மணித்தியாலங்களில் மழைவீழ்ச்சியின் அளவு 138.3 மில்லிமீற்றராக பதிவாகியுள்ளது. கடந்த 19ஆம் திகதி காலை 8.30 மணியில் இருந்து 20ஆம் திகதி காலை 8.30 மணிவரைக்கும் 97.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தது.

கடந்த 12ஆம் திகதியில் இருந்து நேற்று வரைக்கும் 328.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (செ-11)

# 14 இராணுவத்தினருக்கும்...

ராஜன் ஆகிய இளைஞர்கள் இருவர கடந்த 1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி மயிலங்காட்டு பகுதிக்கு உறவினருடைய திருமணத்துக்காக சென்றுள்ளனர்.

அவர்கள் சிறுப்பிட்டி, புத்தூர் வாதரவத்தையில் அமைந்திருந்த இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் அச்சுவேலி பொலிஸாரால் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த இராணுவ முகாமில் கடமையாற்றிய 16 இராணுவ வீரர்களுக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு கொலைக் குற்றம் சாட்டப்பட்ட பின்னர் 16 இராணுவத்தினரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

சுமார் 18 வருடங்களின் பின்னர் சட்டமா அதிபரினால் இவ்விடயம் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு மேற்குறித்த இரு இளைஞர்களையும் கொலை செய்ததன் அடிப்படையில் குறித்த 16 இராணுவ வீரர்களுக்கு எதிராக வழக்கை தொடர்ந்து நடத்துமாறு யாழ் நீதவான் நீதிமன்றுக்கும் அச்சுவேலிப் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் குறித்த 16 இராணுவ வீரர்களுக்கும் யாழ் நீதவான் நீதிமன்றால் அழைப்பு கட்டளை அனுப்பப்பட்டது. அதன் படி 16 இராணுவத்தினரில் 14 இராணுவத்தினர் மன்றில் ஆஜராகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் இருவர் கடந்த யுத்தத்தில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் குறித்த வழக்கு யாழ் நீதவான் நீதிமன்றில் நடைபெற்று வரும் நிலையில் மூன்றாவது தடவையாக குறித்த வழக்கு நேற்றையதினம் மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த 14 பேரும் நேற்றைய தினம் ஆஜராகியிருந்த நிலையில் இவர்களுக்கு பிணை வழங்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்றுக்கு இல்லை என தெரிவித்து 14 இராணுவத்தினரையும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். (செ-9)

# இனப்பிரச்சினை தீர்க்கப்படாதவரை...

அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில், "நாட்டின் ஆட்சியாளர்கள் கண்ணிருந்தும் குருடர்களாக, காதிருந்தும் செவிடர்களாக, அறிவிருந்தும் முட்டாள்களாக இருப்பதே இனப்பிரச்சினைத் தீர்வை இழுத்தடிப்பதற்கான காரணங்களாக அமைந்துள்ளன.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படாத வரை, நாட்டில் வேறெந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படப் போவதில்லை.

இந்த நாட்டின் தீர்க்கப்படாத ஒன்றாக இருந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினை தான் இந்த நாட்டில் மனிதவுரிமை மீறல்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கு பிரதான காரணமாக இருந்து கொண்டிருக்கின்றது. போர்க்குற்றம், அரசியல் படுகொலைகள், சட்டவிரோத கொலைகள், மனிதக் கடத்தல்கள், காணாமலாக்குவது போன்ற அனைத்துமே நேரடியாகவோ மறைமுகமாகவோ நடந்தேறியிருப்பதற்கு இனப்பிரச்சினை தீர்க்கப்படாமலிருப்பதுதான அடிப்படைக் காரணமாக அமைந்திருக்கின்றது என்பதனை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டின் இனப்பிரச்சினையோடு சம்பந்தமில்லாமல் நடக்கும் குற்றச்செயல்கள், ஒரு ஐந்து வீதமாகத்தான் இருக்கும்.

யுத்தத்தின் போது இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூறலைக் கோரியிருக்கும் அதேவேளை, இனப்பிரச்சினைத் தீர்வையும் வலியுறுத்த வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

பொறுப்புக்கூறலை மாத்திரம் நாம் வலியுறுத்திக் கொண்டு ஒரு பக்கமாகச் செல்வோமானால், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வென்பது எட்டாக்கனியாகி விடும். அப்படி நடந்தால் புதிய பிரச்சினைகள் தோற்றம் பெற ஆரம்பித்து விடும்.

ஆகவே பொறுப்புக்கூறல் கோரிககை மற்றும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வலியுறுத்தல் இரண்டையும் சமாந்தரமாகக் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு நமக்குண்டு.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெற்றுக்கொண்டு சாணக்கியமாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிமைகளைப் பெறுவது எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனின் வழிமுறை என்றால், எனது வழி சகவாழ்வு வழி.

பிரபாகரனின் வழிமுறை ஆயுதம் ஏந்திப் போராடும் வழிமுறையாக இருந்தது. அப்பொழுது அனைத்து தமிழ் மக்களும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அவருக்குப் பினனால் இருந்து ஆதரவு வழங்கிக் கொண்டு இருந்தார்கள். அதை நாமெல்லோரும் நன்கு அறிவோம்.

பிரபாகரன் கையாண்ட ஆயுதமேந்திய வழி மூலம் தீர்வு கிடைக்கும் என்று நம்பினார்கள். ஆனால், தீர்வு கிடைக்கவில்லை. அந்த வழி தோல்வியடைந்த ஒன்றாக மாறிவிட்டது. அது தோல்வியடைந்து விட்டது என்று கூறுவதுகூட சங்கடமாக இருக்கின்றது. ஆயினும், அந்தத் தோல்வியை நாம் பக்குவமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆயுதப் போராட்ட வழிமுறை நம் மத்தியிலே மன வடுக்களை ஏற்படுத்தியிருப்பது உண்மை. ஆகையினால் இந்த யதார்த்தத்தை புரிந்து கொண்டு நாம் நம்மை சுயவிமர்சனம் செய்வதற்கு ஒரு போதும் தயங்கக் கூடாது என மனோ கணேசன் மேலும் தெரிவித்தார். (செ-11)

## இறைச்சி கோழி விற்பனை

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படும்.

சுத்தம் செய்யப்பட்டது
1 Kg 400/= மட்டும்
V.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
0778689500
(6656)

# மாகாண...

கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுளளது.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் காணப்படும் குழு மோதல்கள் மற்றும் இனவாத செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இச்சந்திப்பில் விரிவாக கேட்டறியவுள்ளார்.

இச்சந்திப்பில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் ஹமட் உள்ளிட்ட ஏனைய ஏழு மாகாணங்களின் முதலமைச்சர்களும் கலந்துக் கொள்ளவுள்ளனர். (செ-11)

# தமிழீழ விடுதலைப் புலிகளை...

தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடி உயிர்நீத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மாவீரர்களை நினைவுகூருவதற்கு தமிழ் மக்களுக்கு சகல உரிமைகளும் இருப்பதாக வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அறிவித்துள்ளமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கடந்த சனிக்கிழமை, யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின போது, எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாவீரர் தினத்தை நல்லூரில் அனுஷ்டிக்கப்போவதாக அறிவித்ததுடன், இதற்கான அனைதது உரிமையும் தமக்கும் தமிழ்மக்களுக்கும் இருப்பதாகவும் கூறியிருந்தார்.

இந்நிலையில் நாட்டில் இடம்பெற்ற போரின் போது உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க போராளிகளை நினைவுகூர அனுமதி இல்லை என்று ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள அரசாங்கத்தின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன,

இதனையும் மீறி எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க முற்பட்டால் அவர்களுக்கு எதிராக கடும்சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் ருவான் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். (செ)

## அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550*/= Kg
DELIVERY IN 3 - 5 DAYS

மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: 0768226243
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• நெல்லியடி • வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-6359)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.